Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 வெள்ளி - 12 13 - 19 - மே - 2005



## நவம் அறிவுக்கூட ஆண்டு நிறைவில்...



## படித்ததில் பிடித்தது

### நேரம் ஒதுக்குங்கள்

வாழ்க்கையை முழுவதும் அனுபவிக்க
நேரம் ஒதுக்குங்கள்
இது வெற்றியின் இரகசியம்.

சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது செயற்றிறனின் பிறப்பிடம்.

வாசிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது மெய்யறிவின் மூலதத்துவம்.

விளையாடுவதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது இளமையின் இரகசியம்.

நட்பாக இருக்க நேரம் ஒதுக்குங்கள்
இது மகிழ்ச்சியின் பிறப்பிடம்.

கனவு காண்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது ஆன்மாவை நட்சத்திரங்களுடன்
பின்னிப் பிணைக்கின்றது.

இறைவனுக்காக நேரம் ஒதுக்குங்கள்
இது ஒன்றே வாழ்வின் நிலையான முதலீடு.

தியானம் செய்வதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது மனவலிமையின் எழுச்சி.

பிரார்த்தனை செய்ய நேரம் ஒதுக்குங்கள்
இறைவனுடன் உங்கள் உள்ளத்தில் சங்கமம்.

அன்பு செலுத்த நேரம் ஒதுக்குங்கள்
இது வாழ்க்கையின் உரிய இன்பம்.

வேலை செய்வதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது வெற்றிக்கான வெகுமதி.

தமிழாக்கம்-இ.ரஜித்
ஆக்கம்- லோங் ஃபெலோ (long felloa)

### புரிதலும் புரிதலும்

ஒரு காரியத்தை புரிதலுக்கும்
அதன் கருத்தை புரிதலுக்கும்
எத்தனை பெரிய வேறுபாடு.

வாவிக்கரையில்
வலம் வரும் காற்றில்
என்னதான் ஒட்டிக்கிடக்கிறதோ

எப்படித்தான் முடிகிறதோ
இந்த மீன்களால்
ஒரேயடியாக ஒப்பாரிபாட.

இதயத்துடிப்புகளை
நிறுத்திவிட்டு விழுந்து கிடக்கும்
வெற்றுத் தோட்டாக்களுக்கு
புரியவா போகிறது
தான் புரிந்தது பற்றி.

இயந்திரங்களையும்
விட்டு விடுவோம்
இவற்றால் தான் எத்தனை குடும்பங்கள்
வாழ்கிறதோ.

பாவம் இயக்கியவனின்
இதயத்திற்கும் மூளைக்கும்
எத்தனை தூரமோ.

இந்த புரிதலுக்கும்
புரிதலுக்குமான வேறுபாடு
எப்போதாவது புரியட்டும்
பரவாயில்லை
இழப்புக்கள்
வரும் பொழுதுதானே
இறுகிக் கொள்கிறோம்.

வெடித்துச் சிதறவும்
தயாராக.

தமிழாக்கம்-இ.ரஜித்
ஆங்கிலத்தில்:- மேவின்ராவ்

# காரசாரம்

மனிதனுக்கான, இல்லை உயிர்களுக்கே ஏன் உலகுக்கே நீர் முக்கியம். இதையே "நீரின்றி அமையாதிவ்வுலகு" என்றனர்.

'ஆறில்லா ஊருக்கு அழகுபாழ்' என்றனர்.

"விசும்பின் துளி வீழினல்லால் பசும்புல் தலை காண்பதரிது" விசும்பின் துளியைச் சேகரித்துக் காலம் பூராவும் நீர்ப்பஞ்சம் இல்லாமல் செய்வதற்காக பண்டைய மன்னர்கள் குளங்களை வெட்டுவித்தார்கள். குளங்களிலிருந்து நீர்ப்பாசன முறைகளை நுட்பமாக வகுத்து விவசாயத்தை ஊக்குவித்தனர். விளைநிலங்களைப் பெருக்கிப் பஞ்சத்தை ஓட்டினர். அந்த வகையில் மின்னேரியா, பராக்கிரமசமுத்திரம், திசவாவி, கலாவேவ என சிங்கள மன்னர்கள் உயிரைக் கொடுத்தும் குளங்களைக் காப்பாற்றிய வரலாறுண்டு. குளக்கோட்டன், முத்தரையன், எல்லாளன் போன்றோரால் வவுனிக்குளம், முத்துஐயன்கட்டு போன்ற குளங்களும் அதை அடியொற்றியதாய் கட்டுக்கரைக்குளம், பாவற்குளம், இரணைமடு எனப்பல குளங்களும் உண்டு. கரியாலை நாகபடுவான், அக்கராயன், கனகராயன், பாண்டியன் நைனார்மடு, உடையார்கட்டு போன்று தோற்றுவாய்களைப் பெயரில்கொண்ட குளங்களும் இங்குண்டு. குளங்கள்தான் வன்னிப்பகுதியின் பெருஞ்செல்வம். இரணைமடு, முத்துஐயன் கட்டு, கட்டுக்கரை என்பனவும் அவற்றின் துணைக்குளங்களும்தான் இன்றைய போர்ச்சுழலிலும் வன்னி மக்களின் வயிற்றுப்பசியைத் தீர்க்கின்ற அமுத கலசங்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்தக் குளங்களில் இரணைமடுக்குளம் விமான இறங்குதளமாகவும் மாறி வரலாற்றில் இடம் பிடித்துவிட்டது. நிற்க,

இரணைமடுத் தேக்கத்தின் சிறு வழங்கற்குளமான கிளிநொச்சிக் குளம், கிளிநகரின் குடிநீர்த்தாங்கியையும் தன்னகத்தே கொண்டுள்ளது. தவிரவும் பரவிப்பாஞ்சான், மருதநகர், மூன்றாம்வாய்க்கால் போன்ற இடங்களின் நெற்[illegible]கைக்கும் நீர் வழங்குகிறது. பரவி[illegible]ாஞ்சான் வாய்க்கால் நீர் ஏராளமா[illegible] நகரத் தேவைகட்கும் நகரக் கழிவுகளைக் கடத்தும் ஊடகமாகவும், தொடர்ந்து உருத்திரபுரம் வரையான நெற்செய்கைக்கும் உதவுகின்றது. ஏராளமான மக்களின் நீராடும் துறையாகவும் இப்பகுதி வாழ் மக்களின் கால்நடைகளுக்கான மேச்சற் தரவையாகவும் இக்குளமே விளங்குகிறது.

குளங்களின் அலைகரையில் வலப்புறம் சுடலையும், இடப்புறம் குடிமனையும் அமைக்கப்படுவதே மன்னர் காலம் முதல் ஏற்படுத்தப்பட்டுள்ள மரபு. இக்குளத்தைத் தவிர வன்னியின் உட்கிராமங்களினுள் சென்று ஆய்வு செய்யலாம். ஆனால் இங்கில்லை என்றால், அவை புதைந்துபோய்விட்டன என்பதுதான் உண்மை.

புதுக்குடியிருப்பு முல்லைத்தீவின் ஒரு கிராமநகரம். இங்குள்ள நகரம் கந்தன் கோவிலிலிருந்து சுப்பிரமணிய வித்தியாசாலை அடங்கலாகக் குளம்தான். அதே முருகன் கோவிலின் திருப்பணிச்சபையினரால் கோவில் அயல் வளவில் சிறுகீற்றுக் கொட்டகையில் ஆரம்பிக்கப்பட்டது சுப்பிரமணியரின் பெயரிலேயே அமைந்த அப்பாடசாலைதான் சுப்பிரமணிய வித்தியாசாலை. இன்றும் சுற்றுப்புற வெள்ளம் குளத்தை நோக்கியேவருவதை நாம் காண்பதுடன் வீதிகள் பெரும்பாலும் மணலாகிப்போவதையும் காண்கிறோம். புதுக்குடியிருப்பின் உண்மையான குடியிருப்பு வேணாவில்தான். புதுக்குடியிருப்பு மறைந்துபோன குளத்தின் வலதுகரைச் சுடலையே இன்றுமுள்ளது.

முள்ளியவளையின் இராசதானியும் குடிமனையும் குமாரபுரம், நீராவிப்பிட்டி, பூதன் வயல்பகுதிதான் குளத்தின் ஒரு மருங்கே காட்டா(து) விநாயகர் ஆலயமும் வலது கரையில் கற்பூரப்புல் மயானமும், குளத்தின் கீழ்க்கரையில் ஊற்றுச்சுனைகளும் இருந்தன என்பது வரலாறு. குளத்தைப் படிப்படியாக நிரப்பிக் கட்டிய குடியிருப்பே தற்போதைய முள்ளியவளை. அக்கிராமத்தின் வெள்ளம் வீதிகளை மேலும் மேலும் அரித்துச் செல்வதை இன்றும் காண்கிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக குளங்கள் மூடப்பட்டதால் கிணற்று நீரின் ஊற்று மிக ஆழத்துக்குப் போய்விட்டதுடன் கோடையில் மிக மோசமான தண்ணீர்ப் பஞ்சமும் ஏற்படுகிறது. இவை உதாரணம்தான். இன்று கிளிநொச்சிக் குளத்துக்கும் இதேகதி வரப்போகிறது. குளம் படிப்படியாக மூடப்பட்டு வருகின்றது. கிளிநொச்சியின் குடிநீராக இந்தக் குளத்து நீரே வழங்கப்படவுள்ளது.

கோடிக்கணக்கில் பணச்செலவும், உழைப்பும் இதற்கெனச் செலவிடப்படுகின்றது. ஆனால் குளத்து நீர் இல்லாமற்போகும் அபாயம் மட்டுமல்ல இன்னும் மோசமாக பாதிப்புக்களை கிளிநொச்சி மக்கள் எதிர்கொள்ளவுள்ளனர். குறிப்பான மழைநீர் குளத்தைச் சென்றடையும் வழிகள் அடைக்கப்பட்டு விட்டன. மத்தியகல்லூரி முதல் ஒக்ஸ்பாம் நிறுவனம் வரையும் சிங்களப் பாடசாலைக்கும் அப்பாலிருந்தும் வரும் நீர் இரத்தினபுரம் ஆற்றினூடாகக் குளத்தை வந்தடையும். பண்பாட்டு மண்டபம் தொடங்கி தமிழீழ வைப்பகம் வரையான மழை வெள்ள நீர் காவல்துறை வீதியூடாக வேனும் வளவுகளின் ஊடாகவேனும் பாய்ந்து பின்புறம் குளத்தினுள் கலந்து வடிந்துவிடும். இனி வடியாது. காரணம் குளத்தின் கரையோடு மதில்களும் பெரும் வீடுகளும் கட்டப்படுகின்றன. இவ்வீடுகளின் பாதுகாப்புக்காக வேறிடங்களிலிருந்து மண் அகழப்பட்டுக்கொண்டு வந்து கொட்டி நிரப்பப்படுகிறது. நான் வாழ்ந்தால் போதும் என நினைப்பவர்கள் சிந்திக்கவேண்டும். கிளிநொச்சிக் குளத்தின் கட்டுக்குப்பின்னால் குடியிருக்கும் குடிசை வாசிகளின் மலசல கூடம் அந்தக் குளந்தான். அதேபோன்று அலைகரைக்குடியிருப்பாளர்களின் மலசலகூடக் கழிவுகளும் இதே குளத்தில்தான். யாழ். பத்திரிகையொன்றின் அண்மைய செய்தியொன்று மல்லாகம், சுன்னாகம் போன்ற பகுதிகளில் குடிநீர் கிணற்று நீரில் மலசலக்கழிவுகள் கலந்திருப்பதை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர் எனத் தெரிவித்த போதும் எனக்கு ஆச்சரியம் வரவில்லை.

இது வெகுவிரைவில் கிளிநொச்சி நகர குடிநீர் விநியோகத்திலும் வருவது சாத்தியமே. பிறகென்ன அதிசயம்.

நாட்டின் பொருண்மிய வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டிய கடமை நாட்டுமக்கள் ஒவ்வொருவருடைய கையிலும் தான் உள்ளது. அப்படியிருக்க குளங்களை மூடி வீடு கட்டும் செயலை எப்படி அனுமதிக்கலாம். உண்மையில் குடியிருக்க ஒரு சாண் நிலமற்றவர்கள் வந்து குடிசை போடுகிறார்கள் என்றால் அதை மன்னிக்கலாம். அல்லது இதனால் நாட்டுக்கு விளையப்போகும் நாசத்தைத் தெரியாமல் ஒருவர் வீடுகட்டினாலும் அதை மன்னிக்கலாம். மன்னித்தாலும் அவருக்கு ஒரு மாற்றிடத்தையே காட்டவேண்டும். ஆனால் இந்தக்குளத்தை மூடி வீடுகட்டுவோர் உண்மையில் வசதியற்றவர்கள் அல்ல. ஏற்கனவே சொந்த நிலம் வீடு எல்லாம் உள்ளவர்கள்தான். அவர்கள் நிலையான வீடுகளைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

கிளிநொச்சி ஒரு விவசாய நகரம். இன்னும் சிறுகாலத்துள் கால்நடைவளர்ப்பவர்களுடைய மேச்சற்றரவை முற்றாக மூடப்பட்டுவிட்டால் கால்நடைகள் உணவுக்காக விவசாய நிலங்களைப் பாழாக்குதலும் நிகழவே செய்யும். வீடற்ற நிலமற்ற மக்களுக்கு வன்னியில் வேறிடங்களில் நிலமேயில்லையா? எதிர்காலத்தில் நகரத்தில் விழும் மழை வெள்ளத்தை எங்கே அனுப்பப்போகிறார்கள். மாசு கலந்த குடிநீரை மக்களுக்கு வழங்கப்போகிறார்களா பட்டுச்சேலைகட்டும் கனவில் மக்கள் திளைக்க இங்கே கோவணம் களவு போகிறதே. உண்மையில் இப்பொழுதெல்லாம் நகர வீதிகளில் கால்நடைகள் அலைவதும் சனங்களின் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகத் திரிவதும் கூட மேய்ச்சல் தரவைகளின் இழப்பால் தான். இது முற்றாகத் தடுக்கப்படத் தவறினால் கிளிநொச்சி ஒரு நோயாளியாக மாறிவிடுவதை யாராலும் தடுக்க முடியாது. சட்ட விரோதமாகப் போடப்படும் ஒரு குடிசையை அகற்றுவதில் தீவிரம் காட்டும் அதிகாரிகள் எவரும் சட்ட விரோதமாக எழும் மாளிகைகளைத் தடுப்பதில்லை. ஏன்? ஏன்? ஏன்! கிளிநொச்சிக்குளம் களவுபோவதைத் தடுக்கவில்லையே ஏன்? ஏன்? ஏன்?



"ஆறில்லா ஊருக்கு அழகுபாழ்"

மாயா

# சிவராமுக்குப் பின் தமிழ் ஊடகங்கள்



நிலாந்தன்

> தராகி என்ற பெயர் ஒரு ஆப்கானிய போராளியிடமிருந்து பெறப்பட்ட ஒரு பெயர் மட்டுமல்ல; மரபு சாரா கிளர்ச்சிப் பாரம்பரியம் ஒன்றுக்கூடாக வந்த ஒரு மேதை ஊடக ஆளுமை மட்டுமல்ல; இவற்றுக்குமப்பால் கிழக்கில் இருந்து வந்த மரபு சாராப் புலமைப் பாரம்பரியத்தில் தோன்றிய மிக அரிதான ஒரு புத்திஜீவி சிங்கள மக்களோடு பேசத் தெரிந்தெடுத்த புனைபெயர் அது.

கொழும்பில் சிவராமின் சாவீட்டில் தமிழ் ஊடகவியலாளர்கள் ஒப்பீட்டளவில் குறைவாகவே வருகை தந்ததாகச் சொல்லப்படுகிறது. சிவராமுக்கு நெருக்கமான ஒரு இளம் மீடியாக்காரர் சொன்னார்... சாவீட்டில் சரிநிகர் ஆசிரியர் சிவகுமார், சண்டேரைம்சின் உதவி ஆசிரியர் ராஜ்பால் அபயநாயக்க உற்பட சில நெருங்கிய நண்பர்களும் என்.ஐ.பி காரர்களும்தான் அதிக நேரம் பிரசன்னமாகியிருந்ததாக.

மட்டக்களப்பில் சிவராமின் இறுதிச்சடங்குகளின் போதும் கொழும்பில் இருந்து தமிழ் ஊடகக்காரர்கள் என்று இருவர்தான் வந்திருந்தார்களாம். ஒருவர் சிவகுமார் மற்றவர் ஒரு இளம் ஊடகக்காரர். மற்றும்படி சிங்களவர் தரப்பில் இருந்து சுனந்த தேசபிரிய, மஞ்சுள வெடிவர்த்தன போன்றோர் உட்பட யுத்திய, ராவய, ஹிருபோன்ற மாற்று ஊடகங்களைச் சேர்ந்த ஊடகக்காரர்கள் ஒரு வாகனத்தை ஒழுங்குசெய்து வந்திருந்தார்களாம்.

சிவராம் கொல்லப்பட்ட செய்தியை மகாராஜா நிறுவனத்தின் தமிழ் ஒளிபரப்பாகிய சக்தி ரீ.வி பெரிது படுத்தவில்லையாம். மறுநாள் செய்தித்தாள் கண்ணோட்டத்தில் சிவராம் பற்றி வந்த செய்திகளைச் சொன்னதோடு சரியாம். அதேசமயம் சக்தியின் சகோதர ஒளிபரப்பாகிய சிரச ரீ.வியில் குட்மோர்னிங் சிறிலங்கா நிகழ்ச்சியில் சண்டேலீடரின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க தனக்குத் தரப்பட்ட 15 நிமிடங்களையும் சிவராமுக்கே செலவழித்திருந்தாராம்.

மேலும், சிலநம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து கசியும் சிலதகவல்களின்படி சிவராமின் கொலை பற்றிய புலனாய்வுக்கட்டுரைகளை அதிகம் பிரசுரிக்க வேண்டாம் என்று கொழும்பில் உள்ள சில மீடியாக்களின் மேலிடம் தமது ஆசிரியபீடங்களுக்கு அறிவுறுத்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

அதாவது, யுத்த நிறுத்தம் வந்ததிலிருந்து கொழும்பு மைய தமிழ் மீடியாத் தளத்தில் பொங்கிபிரவகித்த உற்சாகமும் துணிச்சலும் இனி சிவராமின் முடிவோடு திடீரென்று வற்றிச்சென்றுவிடுமா? என்று கேட்கத் தோன்றுகிறது.

கொழும்பில் வாழும் தமிழ் பிரபல்யங்கள் என்று பார்க்கும்போது பேராசிரியர் சிவத்தம்பியளவுக்கு அல்லது சிலசமயங்களில் அவரைவிட கூடுதலான அளவுக்கு சர்வதேச அரங்கில் கணிப்புக்குரிய ஒருவராக புகழுடன் காணப்பட்டவர் சிவராம். அவரையே சுட்டுப் புதருக்குள் வீசலாம் என்றால் மற்றவர்கள் எம்மாத்திரம்?

தராகி என்ற பெயர் ஒரு ஆப்கானிய போராளியிடமிருந்து பெறப்பட்ட ஒரு பெயர் மட்டுமல்ல; மரபு சாரா கிளர்ச்சிப் பாரம்பரியம் ஒன்றுக்கூடாக வந்த ஒரு மேதை ஊடக ஆளுமை மட்டுமல்ல; இவற்றுக்குமப்பால் கிழக்கிலிருந்து வந்த மரபு சாராப் புலமைப் பாரம்பரியத்தில் தோன்றிய மிக அரிதான ஒரு புத்திஜீவி சிங்கள மக்களோடு பேசத்தெரிந்தெடுத்த புனைபெயர் அது.

ராஜ்பால் அபயநாயக்க , லசந்த விக்ரமதுங்க, அஜித் சமரநாயக்க, தயான் ஜெயதிலக்க போன்ற எல்லோருமே இதை ஒப்புக் கொள்கிறார்கள் தராகி நமது காலத்தில் வாழ்ந்த வித்தியாசமான ஒரு புத்திஜீவி என்பதை.

இலங்கைத்தீவின் ஆங்கில, தமிழ் ஊடகப்பரப்பில் அவரையொத்த ஆளுமை எதுவும் இதுவரை தோன்றியதில்லை. அது மட்டுமல்ல மட்டக்களப்பின் புலமைப்பாரம்பரியத்திலும் அவரைப்போல ஒரு புத்திஜீவி முன்பு காணப்பட்டதில்லை. கிழக்கிலிருந்து தோன்றிய மிக அரிதான ஒரு ஆளுமை அவர். இது பற்றி நண்பர் கருணாகரனுடன் கதைத்துக்கொண்டிருந்தபோது அவர் கூறியதுபோல் கிழக்கில் விபுலானந்தருக்குப் பின் தோன்றிய புத்திஜீவிகளில் தராகி மிகவும் பிரகாசமானவராகத் தோன்றுகிறார்.

இத்தகையதொரு மேதாவிலாசத்தை தீர்த்துக்கட்டுவதன் மூலம் அவரைக்கொன்றவர்கள் ஒன்றை உணர்த்த விரும்புகிறார்கள். அது என்னவெனில்... சிங்கத்தின் குகைக்குள் நின்றுகொண்டு புலி அரசியல் செய்யமுடியாது என்பதுதான்.

முன்பு குமார்பொன்னம்பலத்தை கொன்றபோதும் அவர்கள் இதைத்தான் உணர்த்தமுயன்றார்கள். குமாரைக் கொல்வதற்கு அவர்கள் அப்பொழுது பாதாள உலகக்கும்பல்களைப் பயன்படுத்தினார்கள். ஆனால், இப்பொழுது எல்லாவற்றுக்கும் ஒரு கருணா கிடைத்திருக்கிறார். கருணாவை வைத்துக்கொண்டு எதையும் செய்யலாம். யாரையும் கொல்லலாம். தமிழர்களை தமிழர்களே கொல்லுகிறார்கள் என்று கதையை முடித்துவிடலாம்.

எனவே சிவராமுக்கு நடந்ததை குமார் பொன்னம்பலத்துக்கு நடந்ததன் நீட்சியாகவே பார்க்கவேண்டும். 1998 இலேயே தமிழ் நெற்றுக்கு எதிரான பிரச்சாரத்தை அரசாங்கத்துக்குச் சொந்தமான ஐ.ரி.என் தொலைக்காட்சி செய்திருந்ததை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

குமார் பொன்னம்பலம் முதலாவதாக ஒரு அரசியல்வாதி. இரண்டாவதாக ஒரு வழக்கறிஞர். ஆனால் சிவராம் முதலாவதாக ஒரு ஊடகக்காரர். அதேயளவு முக்கியத்துவத்துடன் அவர் ஒரு புத்திஜீவி.

எனவே அவர் மீது தீர்க்கப்பட்ட வேட்டு எனப்படுவது தமிழ் ஊடகத்துறையின் இதயத்தில் வீழ்ந்த அடிமட்டுமல்ல. அதைவிட முக்கியமாக அது புரட்சிகரமான தமிழ் புத்திஜீவித்துவத்தின் இதயத்தில் வீழ்ந்த ஓர் அடியும்.

பொதுவாக மரபு சார் புலமைத்துவம் எனப்படுவது புரட்சிகரமானதாக அமைவது குறைவு. பதவி சுகம், மேற்படிப்புக்கள், பாதுகாப்புப் பிரச்சினைகள்போன்ற பல நிலையான நலன்களின் நிமிர்த்தம் மரபு சார் புலமையாளர்கள் அதிகாரத்தை வெளிப்படையாக எதிர்க்கத் தயங்குவதே பொதுஇயல்பாகக் காணப்படுகிறது. தமிழிற்கும் இது பொருந்தும்.

அருந்தலான சில புறநடைகள் தவிர பொதுவாக தமிழ் புலமை மரபு எனப்படுவது மிதவாதிகளை அனுசரித்துப்போன அளவுக்கு ஆயுதபாணிகளை அனுசரித்துப்போகவில்லை.

> இலங்கைத்தீவின் இனப் பிரச்சினையில் உண்மையின் பாற்பட்டும் நீதியின் பாற்பட்டும் சிந்திக்கும் எவரும் ஒரு கட்டத்தில் ஒரு பேருண்மையை உணரத் தலைப்படுவர். அது என்னவெனில்... தமிழர்களின் விடுதலைப்போராட்டம் சரியானது என்பதும் சிங்களத்தலைவர்களை நம்பமுடியாது திருத்தவும்முடியாது என்ப தும்தான்.

இத்தகைய ஒருபொதுப் போக்கின் பின்னணியில் முற்றிலும் புறநடையாக சிவராம் எழுச்சிப் பெற்றார். மரபு சார் கல்வியை இடையில் முறித்துக்கொண்டு கிளர்ச்சிப் பாரம்பரியம் ஒன்றுக்குள் போனவர்,அந்த கிளர்ச்சிப் பாரம்பரியத்தால் செதுக்கப்பட்டு ஒரு அறிவு ஜீவியாக உருவாகினார்.

ஒரு மரபு சாரா புத்திஜீவியாக அவர் காணப்பட்டதால் வழமையான மரபுசார் தமிழ் புத்திஜீவித்துவத்தின் பொதுஇயல்புகளுக்கு முரணாக துணிச்சலாக சிங்கள புத்திஜீவித்துவத்தின் உணர்ச்சிப் புள்ளிகளில் கைவைத்தார். ஈழப்போரில் தமிழ் தரப்பு சாட்சியாகவே அவர் சிங்கள புத்திஜீவிகள் மத்தியில் அறிமுகமானார்; பிரபல்யமானார். புலிகளுக்கு எதிரான புளொட் அமைப்பில் இருந்து வந்தவர் அவர் என்ற முற்கற்பிதம் காரணமாக சிங்கள ஊடகத்துறையும் புத்திஜீவிகளும் அவரை மனத்தடைகள் இன்றி உள்வாங்கினர். ஆனால், அவர்களால் தராக்கியை உள்வாங்க மட்டுமே முடிந்தது. அவரை தமக்குள் கரைத்துவிட முடியவில்லை.

எந்த உண்மைகளுக்குச் சாட்சியாக நின்று சிவராம் பிர பல்யம் அடைந்தாரோ அதே உண்மைகள் அவரை உரிய இடத்திற்கு அழைத்துச் சென்றபோது, அவர் அவருக்குச் சரியெனப்பட்ட ஒரு தீவிர நிலைப்பாட்டை அவருக்கேயான கிறுக்குத் துணிச்சலோடு எடுத்தபோது அதை சகித்துக்கொள்ளமுடியாதவர்கள் அவரைக்கொன்றுவிட்டார்கள்.

“உண்மையை நீ அறிவாய் உண்மை உன்னை விடுதலை செய்யும்” என்றொரு பைபிள் வசனம் உண்டு. சிவராமும் எந்த உண்மைகளை அறியத்தலைப்பட்டாரோ அந்த உண்மைகளாலேயே கவரப்பட்டு அவருடைய கடைசிக்காலங்களில் அந்த உண்மைகளாலேயே வழி நடத்தப்பட்டு உரிய இடத்தை வந்தடைந்தார்.

இலங்கைத்தீவின் இனப் பிரச்சினையில் உண்மையின் பாற்பட்டும் நீதியின் பாற்பட்டும் சிந்திக்கும் எவரும் ஒரு கட்டத்தில் ஒரு பேருண்மையை உணரத் தலைப்படுவர். அது என்னவெனில்... தமிழர்களின் விடுதலைப்போராட்டம் சரியானது என்பதும் சிங்களத்தலைவர்களை நம்பமுடியாது திருத்தவும்முடியாது என்பதும்தான்.

சிவராமும் அந்த உண்மைகளுக்கு நெருக்கமாக வந்துவிட்டிருந்தார். இது அவரை ஒரு ஊடகக்காரனுக்கு இருக்கவேண்டிய சாட்சி நிலையிலிருந்து விலகி பங்காளியாக நின்று எழுதும் ஒரு தீவிர நிலைக்கு இட்டுச் செல்லலாயிற்று. அவருடைய கடைசிக் காலத்து தமிழ் கட்டுரைகளில் இதைத் துலக்கமாகக் காணலாம். தமிழ் மக்கள் என்று வரவேண்டிய இடங்களில் எல்லாம் அவர் நாங்கள் எமது போன்ற வார்த்தைகளை பயன்படுத்தத் தொடங்கியிருந்தார்.

இதுவே அவர் கொல்லப்படவும் காரணமாயிற்று. ஆனால், அவரைக் கொன்றவர்கள் இரண்டு முக்கிய விசயங்களை மறந்துவிட்டார்கள். முதலாவது, வரலாறு வெற்றிடங்களைவிடுவதில்லை என்பது. மற்றது தமிழர்கள் தமது நியாயத்தைபேச முடியாத ஒருநிலை தோன்றும் போதெல்லாம் குண்டுகளால்தான் பேசி வந்திருக்கிறார்கள் என்பது.

# நறுக்கென...

## சந்திரிகாவுக்கு ஜே.வி.பியின் புதிய சூழ்ச்சிப்பொறி



கடைசியில் ஜே.வி.பியினர் சனாதிபதியை கைவிட்டுவிடத் தீர்மானிப்பார்கள் எனக் கருதினால் கதை வேறுவிதமாக மாறிவிட்டது போலுள்ளது. அதாவது அவரைக் கைவிட்டு ஆட்சியை குழப்புவதைவிடவும், ஆட்சியைக் கைவிடாது சனாதிபதியின் கழுத்தை நெரிப்பது சாலச்சிறந்தது என்று தீர்மானித்துவிட்ட ஜே.வி.பியினர் அதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக செயற்படவும் தொடங்கிவிட்டார்கள்.

கிட்டத்தட்ட பழிக்குப்பழிவாங்கும் சித்திரவதைப் படலம் என்றுதான் இதனைக் கூறவேண்டும்.

உரலுக்கு ஒருபக்கம் இடி என்றால் மத்தளத்திற்கு இரண்டுபக்கமும் அடி என்பார்கள். சந்திரிகா அம்மணியின் நிலை இப்போது மத்தளத்தின் நிலைதான்.

ஒரு புறம் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் சர்வதேச சமூகம் தொடர்ச்சியாகக்கொடுத்துவரும் அழுத்தத்தினால் குழம்பிப்போயுள்ள அம்மணியார் சும்மா பேருக்கு என்றாலும் அப்படியொன்றை உருவாக்கி உலகத்தையும் விடுதலைப்புலிகளையும் தற்காலிகமாக சமாளித்துவிட்டு சர்வதேச சமூகம் வழங்கும் நிதியையும் பெற்றுக்கொண்டபின் அதன் செயற்பாடுகளை இழுத்தடித்து ஸ்தம்பிக்கச்செய்து செயலற்றதாக்கிவிட்டு அதற்கான காரணத்தையும் ஏதோஒரு வழியில் புலிகள் மீது சுமத்திவிடலாம் என ஒரு மூலோபாயத்தை வகுத்து செயற்பட முனைய கிணறுவெட்ட பூதம் புறப்பட்ட கதையாகிவிட்டது.

"ஜே.வி.பியோ, ஹெல உறுமயவோ... எவர் எதிர்த்தாலும் ஆட்சி கவிழ்ந்து எனது பதவியே போனாலும் கூடப்பரவாயில்லை பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தியே தீருவேன்" என சூளுரை செய்துதான் ஒரு கண்ணியமான பதவி ஆசையற்ற அரசியல்வாதியென உலகிற்குக் காட்ட சந்திரிகா அம்மையார் கூறினாரோ இல்லையோ...

ஜே.வி.பி புதிய அரசியற் சூழ்ச்சிப் பொறியொன்றை சந்திரிகாவுக்கு வைத்தேவிட்டது.

சர்வதேச அழுத்தத்தில் இருந்து சந்திரிகா தப்பமுனைய, இந்தியாவிலிருந்து எதிர் அழுத்தமொன்றை பிரயோகிக்கவைத்து அம்மணிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டார்கள்.

பொதுக்கட்டமைப்பால் இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு பாதிப்பும் அபாயமும் ஏற்படும் என பிரசாரம்செய்து, இந்தியாவைக் குழப்பி உருவேற்றி பொதுக்கட்டமைப்பு தொடர்பான தமது அதிருப்தியை இலங்கைக்கு தெரிவிக்க வைத்துவிட்டார்கள்.

1971இல் இந்தியாவை வைத்தே ஜே.வி.பியினரை அழித்தொழிக்க வியூகமிட்டு செயற்பட்ட சிறிமாவோ பண்டாரநாயக்கவின் செயலுக்கு அவரது மகளை அதே இந்தியாவை வைத்தே பழிவாங்கத் தொடங்கியுள்ளார்கள் என்கிறார் ஒரு கொழும்பு பத்திரிகையாளர்.

இந்தியா இப்படி ஒரு அழுத்தத்தை தருமென எதிர்பார்த்தேயிராத அம்மணியார் வாரிச்சுருட்டி டெல்லி பறந்துசென்று இந்தியாவைச் சமாளிக்கும் நிலை உருவாகிவிட்டது.

சர்வதேச சமூகத்தையும் இந்தியாவையும் ஒரே நேரத்தில் சமாளிக்கமுடியாது திணறும் சந்திரிகாவுக்கு இப்படி ஒரு நிலையை ஜே.வி.பி ஏற்படுத்தியதற்காக அவர்களுக்கு ஐ.தேகட்சியினர் மனதிற்கு நன்றி தெரிவிக்கின்றனர்.

## ஓய்வற்ற முயற்சி...!



நோர்வேயின் சிறப்புத்தூதுவர் எரிக்சொல்ஹெய்மை நினைக்கும் போது பிரமிப்பாகவும்... கவலையாகவும் இருக்கிறது.

அவரது ஓய்வற்ற விக்கிரமாதித்த முயற்சி பிரமிக்கவைக்கிறது.

அதேசமயம் இலங்கைப் பிரச்சினையில் அவர் ஏதாவது ஒருவகையில் சமாதானத்தை ஏற்படுத்த அவர் படும்பாடு கவலையாகவும் இருக்கிறது. சமாதான முயற்சிகள் கடந்த ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியின்போது ஆரம்பிக்கப்பட்டபோது அவரைப் போன்று சந்தோசமான உற்சாகமான மனிதரை வேறெங்கும் காணமுடியாதிருந்தது.

ஒவ்வொரு சுற்றுப் பேச்சுவார்த்தையாய் முன்னேற முன்னேற அவர் முகத்தில் தெரிந்த நம்பிக்கை ஒளி இலங்கையரசு குறித்தும் பேரினவாதிகளின் குறுகிய மனோபாவம் குறித்தும் அவரது அறியாமையின் அப்பாவித்தனத்தை வெளிப்படுத்துவதாகவே இருந்தது.

போகப்போகப் பிரச்சினையின் யதார்த்தம் புரியப்புரிய அவரது புன்முறுவலை மீறிய நெற்றிச்சுருக்கங்கள் அவரது உளக்கிடக்கையை கோடிட்டுக்காட்டியது.

இப்படியொரு இடியப்பச் சிக்கலான நெருக்கடியை தென்னிலங்கையின் பேரினவாத அரசியல் தலைமைகளின் நியாயத்தன்மையை நிராகரிக்கும் போக்கை ஜே.வி.பி-ஹெலஉறுமய போன்ற கட்சிகளின் அரசியல் அநாகரிக நடவடிக்கைகளை அவர் உலகெங்கும் சந்தித்திருக்கவே முடியாத தனது சமாதான முயற்சியில் இரண்டடி முன்னேறினால் நான்கடி பின்தள்ளும் கொழும்பின் அரசியல் சூழலில் அவரது விடாமுயற்சி (அப்படித்தான் சொல்லவேண்டியுள்ளது) ஒஸ்லோ, கொழும்பு, டெல்லி, லண்டன், ரோக்கியோ, வோஷிங்டன் என தொடர் பறப்பினை மேற்கொள்ளவைத்துள்ளது.

-எல்லாம் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவது என்றவரால்... (இந்த முயற்சிகளின் பின்னால் வேறு சில சர்வதேச அரசியல் நோக்கங்களும் இருக்கக்கூடும்... அதுபற்றி நமக்கெதற்கு)...!

அதுவும் நிரந்தர சமாதானம், அரசியல்தீர்வு என்பதில் தொடங்கி இடைக்கால நிர்வாகத்திற்கு இறங்கி-இப்போது பொதுக்கட்டமைப்பில் வந்து இறங்கியுள்ள நிலையில் சனாதிபதியை ஓரளவுக்குச் சமாளித்துவரும் நிலையில் இந்தியாவின் தலையீடு சொல்ஹெய்மை தலைசொறியவைத்துள்ளது நிஜமே...

இந்தியாவின் புதிய அழுத்தத்தை-பொதுக்கட்டமைப்பில் புதிய குழப்பத்தை ஏற்படுத்தும் முனைப்பை சமாளிக்க சந்திரிகா டில்லி செல்லமுன் சொல்ஹெய்ம் அங்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கைப் பிரச்சினை வெறும் வடக்கு கிழக்கு பிரச்சினையல்ல. அது இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் மேலாதிக்க நிறுவமுனையும் நாடுகளின் போட்டாபோட்டி பிரச்சினையாகிவிட்ட நிலையில்... சொல்ஹெய்ம் இந்தியாவை எப்படித் திருப்தி செய்யப்போகிறார். பாவம் அவரது முயற்சிகள்... அவரை ஒரு விக்கிரமாதித்தனாகவே எண்ணவைக்கிறது...!

## சங்கரியாரின் "புரோக்கர்" பணி!



சேதி தெரியுமோ!

இப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தனிப் பெரும் தலைவரான ஆனந்தசங்கரியாரின் நெருங்கிய தோழமைக்குரியவர்களாக இருப்பவர்கள் அந்த சாயம்போன சிவப்புத் தோழர்களான ஜே.வி.பியினர்தான்.

அடிக்கடி அவர்களைச்சந்தித்து ஆலோசனை பகிர்ந்து கொள்ளும் சங்கரியார், சமாதான முயற்சிகளை பொதுக்கட்டமைப்பு விவகாரத்தை முழுமூச்சுடன் எதிர்க்கும் ஜே.வி.பி யினரைப் பாராட்டும் அவர் அதற்காக அயலகத்தின் முழு ஆதரவையும் பெற்றுத்தருவதாக உறுதி கூறியுள்ளாராம்.

சோமவன்ச அமரசிங்கவின் டெல்லி விஜயங்களின் பின்னணியில் சங்கரியாரின் 'புரோக்கர்' பணி அதிகமிருப்பதாகக் கூறப்படுகிறது.

இது ஒருபுறமிருக்க...

இந்தியாவால் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் சங்கரி-கருணா தலைமையிலான தமிழர் விரோதக் கூட்டணியினரின் சார்பில் ஒரு தமிழ் வாரப்பத்திரிகையொன்றை பிரசார-உளவியல்-யுத்த நடவடிக்கையின் ஓரம்சமாக ஆரம்பிக்க ஆலோசிக்கப்பட்டு வருகிறதாம்.

இந்தியாவில் இருந்து வண்ணமயமாய் அச்சிட்டு இங்கு கொண்டுவந்து விநியோகிக்கலாம் என்பது சங்கரியார் ஆலோசனையாம்.

பெயர் உதயசூரியன் என்பதுதானாம்!

அது இருக்கட்டும்...

இலங்கை விவகாரத்தில் இந்தியாவை மீண்டும் களமிறக்கவைக்கும் முயற்சியில் இங்குள்ள ஜே.வி.பியினர் தீவிரம்காட்டி வருகின்றார்கள். என்பது வெளிப்படையாகி வருகிறது.

சங்கரியார் ஊடாகவே சங்கதிகள் யாவும் நடக்கிறதாம்.

ஜே.வி.பியினரால் முன்வைக்கப்படும் முக்கிய விடயம் இதுதான்.

ராஜீவ்-ஜே.ஆர் உடன்பாட்டின்போது வடக்கு கிழக்கு இணைந்த ஒரே மாகாணமென்று குறிப்பிட்ட விடயத்தில் இந்தியா மாற்றஞ்செய்து இரு மாகாணங்களையும் தனித்தனி மாகாணங்களாக்கி இருமாகாண சபைகளாக்கி தேர்தல் நடாத்தி பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்பதாகும்....

சங்கரியார் தலை சொறியும் விடயம் இதுதானாம்.

இந்தியாவின் பாதுகாப்புக்கும் நலனுக்கும் எது நல்லதோ அதையே இந்தியா செய்யும் என்கிறாராம்...

இப்போதைய சங்கரியாரின் பெருங்கவலை-

ஊடகவியலாளர் சிவராம் படுகொலையை கையாண்ட விதம்தானாம்... புலிகள் மீது சந்தேகம் வரும் வகையில் திட்டமிட்டு செய்திருந்தால் சர்வதேச ரீதியில் அவர்களுக்கு பெரும் நெருக்கடிகளை உண்டாக்கியிருக்கலாம் என நினைக்கிறாராம்...

போற போக்கைப் பார்த்தால் அந்தப்பொறுப்பை தன்னிடம் தந்திருக்கலாம் என்று சொன்னாலும் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

## அதிகரிக்கும் பலவீனங்கள்...!



அந்தப் புகழ்பெற்ற (!?) அதாவது சந்தேகத்தின்பேரில் விசாரணைக்கென அழைத்துச் (பிடித்துச்)செல்லப்பட்ட தமிழர்களை அதுவும் அப்பாவி இளைஞர் யுவதிகள் பலர் கொடூரமான சித்திரவதைகளின் பின்னர் காணாமல் போனமைக்குக் காரணமான கொழும்பு புலனாய்வுப்பிரிவு அதிகாரியான இன்ஸ்பெக்டர் ஜெயரத்தினமும் கடைசியில் காணாமல் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு சில வாரங்களாகிவிட்டன...

ஆரம்பத்தில் இந்தா... அந்தாவென பரபரப்பு தேடல் நடவடிக்கைகளில் தீவிரம் காட்டிய பாதுகாப்பு துறையினரின் செயற்பாடுகள் சப்தமின்றி ஓய்ந்துபோய்விட்ட சூழலில் ஏனைய கொழும்பில் புலனாய்வுப்பிரிவுகளில் பணியாற்றும் தமிழ்பேசும் (முஸ்லிம்களுட்பட) புலனாய்வுத்துறை அதிகாரிகளை பயப்பீதி பற்றத் தொடங்கியுள்ளதாம்!

இதேவேளை ஜெயரத்தினத்தின் சகாவும், இரு தடவைகள் கொலைமுயற்சியில் இருந்து தப்பியவரும் பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தில் கைதாகும் அப்பாவித்தமிழ் மக்களை விசாரணை என்ற பெயரிலான அடியுதைவதைகளின் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதில் அதிக சாதனைபடைத்து அரச விருதுகளை வென்றவருமான நிலாப்தீன் என்பவர் வெளிநாடொன்றிற்கு தப்பியோடிவிட்டதாகக்கூறும் கொழும்புச்செய்திகள் அவரைத் தொடர்ந்து வேறும்பல அதிகாரிகள் மூட்டை முடிச்சுக்களைக் கட்டத் தொடங்கிவிட்டதாகவும் அறியவந்துள்ளது.

அண்மைக்காலத்தில் சனாதிபதி அம்மணியாரின் விசேட ரகசிய பணிப்பின் பேரில் ஜே.வி.பியினரின் செயற்பாடுகள் குறித்தும், அதன் முக்கியஸ்தர்களின் நடமாட்டம் குறித்தும் புலனாய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த அதிகாரிகள் பலருக்கு 'தேசபக்த அமைப்பு' என்ற பெயரில் அனாமதேய மிரட்டல்கள், கொலை அச்சுறுத்தல்கள் தொடர்வதால் சொல்லாமல் கொள்ளாமல் அயலக நாடுகளுக்கு 'விடுப்பில்' தப்பியோடும் நிலையும் உருவாகிவருகிறதாம்!

மற்றுறொருவிடயம், பாதுகாப்புப் படைக்குள் எல்லாமட்டங்களிலும் தனது செல்வாக்கை வேரூன்றச் செய்துவிட்ட ஜே.வி.பியினர் படைத்தரப்பினுள் புதிதாக தங்களின் ஆட்களை அதிகளவில் இணையவைத்ததன் மூலம் மறைமுக ஜே.வி.பி ஆதரவுப் படையொன்றை ஆயுதபாணிகளாக வலுப்படுத்தி நிலைப்படுத்தியுள்ளனராம்.

அவர்கள் படையுயர்அதிகாரிகளுக்குப் பணியாதவர்களாகவும் ஜே.வி.பியினரின் உத்தரவுகளுக்கு உள்ளிருந்தே செயற்படுபவர்களாகவும் இயங்கிவருவதாகவும் தெரிகிறது...

இது மற்றொரு ஆயுதக் கிளர்ச்சியை தாம் அரசியல்ரீதியாக தமது அபிலாசைகளை எட்டமுடியாதுபோகும் பட்சத்தில்-ஆரம்பிக்க தயார் நிலையில் ஆயுத பாணிகளை அரச பாதுகாப்பு கட்டமைப்புக்கள் வைத்திருக்கும் நடவடிக்கை என்றும் கூறப்படுகிறது.

ஆக அம்மையாரின் பாதுகாப்பு படைக்கட்டமைப்புக்குள் பலவீனங்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ள விடயம் வெளியே கசியத்தொடங்கிவிட்டது.

செங்குட்டுவன்

மாறிமாறி ஆட்சிக்கு வருகின்ற சிங்கள அரசுகளினால் வடக்கு கிழக்கில் உள்ள காடுகள் அழிக்கப்பட்டு வந்தன. இதனை அப்போது தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்களும் கவனத்தில் எடுக்கவில்லை. இதனால் சிறிலங்கா அரசு தான் விரும்பியபடி வடக்கு கிழக்கில் உள்ள காடுகளை அழித்து அதன் வளங்களை அபகரித்தனர். இதைவிட 1956ஆம் ஆண்டு தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் 77வீதமாகக் காணப்பட்ட காடுகள் பின் 1993ஆம் ஆண்டு18.06 வீதமாகக் காணப்பட்டது.

இதற்குக்காரணம் சிறிலங்கா அரசினால் அபிவிருத்தி என்ற போர்வையில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் மற்றும் சிங்கள குடியேற்றங்களே. மேலும் இக்காலப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள்

குள் செயற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றபோது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலுள்ள மக்கள் எங்களிடம் வந்து முறையிடுகின்றார்கள். எப்படியென்றால் தங்களின் பிரதேசங்களில் கண்டபடி காடுகள் மற்றும் பயன்தரு மரங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு வருகின்றன. எனவே நீங்கள் வந்து எங்கட பிரதேசங்களிலும் உங்களின் செயற்பாடுகளை ஆரம்பியுங்கள் என்று. இதன் பின்புதான் நாங்கள் திருகோணமலை மாவட்ட அரசியல்துறையினினூடாக மக்களின் ஒத்துழைப்புடன் அங்கு செயற்பட்டு வருகின்றோம்.

**இராணுவக் கட்டுப்பட்டுப் பகுதியில் சிறிலங்கா அரசினது வனவள திணைக்களம் இருக்கத் தக்கதாக உங்களின் செயற்பாடுகள் எப்படி உள்ளது?**

இலுப்பை போன்ற மரங்களை மீள் நடுகை செய்துவருகின்றோம். இன்றுவரை 3000 ஏக்கர் பரப்பளவில் 10 லட்சம் மரங்களை மீள்நடுகை செய்துள்ளோம்.

இதனைவிட தேசிய ரீதியாக சட்டங்கள் மூலம் அதாவது எங்களுடைய வனவளத்தைப் பாதுகாக்க தமிழீழ சட்டக்கோவையின் தேச வனவளச் சட்டத்தின் படியும் நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு வனவளம் தொடர்பாகவும் அதன் பயன்பாடு மற்றும் வனவளம் இன்றிப் போனால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான பிரச்சாரங்கள் மூலமும் கிராமிய மற்றும் மாவட்டங்கள் தோறும் குழுக்களை அமைத்து வனவளத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

இதைவிட தமிழீழ நிதித்துறை என்பதை ஆவண ரீதியாக உறுதிப்படுத்தவேண்டும். ஆவணங்கள் இல்லாது விடில் அந்தந்த கிராம அலுவலர்மூலம் உறுதிப்படுத்தி பின்னர் எமது பிரதேச செயலகங்களில் அதற்கென உள்ள விண்ணப்பப் படிவத்தினை பூர்த்திசெய்ய வேண்டும். இதைவிட என்ன தேவைக்காக மரம் வெட்டப்போகின்றார் என்பதை எமக்கு தெரிவிக்கவேண்டும். அதற்குப் பின் அந்தத் தேவை நியாயமானதா என்பதனை வனவளப்பாதுகாப்புப் பிரிவினர் உறுதிசெய்த பின்னர் வெட்டுவதற்கான அனுமதி வழங்கப்படும்.

ஆனால் வெட்டிய மரத்தினை அவர் தங்களின் இடங்களில் வைத்து அரியமுடியாது. எமது மரக்காலைக்கு எடுத்துவந்து அங்குவைத்துத்தான் அரியவேண்டும். ஏன் நாங்கள் இப்படிச் செய்கின்றோம் என்றால் ஒரு

**உதவிகள் செய்கின்றனவா?**


இதுவரைக்கும் எங்களுக்கு எவராலு எவ்வித உதவிகளும் செய்யப்படவில்லை. அரசும் சரி, ஆர்வலர்கள், சர்வதேச நிறுவனங்கள் என எவரிடமும் இருந்தும் எவ்வித நிதியும் எமக்குக் கிடைக்கவில்லை. நாம் தடை செய்யப்பட்ட மரங்களை தவிர ஏனைய மரங்களை எமது விநியோக நிலையங்கள் மூலம் மக்களுக்கு விற்பனை செய்து வருகின்றோம். இதன் மூலம் கிடைக்கும் நிதியினை முற்றுமுழுதாக மீள் வனமாக்கல் செயற்பாட்டுக்கே பயன்படுத்துகின்றோம்.

**வனவிலங்குகள் மற்றும் பறவைகள் தொடர்பாக எவ்வாறான நடைமுறைகளை பின்பற்று கின்றீர்கள்?**

பன்றி, முயல் உடும்பு இவற்

# அரசின் திட்டமிட்ட நடவடிக்கையால் பெருமளவு காடுகள் அழிந்துவிட்டன

## தமிழீழ வனவளப்பிரிவு திட்டமிடல் அலுவலர் சி.திருநாவுக்கரசு



மூலம் ஏற்பட்ட அழிவுகள், மனித தலையீடுகள் இவ்வாறான நிலைமைகள் தொடர்ந்து ஏற்பட்டால் தமிழீழத்தின் எதிர்காலம் மிக மோசமான பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டி வரும் என்பதனை நன்குணர்ந்த தேசியத் தலைவர் அவர்கள் எமது எல்லைக்குட்பட்ட வனவளத்தை பாதுகாக்கவென வனவளப்பாதுகாப்பு பிரிவு என்ற இந்த தனியான அமைப்பினை ஆரம்பித்தார்.

இவ்வாறு வனவளப்பாதுகாப்பு பிரிவின் மீள் வனமாக்கல் பகுதியின் திட்டமிடல் அலுவலர் சி.திருநாவுக்

சிறிலங்கா அரசினது திணைக்களம் அங்கு பெயரளவில்தான் இயங்குகின்றது. நாங்கள் அந்த அதிகாரிகளோடு கதைத்தபோது அவர்கள் எமக்குக் கூறியது "தங்களை இப்போது அரசு கவனிப்பதில்லை




கரசு அவர்கள் தமிழீழ வனவளப் பாதுகாப்புப்பிரிவின் செயற்பாடுகள் குறித்து நாம் அவரை சந்தித்தபோது தெரிவித்தார். அவருடனான சந்திப்பின் விரிப்பு வருமாறு,

**தமிழீழ வனவளப்பாதுகாப்புப் பிரிவின் நிர்வாகக் கட்டமைப்பினை சுருக்கமாகக் கூறுங்கள்?**

ஆரம்பகாலத்தில் வனவளப் பாதுகாப்பு மையம் என இயங்கி வந்த அமைப்பு பின்னர் மாவட்டங்கள் தோறும் மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களை நிறுவி எமது செயற்பாட்டினை விரிவுபடுத்தி வருகின்றோம். தற்போது ஆறு மாவட்டச் செயலகங்களும், 28 பிரதேச செயலகங்களும் இயங்குகின்றன. இதனை இரணைமடுவில் இருக்கின்ற நடுவப்பணியகம் நிர்வகித்து வருகின்றது.

**இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவின் செயற்பாடு எப்படி இருக்கின்றது?**

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி என்ற வகையில் திருகோணமலை மாவட்டத்தில்தான் எங்களின் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம். இதற்குக் காரணம் நாங்கள் எங்கள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்

யென்றும், போதியளவு வசதிகளைச் செய்துதருவதில்லையென்றும் இதனாலேயே தாங்கள் அலுவலகங்களிலேயே முடங்கி விடுவதாகவும் கூறுகின்றனர். இதைவிட மற்றொரு பிரச்சினை லஞ்சம். இதை பயன்படுத்தி அங்குள்ள சிலர் தாங்கள் விரும்பியபடி காடுகளை அழித்து வந்தனர். தற்போது நாங்கள் தலையிட்டு நிறுத்தியிருக்கின்றோம். இதனால் ஒரு சிலர் எங்கள் மீது வெறுப்பாக இருந்தனர். ஆனால் தற்போது நாங்கள் எங்களின் நியாயமான பிரச்சினைகளை எடுத்துக்கூறியதன் பின் அவர்களது நிலைமையும் மாறிவிட்டது. திருகோணமலையை பொறுத்தவரை குச்சவெளி, திரியாய், தம்பலகாமம் போன்ற இடங்களில் எங்கட செயலகங்கள் இயங்குகின்றன.

**வன வளத்தினை பாதுகாக்க உங்களால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளை கூறுங்கள்?**

வனவளத்தினைப் பாதுகாக்கவென நாங்கள் மீள் வனமாக்கல் முறையை பின்பற்றி வருகின்றோம். அதாவது காடுகளை மீள உருவாக்குதல் இதற்கு நாங்கள் தேக்கு, சதக்கு, சமண்டலை, புளி, மலைவேம்பு, வேம்பு, சித்திரவேம்பு,

**தமிழீழ மாவட்டங்களின் காட்டுப்பரப்பளவு**

| மாவட்டம் | 1981 இல் (சதுர கிலோமீற்றர்) | 1993இல் (சதுர கிலோமீற்றர்) |
|---|---|---|
| அம்பாறை | 1241 | 355.07 - 27% |
| மட்டக்களப்பு | 423 | 68.103 - 16.1% |
| யாழ்ப்பாணம் | 341 | 19.778 - 5.8% |
| மன்னார் | 1121 | 280.25 - 25% |
| முல்லைத்தீவு | 1531 | 428.68 - 28% |
| திருகோணமலை | 1138 | 204.84 - 18% |
| வவுனியா | 1104 | 187.68 - 17% |
| கிளிநொச்சி | 741 | 163.302 - 22% |

(உயர் தாவர விதானத்திற்குட்பட்டவை)

யின் வகளிப்போடு எமது வனவளத்தினை பாதுகாக்க இறக்குமதி செய்யப்படுகின்ற பலகைகள், மரங்கள் மற்றும் அவை சார்ந்த பொருட்களுக்கு முற்றாக வரி விலக்களிக்கப்பட்டு எமது பிரதேசத்திற்கான இறக்குமதியினை அதிகரித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மூலம் பாதுகாத்து வருகின்றோம்.

**வனவளத்தினை பாதுகாப்பதற்கு முரணாக செயற்படுபவர்கள் மீது நீங்கள் எடுக்கும் சட்டரீதியான நடவடிக்கை எப்படியிருக்கிறது?**

வடக்கு கிழக்குக்கே உரித்தான சில மரங்கள் உள்ளன. அதாவது முதிரை, பாலை, யாவரணை, காட்டாமணக்கு போன்ற மரங்கள். இவற்றை வெட்டுவதற்கு முற்றாக தடை செய்துள்ளோம். இதனை மீறி ஒருவர் செயற்படுவாராயின் அவருக்கு எமது சட்டத்தின்படி ஏழு ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்படும். இதைவிட சாதாரணமாகக் குற்றம் புரிபவர்களுக்கு தண்டனை என்று இல்லாமல் வனவளப்பாதுகாப்பு பிரச்சாரங்கள் விளங்கப்படுத்தி எச்சரிக்கைசெய்து அனுப்புகின்றோம்.

**ஒரு காணி உரிமையாளர் தனது காணியில் உள்ள ஒரு மரத்தினை வெட்டுவதாயின் அவர் மேற்கொள்ளவேண்டிய நடைமுறைகள் என்ன?**

குறிப்பிட்ட நபர் வெட்டப் போகின்ற மரம் உள்ள காணி தனது

சிலர் எம்மிடம் பெற்ற ஒரு மரத்திற்கான அனுமதியினை வைத்துக் கொண்டு பல மரங்களை வெட்டி விடுகின்றனர். ஆனால் வியாபார நோக்கில் எவரும் மரம் வெட்டி அரிய முடியாது. மக்களுக்கு ஏற்றி இறக்குகின்ற ஒரு சிக்கல் இருந்தாலும் அது தவிர்க்கமுடியாது.

**சுழியன்**

**தமிழீழத்தின் எல்லைக்குட்பட்ட வனவளப்பரப்பளவினைப் பற்றி?**

பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கணிப்பீடு செய்யப்படுகிறது. அதன் படி இறுதியாக 1993 அம் ஆண்டும் அதற்கு முன் 1981ஆம் ஆண்டும் கணிப்பீடு செய்யப்பட்ட விபரம் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளது.

ஒருநாடு ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச சூத்திரத்தின்படி 36 வீதமான காடுகளை கொண்டிருத்தல் வேண்டும். அல்லது தனது நிலப் பரப்பில் 1/3 பங்கு காடுகளாக இருத்தல் வேண்டும். வனவளம் இருப்பதால் ஏற்படும் நன்மைகளும், அவை குன்றிப்போவதால் ஏற்படும் பாதக விளைவுகளும் அனைவருக்கும் தெரிந்ததே.

**மீள் வனமாக்கல் மற்றும் வனவளப் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்கு நீங்கள் நிதியினை எவ்வாறு பெற்றுக்கொள்கின்றீர்கள், ஏதேனும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் உங்களுக்கு**

றினைத் தவிர வேறு எவையும் வேட்டையாட முடியாது. இவற்றினை மீறுபவர்கள் மீது நாம் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்போம். கடந்த காலங்களில் குறிப்பாக சமாதானத்தின் பின் உயர் வேட்டையாடுதல் அதிகமாகக் காணப்பட்டது. இதன்பின்பே இந் நடைமுறையினை கொண்டு வந்துள்ளோம். இதனைவிட சரணாலயங்களை பாதுகாத்தல், போன்றவற்றோடு புதிதாக வவுனிக்குளத்தினை மையமாகக்கொண்டு சரணாலயம் ஒன்றை ஏற்படுத்தத் திட்டம் வகுத்துள்ளோம். இத்திட்டம் நடைமுறைக்கு வந்தால் எம்மால் தெரிவு செய்யப்பட்ட அந்தக் காட்டிற்குள் எவரும் சென்று வேட்டையாட முடியாது. அதற்கான நடவடிக்கையில் இப்போது ஈடுபட்டு வருகின்றோம்.

**இறுதியாக எங்களின் இந்த பத்திரிகை ஊடாக நீங்கள் ஏதேனும் மக்களுக்குக் கூற விரும்புகின்றீர்களா?**

வனவளம் பேணி பாதுகாப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகளும் அவை அழிக்கப்படுவதால் ஏற்படும் தீமைகளும் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். எனவே எங்களின் வனவளத்தினை பாதுகாக்க எங்களோடு சேர்ந்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இன்றைய சூழல் ஆர்வலர்கள் ஆய்வுசெய்வதும், அறிக்கை விடுவதும் சூழல் சார்ந்தே காடுகள் அழிக்கப்படுவதால் உலகின் வெப்பநிலை அதிகரித்து பனிப்பிரதேசங்கள் உருகி சிறுதீவுகள் காலப்போக்கில் நீரில் மூழ்கிப்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சனத்தொகையின் வளர்ச்சி, விஞ்ஞானத்தின் புதிய புதிய கண்டுபிடிப்புகள் என்பவற்றால் இயற்கை எம்மைவிட்டு விலகிச் செல்லச் செல்ல ஆபத்துக்கள் எம்மை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. எனவே வனவளத்தினை பாதுகாத்து வளமாக வாழ பழகிக்கொள்வோம். நவீனத்தையும் வரவேற்போம். அதேநேரம் இயற்கையோடும் ஒன்றித்துப்போவோம்.

ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 13 . 05 . 2005

மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# அமைதி வழி சாத்தியமா?

அமைதி வழி மூலம் தீர்வுகாண்பதற்கான எல்லா வழிகளும் இறுகத்தொடங்கிவிட்டன.

மிக அண்மைக்காலமாக அமைதி வழியில் தீர்வு காணமுடியும் என்ற நோக்கம் தொடர்பாக தமது தரப்பில் நம்பிக்கையான உழைப்பிருக்கிறபோதும், அரச தரப்பில் தொடர்ந்தும் நம்பிக்கையீனங்களை ஏற்படுத்தும் காரியங்களே மேற்கொள்ளப்படுகின்றன என்பதை தமிழர்தரப்பு தெளிவாக உணர்த்தி வருகின்றது.

காரணம், இருக்கக்கூடிய எல்லா சாத்தியமான வழிமுறைகளையும் இறுக மூடிக்கொண்டு அரசு பேச்சளவில் செயற்படமுனைகிறது.

இதனை அண்மையில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் பி.பி.சி, ரொய்ட்டர் மற்றும் இறுதியாக தமிழ்நெற் ஆகிய செய்தி ஸ்தாபனங்களுக்கு அளித்த செவ்விகளில் வலியுறுத்தியுள்ளார்.

ஒரு மாயையான நம்பிக்கையை கட்டியெழுப்புவதன் மூலம் சமாதானத்தின் பால் மக்களுக்கு ஏமாற்றத்தை அளிக்க தயாரில்லாத ஒரு நிலையில் தமிழ் மக்கள் புலிகள் இயக்கம் மீது சுமத்தும் அழுத்தத்தைக் கருத்தில் எடுத்து கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தார்.

இறுதியாக தமிழ் நெற் இணையத்தளத்துக்கு அளித்த செவ்வியில் அரசியல்துறைப்பொறுப்பாளர் கீழ்வரும் விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தார்.

★நம்பிக்கையைக் கட்டியெழுப்ப அரசு தவறுகிறது.

★அமைதி வழி முயற்சி அசாத்தியமாகிறது.

★தெற்கில் எதிர்ப்பை தீவிரமடையச்செய்து நழுவிப் போகும் சூழ்நிலையை அரசு உருவாக்குகிறது.

★அரசின் நடவடிக்கைகளும் கூட்டமைப்பு அங்கத்துவ கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளும் நம்பிக்கையைத் தரவில்லை.

★சனாதிபதி செயலில் இறங்காது அறிவிப்புக்களை விடுத்துக்கொண்டிருக்கிறார்.

★கட்சிக்குள் இணக்கத்தை கொண்டுவர முயற்சிக்கவில்லை.

★விடுக்கப்படும் அறிவிப்புக்களும் நடைமுறை சாத்திய மற்றவையாகவே இருக்கின்றன.

★உதவிகளை கவரவும் தனது செல்வாக்கை அதிகரிக்கவுமே முயற்சிக்கப்படுகிறது.

என இலங்கை அரசின் பொறுப்பற்ற போக்கை அரசியல்துறைப்பொறுப்பாளர் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது அமைதிவழி முயற்சியானது சாத்தியத்திலிருந்து அசாத்தியத்தை நோக்கி நகரத்தொடங்கி விட்டதை உணர்த்தும் ஒரு செயற்பாடாகவே நோக்கவேண்டும்.

தமிழ் மக்கள் இனியும் நம்பிக்கெடமுடியாது என்கிற சூழ்நிலையை அரசு புலிகள் இயக்கத்தின் மீதும், தமிழ் மக்கள்மீதும் திணிக்கத்தொடங்கிவிட்டது.

புரிந்துணர்வு உடன்படிக்கை மூலமாக தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த அற்ப சொற்ப இயல்புநிலை வாழ்வியலிலும் அரச படைகள் கை வைக்கத் தொடங்கிவிட்டன.

இது எப்போதும் போல இப்போது கிழக்கு மக்கள் மீது சுமத்தத்தொடங்கியிருப்பதையே மட்டக்களப்பு சந்திவெளியில் புதிய இராணுவக் காவலரண்களை அமைக்க முயன்றமையும், திருகோணமலையில் மக்களின் மீதான பொருளாதாரத் தடையும் உணர்த்துகின்றன.

மேற்படி காரியங்கள் யாவும் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறிச்செயற்படுத்தப்படுகின்றது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மிகத் தெளிவாகவே புரிந்துணர்வு உடன்பாட்டினை மீறுவதன் மூலமாக அரசு அமைதி வழித் தீர்வு சாத்தியமே இல்லை என்கிறதை உணர்த்துகிறது.

இதனையே தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்களும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த நிலையில் நிலைமையை மதிப்பீடு செய்யத் தமிழர் தலைமை தவறவில்லை என்பதை அரசியல் துறைப்பொறுப்பாளர் அவர்களின் செவ்வி உணர்த்துகிறது.

# தமிழர்களுக்கு உவப்பானதாக இல்லை

ஞாபகன்

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் நடைபெறுகின்ற அதிமுக்கியமான நிகழ்வுகள் எவையும் தமிழர்களுக்கு உவப்பானவையாக இல்லை. இடம்பெற்ற ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் வெறுமனே எதிர்பார்ப்புக்கள் தேய்வுறும் நிலைமையைதான் உண்டு பண்ணின.

ஆக்கபூர்வமான பயன்பாடு எதுவும் கிடைக்காதபோதுதான் விடுதலைப்புலிகள் பேச்சு வார்த்தைகளில் இருந்து இடை விலகினர். நீண்டகாலப் போரினால் பாதிப்புற்ற மக்களின் அடிப்படையான வாழ்வாதாரங்களை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். அதற்காக சர்வதேச நிபுணர்கள், சட்ட அறிஞர்கள் போன்றோரின் ஆலோசனைகளைப் பெற்று இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைவை முன் வைத்தனர்.



அதனை ஏற்றுக்கொள்ளவோ பிரச்சினைக்குத் தீர்வுகாணவோ தமிழ் மக்களின் நலனில் அக்கறை செலுத்தவோ தயாரில்லாத சனாதிபதி அதற்கு முட்டுக் காட்டைகளை இட்டார். அன்று கட்சியிலிருந்த ஐ.தே.கட்சியைக் கலைத்தார். அதன் பின்னர் ஒப்பிட்டளவில் வெளிப்படையாகவே தமிழர்களின் அபிலாஷைகளுக்கு எதிரான - விரோதமான சக்திகளின் கூட்டரசாங்கம் ஆட்சியேறியது.

இந்த நிலை ஏற்கனவே, பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்த புரிந்துணர்வு உடன்பாட்டுக்கும் போர் நிறுத்தத்துக்கும் அச்சுறுத்தலாகவும் அமைந்தது. விடுதலைப்புலிகளும் மக்களும் பொறுமைக்கான எல்லைக்கோடுகளை அடையும் நிலை உருவானது.

அப்போது தென்னாசியாவின் அரசியல், பொருளாதார, சமூக, பூகோள அம்சங்களில் எதிர்பாராத மாற்றத்தை ஏற்படுத்திய சுனாமிப் பேரலைகள் தாக்குதலை நடத்தின. அதன் பின்னர் முற்றிலும் அரசியலே இல்லாத மனிதாபிமான பணிகளே முன்னெடுக்கப்படவேண்டியனவாய் இருந்தன.

சர்வதேச நாடுகளும் அதனையே வலியுறுத்தின. வலியுறுத்திய தரப்புக்கள் உண்மையில் அதற்கு விசுவாசமாக நடந்துகொண்டனவோ இல்லையோ விடுதலைப்புலிகள் அதனையே குறிக்கோளாகக் கொண்டனர். தன் தேச மக்களின் நலனுக்காக விடுதலைக்காகப் போராடும் இயக்கத்தினால் அந்தச் சூழ்நிலையில் அவ்வாறுதான் செயற்பட இயலும்.

ஆனால், அதற்கென முன்மொழியப்பட்ட பொதுக்கட்டமைப்பு தென்னிலங்கையில் படாதபாடு படுகின்றது. இலங்கைத் தீவே துண்டுகளாக சிதறிப்போகும் படியாக ஆக்கவல்ல சூழ்ச்சி - வெடிமருந்து அதற்குள் இருப்பதாக ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன.

ஏற்கனவே, ஆட்சியிலிருந்து அதனை இழந்த ஐ.தே.க அதற்கு பூரண ஆதரவளிப்பதாக பேசியது. அவ்வேளை சந்திரிகா உட்பட கட்சியிலுள்ள பங்காளிக் கட்சியினர் அனைவரும் அதனைத் தீவிரமாக எதிர்த்துக்கொண்டிருந்தனர்.



ஆனால், சர்வதேச ரீதியாக உதவி வழங்குவதில் முக்கியத்துவம் பெறும் நாடுகளும் அமைப்புக்களும் பொதுக்கட்டமைப்பையே முன்னிலைப்படுத்தின. அவ்வாறான அமைப்பு உருவாக்கப்படும் வரையில் உதவிகளை வழங்க இயலாது என்று நிபந்தனை விதிக்கும் அளவுக்கு தமிழர் தரப்பின் நீண்டகால அனுபவங்கள் வழியான நியாயப்பாடுகள் இருந்தன.

யதார்த்தத்தை புறந்தள்ளி, இலங்கையின் பொருளாதார நெருக்கடியை தீர்க்கமுடியாது என்று கருதிய சிறிலங்கா அரசின் தலைவி, பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது பற்றி பேசத் தொடங்கியுள்ளார். உண்மையில் பொதுக் கட்டமைப்பை உருவாக்கி சகல இன மக்களும் பயனடையும் காரியத்தை ஆற்றவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இல்லை. இருந்தபோதிலும் சர்வதேச உதவும் அமைப்புக்களின் கவனம் விடுதலைப்புலிகளிடம் முற்றிலுமாகப் போய்விடக்கூடாது என்ற கரிசனையில் அவர் அவ்வாறு பேசவேண்டியுள்ளது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைத்தீவு தீக்குளிக்கப் போகிறதா?

மட்டக்களப்பு சந்திவெளியில் மே 09ஆம் திகதி சிறிலங்காப் படைகளின் துப்பாக்கிகளிலிருந்து புறப்பட்ட சன்னங்கள் குடித்திருப்பது ஒரு வயோதிபரின் உயிரை மட்டுமல்ல; காயப்படுத்தியிருப்பது 21 பொது மக்களின் உடல்களை மட்டுமல்ல; உண்மையில் அங்கு கொல்லப்பட்டது சமாதானத்தின் மீதான நம்பிக்கையே; படுகாயமடைந்தது யுத்தமற்ற வாழ்வுக்கான எதிர்பார்ப்பே. இவையனைத்தும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னிலையில் நிகழ்ந்தேறியிருப்பது இன்னமும் தீவிரமானதும், பொருத்தப்பாடானதுமாகும். அத்தோடு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதும், அவர்கள் மயிரிழையில் உயிர்தப்பியதுவுங்கூட "சனநாயகம் பற்றிய வலியுறுத்தல்களுக்கான மிகச்சரியான பதிலாகவே அமைந்திருக்கிறது என்றால் மிகையல்ல.

தமிழ்த் தேசியத்தின்மீதும் விடுதலைப்புலிகள் மீதும் மட்டக்களப்பை மையப்படுத்தி ஒரு நிழல் யுத்தம் சிறிலங்கா அரசாலும் அதன் படைகளாலும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுவருகிறது. இந்த யுத்தம் தினம்தினம் தமிழர்களின் வாழ்வியலைப் பெரும் நெருக்கடிக்குள்ளாக்கிவருகிறது. தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடைபெறும் கொலைகளைத் தடுக்க எந்தப் பிரயத்தனமும் சிறிலங்கா அரசாங்கத்தால் எடுக்கப்படவில்லை. மாறாக, கொலைகளைக் காரணங்காட்டி இராணுவ நெருக்குவாரங்களைப் பொதுமக்கள் மீது பிரயோகிப்பதிலேயே அதிகமான அக்கறை காட்டப்படுகிறது.

இதன் கீழ் வீதிரோந்துகள், சுற்றி வளைப்புகள், வீதித்தடைகள், வீதிச்சோதனைகள் என்றவாறு வளர்ந்த கெடுபிடி இப்போது புதிய காவலரண்கள் மக்கள் குடியிருப்புகளுக்குள் முளைக்கத்தொடங்குகின்ற அளவிற்குப் போயிருக்கிறது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி மக்கள் குடியிருப்புகளுக்குள் இருக்கின்ற படைநிலைகள் அகற்றப்பட்டு மக்களின் இயல்பு வாழ்வுக்கு வசதியேற்படுத்திக் கொடுக்கப்படவேண்டுமென்பது போய், மக்கள் செறிந்து வாழும் பகுதிக்குள் காவலரண்கள் புதிதாக அமைக்கப்படுவது சுட்டிக்காட்டுவது எதனை? புரிந்துணர்வு ஒப்பந்தம் செத்துப்போய்விட்டது என்பதனையா? அல்லது சிறிலங்கா அரசாங்கமும் படைத்தரப்பும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புறமொதுக்கிவிட்டன என்பதையா?

மட்டக்களப்பு-வாழைச்சேனை A15 வீதியில் மக்கள் செறிந்துவாழும் சந்திவெளிக் கிராமத்தில், பாடசாலைக்கு அருகாமையில் சிறிலங்காப் படைகளால் புதியதொரு காவலரண் அமைக்கப்பட்டது. இத்தனைக்கும் சந்திவெளியிலே SLLIஇன் பலமான முகாமொன்று ஏற்கனவே அமைந்திருக்கின்றது. இந்தக் காவலரண் அமைக்கப்பட்டதற்கு அக்கிராம மக்களால் அமைதிவழியில் காட்டப்பட்ட எதிர்ப்புக்கு சிங்களப் படைகள் வழங்கிய பதில்தான் மே09ஆம் திகதி ''சந்திவெளி அனர்த்தம்"ஆகும்.



மக்களின் கோரிக்கைகள் சுலோக அட்டைகளாகவும், கோசங்களாகவும் முன்வைக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு சமுகமளித்திருந்தனர். மக்களின் சார்பில் மக்களின் எதிர்பார்ப்பை அவர்கள் காவலரணிலிருந்த படையதிகாரிக்கு விளக்கியபோது, அவர்களுக்குக் கிடைத்த பதில் உங்களையும் சுடவேண்டி வரும் என்பதுதான்.

இதனையடுத்து கொம்மாந்துறை இராணுவமுகாமிலிருந்து வந்த படையினர் முன்னறிவித்தலின்றித் தடியடியிலிறங்கவே அதற்கு கல்வீச்சின் மூலம் பதிலளித்தனர் சந்திவெளி மக்கள். உடனடியாகவே சிங்களத் துப்பாக்கிக[ள்] சன்னங்களை அவர்களுக்குப் பரிசளித்துவிட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி நிலத்தில் வீழ்ந்து படுத்துவிட்டதால் உயிர்தப்பினார். அவருக்குப்பின்னே நின்றிருந்த வயோதிபர் சன்னங்களுக்குப் பலியாகினார்.

இவை அனைத்தையும் இலங்கைப் போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழு பார்த்துக்கொண்டிருந்தது என்பது மிகச்சிறப்பானதொருவிடயம். அதாவது தமது கொலை வெறியாட்டத்தை சிங்களப்படைகள் எவருக்குமுன்னும் நடத்தும் என்பதை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அங்கு அறிந்துகொண்டனர். மக்களின் சனநாயக ரீதியிலான எதிர்ப்புக்கு சிறிலங்கா அரசாங்கத்தினதும் படைகளினதும் பதில் எப்படி இருக்கும் என்பதற்கான சமீபத்தைய உதாரணம் சந்திவெளி அனர்த்தமாகும்.

உண்மையில் அங்கு கலகமடக்கும் பொலிசார் ஏறாவூர் காவல் நிலையத்திலிருந்து வரவழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இருக்கத்தக்கதாகத்தான் இராணுவத்தினர் தடியடியையும், துப்பாக்கிச் சூட்டையும நடத்தியிருந்தனர் என்பது இங்கு கவனிக்கவேண்டியவையாகும். ஒரு கலகத்தின் மீது எப்போது துப்பாக்கிச்சூடு நடத்தப்படலாம்? இதற்கான நடைமுறை ஒழுங்கு என்ன?

போராட்டங்கள் கட்டுமீறிப் போகும்போதோ, அல்லது ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்தவோ பொலிசாரே பயன்படுத்தப்படுவது வழமை. அவர்கள் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை எச்சரிக்கையின் பின் வீசுவார்கள். அதற்கும் கூட்டம் கட்டுப்படாவிடில் தண்ணீர்ப் பீரங்கி, தடியடி என்பன அடுத்தகட்ட ஆயுதங்கள். இவையும் பயன்படாவிடில் அடுத்தது இறப்பர் ரவைகள். ஆக உச்சமாக வானைநோக்கித் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டும். அதற்கும் கூட்டம் கலைந்துபோகாவிடில் கால்களை நோக்கித்துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படவேண்டும். இதுவே உண்மையான நடைமுறை.

ஆனால், சந்திவெளியில் நடந்தது என்ன? இராணுவத்தினர் தடியடியையும், துப்பாக்கிச் சூட்டையும் சகட்டுமேனிக்கு நடத்தி முடித்திருக்கின்றனர்.

உண்மையில் தமிழ் மக்கள் மீது சிறிலங்காவின் முழுச்சிங்களப் படைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்வது இதுதான் முதல்தடவை அல்ல. தினம் தினம் அவை தமது துப்பாக்கிகளைப் பயன்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றன. சிறிலங்காப் படைகள் மட்டுமல்ல? காவல்துறையினர்கூட இதே நிலையில்தான் இருக்கின்றனர். சிறிலங்கா பொலிஸ்மா அதிபரே தன் வாயால் இதை ஒப்புக்கொள்கிறார். இவையெல்லாம் சுட்டிக்காட்டுவது என்ன? இலங்கைத்தீவின் இயல்பு வாழ்வுக்கும் சமாதானத்துக்குமான பாதை பையப்பைய மூடப்பட்டு வருகிறது என்பதே. போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் இந்தப்பாதை மூடும் விவகாரத்தின் மிக உயர்ந்த குறிகாட்டி.

பாதைகளைத் திறப்பதற்கு நாம் பட்ட துன்பங்களையும் எடுத்த பிரயத்தனங்களையும் மீளவும் நினைவிற்கொள்ளவேண்டிய தேவை இன்று எம்முன் பூதாகாரமாக எழுந்து நிற்கிறது.

சந்திவெளி அனர்த்தம் என்பது போரைநோக்கி இலங்கைத் தீவைத் தள்ளிவிடுவதற்கான ஒரு முனைப்பான செயற்பாடாகும். அரசியல் நகர்வுகள் யாவும் எமக்கு ஏமாற்றமளிப்பதோடு நம்பிக்கைகள் செத்துக் கொண்டிருக்கின்றன எனத் தமிழர் தரப்பு இறுக்கமாக வலியுறுத்திய மறுநாள் இந்த அனர்த்தம் நிகழ்ந்திருப்பது இதற்கு நல்ல சான்றாக விளங்குகிறது.

விரும்பியோ விரும்பாமலோ இலங்கைத்தீவு மீண்டும் தீக்குளித்தேயாகவேண்டும் என்பதுவாக நிகழ்வுகள் கோடிகாட்டுகின்றன. சந்திவெளி அதற்கு ஒரு கட்டியமாக இருக்கிறது.

**பு.சத்தியமூர்த்தி**

---



## விசுக்விசுக் விசாலாச்சி

வாய் திறக்கவிடுறியளில்லை ங..... வாயத்திறந்தாக் காணும் 'புறுபுறுக்கிறன்', 'புலம்பிறன்', 'உனக்கொண்டுந் தெரியாது.' 'பேசாமக்கிடவன்' எல்லாத்துக்கும் மேல ஒருகதை என்ர மேள் சொல்லுறாள்.... ங 'அறளைபேந்திட்டுது'ம்.. கொட்டிப்பாரன் என்னடா இப்ப இப்பிடிக்கதைக்கினம் இவைக்கு காலம்போகாதே....இல்லப் போதோண்டு கேக்கிறன்... ங 'முத்திக்குறுத்தா மூண்டுகால்' எண்டு சொல்லுறது ஒரு நொடியில.... அ..... இழவு நினைவும் வருதில்ல.... அ.... தத்தக்காபித்தக்கா நாலுகால், தானே நடக்க ரெண்டுகால் முத்திக்குறுத்தா மூண்டுகால், ஊருக்குப் போகையில எட்டுக்கால்! உன்னையார் கேட்டதோ....?

உப்பிடித்தானடா எல்லாம்... முன்ன நடந்த நடப்புகள் தெரியாமச் சந்திரிகா மாரிப்புலம்புறியள்.

ஏன்ரா ரணிலர் பதவியில இருந்த மூட்டம் புலியளோட பேச்சு நடத்தி இந்தா அந்தாண்டு திரியேக்க சனாதிபதி என்ன சொன்னவா.... பிரதமர் செய்யிறதுகளைப்பற்றி எனக்கொண்டுந் தெரியாதெண்டு இப்ப..... எப்பிடி சனாதிபதி செய்யிறதொண்டும் தனக்குத் தெரியாதெண்டு மகிந்தர். அவாவின்ர பிரதமர் சொல்லியிருக்கிறார். எப்பிடித்தோசையைத் திருப்பிப் போட்டினம் பாத்தியளே இப்ப பதமான வேக்காடு. இதனைத்தான்ரா சொல்லுறது முற்பகல் செய்யின் பிற்பகல் விளையுமெண்டு. அதென்னண்டடா சொல்லிவைச்சமாரி ஒவ்வொருத்தனுக்காப் புளுக்கிண்டுது. எல்லாம் திட்டம் போட்டுச்செய்யிற வேலையள் தான் வேறயென்ன சுனாமியடிச்சும் மாசம் ஆறாச்சு. இன்னும் இவையட பூகம்பங்கள் புயலுகள் முடியேல்லயே. அப்ப தீச்சுவாலையள் கட்டுநாயக்காவெல்லாம் அடிச்சு எத்தினை வருசம். என்னவோ சொன்னமாரி 'நாளை நாளையென்று நாளைத்தள்ளிப் போடாமல் இன்றே செய்யுங்கள்' எண்டு இது அப்பிடியில்லையடா பிள்ளை யாரைச் சனியன் பிடிச்ச கதைதானடா..... அட அது உனக்குத் தெரியாதே. இந்தச்சனி உலகத்தில பிடிச்சாட்டாதவை ஒருத்தருமில்லையாமடா பின்ன இவர் பிள்ளையாரப் பிடிக்கப்போனாராம். பிள்ளையார் சொன்னாராம் 'ஐயோ இண்டைக்கு முக்கியமானவேலை கிடக்கு நாளைக்கு வாவன்' எண்டு சனியனும் சரியெண்ண " இஞ்சவா உதை என்ர முதுகில எழுதிப்போட்டுப் போ. பிறகு நான் மறந்து போவனெண்டாராம். சனியனார் எழுதி வைச்சிட்டுப் போனார். பிறகென்ன அவர்வர என்ன எழுதியிருக்கெண்டு படி எண்ண- ''நாளைக்கு வாறன்'' எண்டெல்லே கிடக்கு அப்ப நாளைக்கு வாவன் எண்டிவர் சொல்ல இண்டைக்கு வரைக்கும் சனியனார் திரியிறார் உவற்ற அடிதான் இனப்பிரச்சினைத் தீர்வும். பொடியா-தேசியக் கட்டமைப்பு மாறிப் பொதுக் கட்டமைப்பில நிக்குது. ஏதோ இப்ப இது தான் பிரச்சினை எண்டமாரி.

மெய்யேடாப்பா எண்டைக் கெண்டாலும் உந்த "சீனாக்காறர் ஒரு சொல்லில நிண்ட வரலாறிருக்கே......ங.... சும்மா விடடா வெல்லும் வரைக்கும் சோசலிசம் சமட்டியெண்டு கதைச்ச அப்பர் பண்டாரநாயக்கர் வெண்டு முடிய தனிச்சிங்களம் எண்டார். ஒரு மொழியெண்டால் நாடுரெண்டு, ரெண்டு மொழியெண்டா நாடு ஒண்டெண்ட கொத்தலாவலையர். கூட்டுச்சேர்ந்த உடன குடாதை ஒண்டுமெண்டார். உதோட போச்சே எம்பிலிப்பிட்டியாப் புதைகுழியத்தோண்டிக் காட்டி நானே சமாதானத் தூதுவர் எண்டு வந்த மோள்காறி செம்மணியில புதைகுழியள உண்டாக்கினா- சமாதானத்த நான் தாறனெண்டு வந்த ரணிலர் இப்ப அதுக்குந் தனக்குஞ் சம்பந்தமில்லையெண்டமாரி பொதுக்கட்டமைப்புச் சந்திப்புக்கே மாட்டனெண்டு போட்டார்.

சரி அதுதான் போகட்டும் இல்ல அம்மாவெண்டாலும் அமைச்சுப்பதவியளப் பறிக்கயோ -இல்ல நாடாளுமன்றத்தக் கலைக்கயுக்கயோ இருக்கிற வீட்டோப் பவறைப் பயன்படுத்துவாவோ- எடேய் தன்ர குண்டி அம்மணமாம் தங்கச்சி குண்டிக்குப் பச்சவடம் எண்டமாரி தங்கட பிரச்சினை தீர்க்கக்காணேல்ல- உலக நாடுகளுக்கு அமைதிப் படை அனுப்ப வெளிக்கிட்டிட்டினம். சும்மா இருந்து புலம்புறனெண்டுறாய். இல்ல நீ சொல்லன்-ஒரு காலத்தில முழுப்பவரும் தன்னட்ட இருந்தா உந்த இனப்பிரச்சினையை ஊதித் தள்ளிப்போடுவன். இது அதிகாரமில்லாத பிரதமர் பதவியெண்டு எல்லா அதிகாரத்தையும் வச்சு ஒரு சர்வாதிகாரச் சனாதிபதியாப்பை ஜேயார் எழுதுவிச்சு சனாதிபதியா வந்தவர். அப்பிடியும் அவரால ஏதுஞ்செய்ய முடிஞ்சுதோ ஏன் எல்லாம் மனந்தான்ரா காரணம். சும்மாவே சொல்லுறன் "மனமுண்டானால் இடமுண்டு"

# ரஷ்யாவின் இருப்பு நிரந்தரமான; மாறுதலை நோக்கி நகர்கிறது

இரண்டாம் உலக யுத்தத்தினை நினைவுபடுத்தும் விழா ஒன்று ரஷ்யாவின் தலைநகரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அமெரிக்கா, இந்தியா, சீனா உட்பட 56 நாடுகளின் தலைவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர். 60 ஆண்டு களுக்கு முன்பு சோவியத் படைகளாலும் மக்களாலும் முறியடிக்கப்பட்ட ஒரு போரினை நினைவுகோருகின்ற உலகம் ரஷ்யர்களின் முக்கியத்துவத்தினை என்றுமே குறைத்து மதிப்பிடமுடியாத நிலைக்குள் உள்ளது. இவ்விழாவின் முக்கியத்து வத்தையும் இந்திய அமெரிக்கத் தலைவர்களின் அணுகுமுறைகளையும் நோக்குவோம்.

இரண்டாம் உலக யுத்தத்தில் ரஷ்யர்களின் முக்கியத்துவம் வரலாற்றில் என்றுமே மறக்கமுடியாத தொன்றாகும். அப்படியான முறியடிப்புப்போரை முழு மேற்கு ஐரோப்பிய ருக்கும் தந்திரமாக நகர்ந்துகொள்ள ஹிட்லரின் சினம் மேலும் அதிகரித்தது. மேற்கு ஐரோப்பியர் சரணடைந்து விட்டதாகக்கூட ஜேர்மனிய உளவுப்படை கருதியது. ஜேர்மனியப்படைகளை தாக்காது தவிர்த்துக்கொண்ட மேற்கு ஐரோப்பியப் படைகள்



சொத்திழப்பு, உயிரிழப்பு என பல பில்லியன் கணக்கான இழப்பீட்டை சோவியத் யூனியன் எதிர்கொண்டது. அதிலிருந்து மீளமுடியாத சோவியத்யூனியனே 1989ஆம் ஆண்டு வீழ்ச்சியடைந்தது என வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அது சோவியத்தின் சரிவுக்கு வழிவகுத்த பிரதான காரணிகளில் ஒன்றாக அமைந்துள்ளது. ஆனால் ஹிட்லர் முசோலினி படைகளிடமிருந்து உலகத்தைப் பாதுகாத்தது சோவியத்யூனியன். ஜப்பான், இத்தாலி என்பன உடன்பாட்டுக்கு அமைவாக தமது பிரதேசங்களை கைப்பற்றியதுடன் ஹிட்லரின்

அமெரிக்கா மொஸ்கோ விழாவுக்கு வருகை தர முன்பும் சோவியத் குடியரசுகளுக்கும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்கத் தலைவரின் விஜயம் அமைந்திருந்தது. அவர் அந்த நாடுகளை அமெரிக்காவுடன் இணைப்பதில் கணிசமான கவனம் செலுத்திவரும் நிகழ்வு புட்டினை எச்சரிப்பதாகவும், மிரட்டுவதா கவுமே அமைந்திருந்தது. அமெரிக்கத் தலைவர் பெனாரஸ்க்கு சென்ற சமயம் கிழக்கு ஐரோப்பாவில் இறுதி சர்வாதிகார நாடு என வர்ணித்தார். அந்த நாட்டின் அதன் சுதந்திரமான தேர்தலுக்கு அழைப்புவிடுத்த அமெரிக்கத் தலைவர் அந்த நாட்டுடன் பல உடன்பாடு களையும் எட்டமுயன்றுள்ளார். இவ்வாறே சோவியத் குடியரசுகளுக்கு சென்ற அமெரிக்கத் தலைவர் அந்த நாடுகளின் சுதந்திரமான

இந்தியத்தலைவர்- கிழக்கு ஐரோப்பிய மற்றும் சோவியத் குடியரசுத் தலைவர்களையும் மொஸ்கோவில் வைத்து கலந்துரையாடினார்.

இந்தியத்தலைவர் ரஷ்யத் தலைமையுடன் தனிப்பட்ட சந்திப்பை மேற் கொண்டதுடன் பரஸ்பரம் தொழில்நுட்ப உறவுகளையும் பிராந்திய, சர்வதேச அரசியல் தொடர்புகளையும் முதன்மைப்படுத்தி கலந்துரை யாடினார். பொதுவாகவே பாதுகாப்பு விடயங்களை விடுத்து அரசியல் பொருளாதார விடயங்களை முதன்மைப்படுத்தி உரையாடியதுடன் ரஷ்யாவுக்கே அவசியமானதை இந்தியத்தலைமை உணர்ந்தது தெளிவாக தெரிந்தது. இந்தியாவை நவீனமயமாக்க முயல்வதில் சனாதிபதிக்கும் பிரதமருக்கும் அதிக பங்குண்டு என்பது தெளிவான விடயம். அப்படியான தலைமை ஒன்று

மேற்கொண்டு ஜேர்மனியரின் போர்த்தந்திரத்தை சோவியத் யூனியன் இராணுவமும், மக்களும் முறியடிக்கத் தவறியிருந்தால் இன்று ஹிட்லரின், முசோலினியின் உலகத்தில் வாழ்பவர்க ளாயிருப்போம். அவர்களது சிந்தனைகளையும், எண்ணங்களையும் பிரதி பலிப்பதாக உலகம் விளங்கி யிருக்கும். ஸ்டாலினை எப்படித்தான் விமர்சித்தாலும் உலகத்தை தனதாக்க முயன்ற ஹிட்லரை முறியடிப்பதில் ஸ்டார்லினுக்கு தனிப்பங்கிருந்தது. ஆனால் இந்தப்போரை சோவியத்தின் மீதே திணிக்கவேண்டுமென செயற்பட்ட முதலாளித்துவ உலகத் தலைவர்களின் தந்திரமோ இன்னொரு தனித்துவமாகும்.

முதலாளித்துவம் எப்போதும் வகிக்கும் தந்திரம் தனது நலன்களுக்காக உலகத்தினை பயன்படுத்துவ தாகும். சோசலிசம், முதலாளித்துவம் என்ற போட்டி முனைப்பாக இருந்த காலமது. உலகமே சித்தாந்த அடிப்படையில் பிரிவினை செய்யப்பட்டிருந்தது. மேற்கு ஐரோப்பியர் அமெரிக்கக் கூட்டும் பலமடைந்திருந்தது. கிழக்கு ஐரோப்பியர் சோவியத்யூனியனுடன் கூட்டுவைக்க முயன்று கொண்டிருந்தனர். அத்தகைய சந்தர்ப்பத்தில் இரண்டாம் உலகயுத்தத்தை தமது பக்கம் நிகழவிடாது தடுப்பதற்கு மேற்கு ஐரோப்பியர் கடுமையான பின்வாங்கல் இராஜதந்திரத்தை பிரயோகித்தனர். பிரான்ஸை விடவும் பிரித்தானியர் அதிகம் தந்திரத்தை பிரயோகித்தனர்.

முகாங்களுக்குள்ளும் காவலரண்களுக்குள்ளும் முடங்கிக் கிடக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. பேர்ள் காபரில் ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்ய அமெரிக்கா தனது படைகளை ஐரோப்பாவுக்குள் நகர்த்தியது. ஐரோப்பிய படைகளின் உபாயத்தை ஏற்றுக்கொண்ட அமெரிக்கப் படைகள் கிழக்கு ஐரோப்பா வுக்குள் ஹிட்லரின் படைகள் புக ஆரம்பித்ததும் தாக்கத்தொடங்கின. அது கூட சிறு அளவானதாக ஐரோப்பாவுக்குள் இழப்பீட்டை ஏற்படுத்தும் உபாயத்துடனான நகர்வாகவே காணப்பட்டது.

போர் கிழக்கு

**ஐங்கரன்**

ஐரோப்பாவுக்குள் நகர்ந்ததும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோவியத்துடன் கூட்டுச்சேரும் நிலை மேலும் அதிகரித்தது. அல்லது சோவியத் யூனியனால் அத்தகைய நிலை வலிந்து உருவாக் கப்பட்டது. இதனால் பெரும் யுத்தம் கிழக்கு ஐரோப்பாவை மையமாகக்கொண்டு நிகழ்ந்தது. சோவியத் யூனியனும் அதன் படைகளும் ஜேர்மனியப் படைகளை மூர்க்கமாகத் தாக்கின. போர் பெரும் அழிவுகளையும், இழப்பீடுகளையும் சோவியத்யூனியனுக்கு ஏற்படுத்தியது. சோவியத் படைகளும், மக்களுமாக 4கோடியளவில் கொல்லப்பட்டனர். 1945ஆம் ஆண்டு மே மாதம் 08ஆம் திகதி நாசிப்படைகள் சோவியத்படைகளிடம் சரணடைந்தன. போர் முடிவுக்கு வந்தது.

படைகளே தோற்றுப் போனதுடன் தமது உடன் பாட்டையே அடைய முடியாதவர்களாக விளங்கினர். முடிவாக சோவியத்யூனியன் போரில்வென்றது. அதிகாரத்தில் தோற்றுப் போனது. ஆனால் அதுவரையும் காத்திருந்த அமெரிக்காவும் மேற்குலகமும் ஜேர்மனியை பங்கு போடுவதில் பின்நிற்கவில்லை. போரின் இலாபங்களையும் நலன்களையும் பங்கு போடுவதில் மேற்கு முதலாளித்துவ உலகம் பின் நிற்காது செயற்பட்டதுடன் இப் போரை பயன்படுத்தி சோவியத்யூனியனை வீழ்த்துவதில் வெற்றிகண்டன.

இன்னும் ரஷ்யா என்றாலே அச்சமடையும் மேற்குலகம் அதன் எழுச்சியை முறியடிக்க முயன்று வரு வதனைக் காணலாம். அமெரிக்கத் தலைவர் இவ்விழாவில் கலந்து கொள்ளப் புறப்பட்டபோதே அவரது நோக்கம் தெளிவாக அம்பலமாகியது. ரஷ்யா மீளவும் எழுச்சியடையக் கூடாது என்பதில் கவனம் கொள்ளும் அமெரிக்கா ரஷ்யாவை எப்போதும் தனிமைப்படுத்தி வைத்திருக்கவே விரும்பு கின்றது. குறிப்பாக கிழக்கு ஐரோப்பாவை இலக்குவைத்து செயற்பட்ட அமெரிக்கா தற்போது சோவியக் குடியரசுகளை நோக்கி தனது உபாயங்களை நகர்த்தி வருகின்றது. நோட்டோ ஐரோப்பிய யூனியன் என்பனவற்றில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் சோவியத் குடியரசுகளையும் இணைக்க முயலும்



தேர்தல், சனநாயகம், மனித உரிமையுடன் பொருளாதார உதவிகளை இணைத்து பேசும் பேசுவதிலும் தவறவில்லை. ஆனால் அவர் மொஸ்கோவுக்கு இறுதியாக செல்வதன் மூலம் ரஷ்யாவையும் அதன் தலைமையையும் அந்நாட்டு மக்களையும் எப்படி மதிக்கிறார் என்பதனைக் காட்டுவதாகும். உண்மையில் அமெரிக்கத் தலைவர் ரஷ்யர்களை அவமதிக்கும் செயலையே வெளிப்படுத் தியுள்ளார். ஜோர்ஜியாவுக்கு அவரது விஜயம் அதனையே வெளிப்படுத்துகின்றது.

இந்தியத் தலைவர் ரஷ்யாவுக்கு சென்றதுடன் விழாவின் பிரதான இடத்தைப் பெற்றவராக விளங்கினார். அவர் இந்திய- ரஷ்ய உறவின் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தினை காட்டியதுடன் அவ்வுறவை மதிப்பவராகவும் காட்டிக் கொண்டார். இருநாடுகளுக்கும் இடையில் வளர்ந்துள்ள நட்பை பேணிக்கொண்ட

ரஷ்யாவுக்கு கிடைக்கவில்லை என்பதும் ரஷ்யாவின் பொருளாதார சீர்திருத்தம் அதிக மாற்றத்தை ஏற்படுத்த வில்லை என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

எனவே மொஸ்கோ வின் வரலாற்று நிகழ்வு மதிக்கப்பட வேண்டும். அரசியல் பொருளாதார, இராணுவ உபாயங்களுக்கு அப்பால் வரலாற்று நிகழ்வுகளை வரலாற்று பதிவுகளாகக் கொள்ளுதல் அவசியம். உலகத்தின் மாறுதலுக்கு வித்திடும் ரஷ்யாவின் இருப்பு நிரந்தரமான மாறுதலை நோக்கி நகர்கின்றது. அமெரிக்கத் தலைவர் ரஷ்யாவின் எதிரிகளை நண்பராக்க முயல்வதும் இரண்டாம் உலக யுத்த உபாயங்களையும் தந்திரங்களையும் அவர்கள் என்றுமே கைவிடவில்லை என்பதனையே காட்டுகின்றது.

# சாபக்கேடு விலக...



"பிக்குகள் அரசியலைவிட்டு விலகினால் நாட்டைவிட்டு ஒரு சாபக்கேடு விலகும்'' இவ்வாறு கூறியிருக்கிறார் பெல்லன் வில பௌத்த பீடாதிபதி பேராசிரியர் விமலரத்தின தேரர் மக்களை நல்வழிப்படுத்துங்கள் தேசியப் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வுகாண முன்வாருங்கள் என அவர் மேலும் அறிவுரை கூறியிருக்கிறார்.

சிறிலங்காவைப் பொறுத்தவரை இது மிகவும் உன்னதமான போற்றத்தக்க அறிவுரையாகும். இந்த அறிவுரையை பௌத்த பிக்குகள் 1948ஆம் ஆண்டில் கடைப்பிடித்திருந்தால் இலங்கையின் நிலைமை முற்றிலும் மாறுபட்டதொன்றாக இருந்திருக்கும். ஆனால் 1948 பெப்ரவரி 4ஆம் திகதி சுதந்திரதினத்தன்று பிரிட்டிஷ் கொடி இறக்கப்பட்டு பௌத்தக் கொடி ஏற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தியவர்கள் பௌத்த பிக்குகள்.

அதாவது அன்றே இது பௌத்தர்களுக்குரிய நாடு என்ற அடிப்படையில் அதனை வலியுறுத்த ஆரம்பித்தவர்கள் அவர்கள். அரசியல் தலைவர்களிடம் இருந்ததைவிட பௌத்த பிக்குகளிடத்திலேயே இது பௌத்த சிங்கள நாடு என்ற எண்ணக்கரு மேலோங்கியிருந்தது.

அன்று பிக்குகளுக்கு மக்கள் மத்தியிலிருந்த செல்வாக்கை அரசியல் இலாபங்களுக்காக விரும்பிய அரசியல்வாதிகள் அவர்களின் ஆதரவைப் பெறுவதற்காக பௌத்த சிங்களச் சிந்தனைகளை நோக்கி செல்லத் தொடங்கினர்.

அதாவது அன்று ஏனைய மதங்களைக் குடும்பப் பின்னணியாகக் கொண்டிருந்த அரசியல் தலைவர்கள் தாம் பௌத்த சிங்களவர் தான் என்பதைக் காட்டிக்கொள்ள தீவிரமுயற்சி எடுக்கவேண்டிருந்தது. அப்போக்கு தீவிர வளர்ச்சிபெற்றதேயொழிய குறைந்துவிடவில்லை என்பதை 2000 ஆம் ஆண்டுத் தேர்தலில் திலக்கருணாரட்ணவின் விடயம் காட்டியது.

அதாவது தீவிர பௌத்த சிங்கள இனவாத அமைப்பான சிகல உறுமய அவ்வாண்டில் ஒரேயொரு ஆசனத்தைப் பெற்றது. அதற்கு அக்கட்சித்தலைவராக இருந்தபோது கிறிஸ்தவரான திலக்கருணாரட்ணவை நியமிக்க அக்கட்சி மறுத்தது. இவ்வாறு சிங்கள உயர் தலைவர்கள் பௌத்த சிங்களவர்களாக இருக்க வேண்டும் என்பதில் பௌத்த பிக்குகள் தீவிரசெல்வாக்குச் செலுத்தினர்.

உயர்தலைவர்கள் மட்டுமல்ல உயர் பதவிவகிக்கும் அதிகாரிகள் கூட பௌத்த மத பீடாதிபதிகளிடம் ஆசீர்வாதம் பெறும் நடைமுறை சிறிலங்காவில் காணப்படுகின்றது. எனவே அரசியலிலும் சரி, அதிகாரவர்க் கத்திடமும் சரி செல்வாக்குச் செலுத்து பவர்களாக பௌத்த பிக்குகள் உள்ளனர்.

அவ்வாறு இருந்தும்கூட அரசியலில் நேரடியாக ஈடுபடுபவர்களாக இருந்தும்கூட நாடாளுமன்ற அரசியலில் பிக்குகள் கடந்த ஆண்டில் முற்றுமுழுதாக நுழைந்ததைக் காணமுடிந்தது. நாடாளுமன்றத்தேர்தலில் இவர்கள் போட்டியிட்டு சிறிலங்காவிலிருந்து 9 பௌத்த பிக்குகள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகினர்.

இவர்கள் நாடாளுமன்றத்தேர்தலில் போட்டியிடுவதைப் பலபௌத்த மத உயர் பீடங்கள்கூட வரவேற்கவில்லை. போட்டி யிலிருந்து பௌத்த பிக்குகள் வெளியேற வேண்டும் என பலதரப்பிலிருந்தும் வலியுறுத்தப்பட்டது. சிலர் தேர்தலில் வெற்றி யீட்டியபின் அவர்கள் தமக்குப் பிடித்தவர்களைப் பதவியில் அமர்த்திவிட்டு அரசியலில் இருந்து விலகிவிடுவார்கள் என்று எதிர்பார்த்தார்கள்.

ஆனால் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை. 9 பிக்குகளும் நாடாளுமன்றம் சென்றனர். இவர்களில் இருவர் முதல் நாளிலேயே கட்சிமாறி ஆளும் கட்சியில் இணைந்துவிட்டனர். சிலர் கடத்தப்பட்டனர்.

அன்றையதினம் நடைபெற்ற சபாநாயகர் தெரிவுக்கான வாக்கெடுப்பில் இவர்களே தீர்மானிக்கும் சக்தியாக இருந்தமையால் இறுதியில் தாக்குதலுக்கும் உள்ளாகினர்.

இவர்களின் இந்த நிலை அவர்களுக்கு சமுதாயத் திலிருந்த செல்வாக்கில் ஏற்பட்ட வீழ்ச்சியையே காட்டியது எனலாம். ஏனெனில் 1948இல் இவ்வாறு பௌத்த பிக்குகளை பகிரங்கமாகத் தாக்கியிருக்க முடியாது.

இதேவேளை தேர்தலுக்கு முன்னதாகவே இந்த பௌத்த பிக்குகள் தங்கியிருந்த விகாரைகளின் அருகே வெள்ளைக்கொடிகள் கட்டப்பட்டன. அதாவது இவர்களின் இறுதிச் சடங்குகள் நடப்பது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி இவர்களை எச்சரிக்கும் முயற்சியில் ஜே.வி.பி ஈடுபட்டது.

இவ்வாறு வணக்கத்துக்கும் மதிப்புக்கும் உரியவர்களாக ஆலோசனைகளை வழங்குபவர்களாக இருந்தப்பிக்குகள் அவர்களின் அரசியல் பிரவேசம் காரணமாக தமது மதிப்பை இழந்தனர்.

அதேவேளை அரசியல் ரீதியாக இவர்கள் பெற்றுள்ள பலமானது சிறிலங்காவைப் பாதிப்பதாக உள்ளது. அதாவது இப்பொழுது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் தடைப்பட்டுப்போயிருக்க இவர்களும் ஒரு காரணமாக இருக்கின்றனர்.

தீவிரவாதிகளாக உள்ள இப்பௌத்த பிக்குகள் இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண்பதற்கு முற்றிலும் எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்துபவர்களாகவே காணப்படுகின்றனர்.

இவர்களும் ஜே.வி.பியினரும் இணைந்தால் 48 ஆசனங்கள் இவர்களின் வசம் செல்கின்றன எனவே 21 வீதத்துக்கும் மேலான ஆசனங்களைக் கொண்டுள்ள இவர்கள் உறுதியாக சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரானவர்களாகவே இருக்கின்றனர்.

சமாதான நடவடிக்கைகளைத் தாம் ஆதரிப்பதாகக் கூறும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனப்பூர்வமாக அதற்கு ஆதரவு தெரிவித்ததாக இல்லை. இன்று ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையே அவர்களைச் சமாதானம் குறித்துப் பேசவைத்துள்ள நிலையில் இந்த 21 வீதமானவர்களின் தீவிரமான எதிர்ப்பு என்பது சமாதானம் குறித்த அவநம்பிக்கையை ஏற்படுத்தக்கூடியதாகும்.

எனவே அன்றும் சரி இன்றும் சரி இலங்கையின் அமைதி நிலையைக் கெடுப்பவர்களாக அதற்கு எதிரானவர்களாக அதற்கு எதிராக மக்களைத் தூண்டிவிடுபவர்களாகப் பௌத்த பிக்குகள் உள்ளனர். இவர்களின் அரசியல் செல்வாக்கு அரசியல் தலையீடு என்பன வற்றிலிருந்து வளர்ச்சியடைந்து அரசியல் பிரவேசம் என்பது இலங்கைக்குப் பெரும் சாபக்கேடாகவே அமைந்துள்ளது.

இதனை இனங்கண்டு பெல்லன்வில பௌத்த பீடாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார். உண்மையில் சாந்தி, சமாதானத்தை பௌத்த பிக்குகள் விரும்புவார்களாயின் அவரின் அறிவுரைப்படியே பௌத்த பிக்குகள் நடக்கவேண்டும். மக்கள் மத்தியில் சாந்தி, சமாதானத்தை நிலை நாட்டும் பணியில் பௌத்தபிக்குகள் ஈடுபடுவார்களாயின் இலங்கைக்கு இப்பொழுது பிடித்துள்ள சாபக்கேடு முற்றாகவே நீங்கும்.

**வேலவன்**

## நேர்நோக்கு

# விவசாயிகளின் நெருக்கடி



கடந்த இருபது ஆண்டு காலத்துக்கு மேலாக போரினால் பாதிக்கப்பட்ட எமது தாயக மக்கள் போர்க்காலங்களில் எதிர்கொண்ட பிரச்சினைகளைவிட தற்காலத்தில் மிகக் கூடுதலான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். அந்த வகையிலே விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற கூடுதலான விவசாயிகள் தமது விவசாய விளைபொருட்களை சந்தைப்படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அதாவது மிகவும் பின்தங்கிய பகுதிகளில் வாழ்கின்ற பெருமளவான விவசாயிகள் தமது விவசாய விளைபொருட்களை சந்தைப்படுத்துவதற்கு அவர்களுக்கான போக்குவரத்து வசதியின்மை வீதி திருத்தப்படாமை போன்ற பிரச்சினைகளால் அவர்களின் விளைபொருட்களை சந்தைப்படுத்த முடியாதுள்ளனர்.

அந்த வகையிலே வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பின் தங்கிய பிரதேச விவசாயிகள் போர்க் காலத்திலும் சரி சமாதான காலத்திலும் சரி ஒரே நிலையில்தான் இருந்து வருகின்றனர்.

ஆரம்பகாலத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலிருந்து பெருமளவான விவசாய விளைபொருட்கள் கொழும்பு உள்ளிட்ட தென்னிலங்கைப் பிரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

ஆனால் இன்று நிலைமை மாறி நாளாந்தம் தென்னிலங்கையிலிருந்து விவசாய விளைபொருட்கள் பெருமளவில் தமிழர் தாயகப் பகுதிகளுக்கு வருகின்றன. இதனால் தென்னிலங்கை விவசாயிகள் மேலும் வளப்படுத்தப்படுகின்றனர். அவர்களின் விவசாய நடவடிக் கைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. இதனால் தமிழர் தாயக விவசாயம் பாதிக்கப்படுகின்றது. இதனை நடைமுறைப்படுத்தவேண்டியவர்கள் அல்லது ஊக்குவிக்க வேண்டியவர்கள் யார் என்பதுதான் கேள்விக்குரிய விடயமாகும்.

அடுத்து இன்று கால்நடை வளர்ப்போர் எதிர்கொள்கின்ற பிரச்சினை மிகவும் நெருக்கடியான ஒரு விடயம். அதாவது வன்னியைப் பொறுத்தவரையில் அதிக எண்ணிக்கையிலான கால்நடைகள் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள விவசாயிகளிடம் உள்ளன. அவற்றை பருவ பயிர்ச்செய்கைக் காலங்களில் கட்டிப் பராமரிக்க வேண்டும் அல்லது விவசாய நடவடிக்கைகளைப் பெரிதும் பாதிப்படையச்செய்துவிடும்.

இவற்றைப்பராமரிப்பதற்கு சீரான மேய்ச்சல் தரவைகள் இல்லை. மேய்ச்சல் தரவைகளுக்காக ஒதுக்கப்பட்ட தரிசு நிலங்கள் அத்துமீறிப் பிடிக்கப்பட்டு சட்டவிரோத குடியேற்றங்களும், விவசாய நடவடிக்கைகளும் விஸ்தரிக்கப்பட்ட நிலையில் இவ் மேய்ச்சல் தரவைகள் குடியிருப்பும் பயிர்ச்செய்கை நிலமுமாக மாறியுள்ளன. மாந்தை கிழக்கு, துணுக்காய் உதவி அரச அதிபர் பிரிவுகளிலுள்ள கால்நடைகள் பயிர்ச்செய்கைக்காலங்களில் வவுனிக்குளம், அலைகரைப் பகுதிகளில் மேய்ச்சலுக்காகக்கொண்டு சென்று பராமரிக்கப்படும். ஆனால் அங்கு காட்டுவிலங்குகள் அந்தக் கால்நடைகளை அழித்து வருகின்றன. பருவமழை அதிகரித்தால் வவுனிக்குளத்தின் நீர்மட்டம் உயர்வடைந்தவுடன் கால்நடைகளை வேறு இடங்களுக்கு நகர்த்த வேண்டும். இது ஒரு பாரிய பிரச்சினை. இது தவிர பால் ஏற்றுமதி என்பதை எடுத்துக் கொண்டால் ஏ-9 சாலையை அண்டிய மாங்குளத்தில் வைத்து பால் கொள்வனவு செய்யப்படுகின்றன.

பெருமளவான கால்நடை வளர்ப்போர்கள் பின்தங்கிய பகுதிகளிலிருந்து பாலை ஏற்றுமதி செய்ய முடியாது. காரணம் போக்குவரத்து வசதியின்மை, பாலைப் பழுதடையாமல் கொண்டு சென்று சந்தைப் படுத்தக்கூடிய வாய்ப்பின்மை இவ்வாறான பிரச்சினைகளினால் கால்நடை வளர்ப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதனால் கால்நடை வளர்ப்போர் எந்தவித நன்மையையும் அடையமுடியாத நிலை காணப்படுகின்றது.

இவ்வாறான பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் உரிய நடவடிக்கைகளை எடுத்து கால்நடை விவசாயத்தை ஊக்குவிக்கவேண்டும். இதனால் ஒரு தன்னிறைவான விவசாயத்தை அடைய முடியும்.

இது ஒருபுறம் பின்தங்கிய பிரதேசத்தில் சிறு குளங்களின் கீழ் நெற் செய்கைகளை மேற்கொள்கின்ற பெருமளவான விவசாயிகள் பெருமளவான முதலை வைத்துக் கொண்டு எந்த வேலைகளையும் செய்யக்கூடிய வசதியில் இல்லை. ஏதோ ஒரு கடன் திட்டங்கள் மூலம் தமது போகச்செய்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அறுவடைக்காலங்களில் அவ்வாறான கடன்களை மீளச்செலுத்துகின்றனர். இது ஒருவகையில் உதவியாக இருக்கின்றது. ஆனால் பின்தங்கிய பகுதிகளுக்குச்சென்று விவசாய விளைபொருட்களை அதாவது உழுந்து, நெல் போன்றவற்றை கொள்வனவு செய்யும் வியாபாரிகள் பெருமளவு இலாபம் தேடக்கூடிய வகையில் குறைந்த விலையில் அவற்றைக் கொள்வனவு செய்கின்றனர். இதனால் பெரிதும் உற்பத்தியாளர்களே பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளினால் கூடுதலான விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர்கள் தொடர்ந்தும் பின்தங்கிய நிலையிலேயே வாழவேண்டியுள்ளது.


**சு.பாஸ்கரன்**

## முத்துஐயன்கட்டுக்கு ஒரு பயணம்


# சமாதானத்தின் கவர்ச்சி கிராமங்களுக்கு கிடையாது





















புதுக்குடியிருப்பு நகரிலிருந்து வலது புறமாகப் பிரிந்து செல்லும் வீதியில் சிலமைல் தூரம் சென்றதும் மதுபோதையில் தள்ளாடும் வயோதிபரைப்போல தள்ளாடத்தொடங்கியது அந்த வாகனம்.

செப்பனிடப்படாத அந்த செம்பாட்டு மண் வீதி நாம் சென்ற வாகனத்தைக் குலுக்கிய குலுக்கலில் அதிஷ்டம் ஏதும் வரவில்லை பதிலாக வயிற்றுக்குள் சற்று நேரத்திற்கு முன்னர் நாங்கள் விழுங்கிய பணிசும், வாழைப் பழமும் தான் வெளியில் வரும் போல இருந்தது.

இப்படித்தான் இப்போதுமிருக்கிறது எங்களது கிராமங்களிற்கான பயணங்கள்.

சமாதானத்தின் மூன்று வருடங்களிற்கு மேற்பட்ட துயரத்தைத்தரிசிக்க வேண்டுமானால் அரங்கத்தில் ஏற அரிதாரம் பூசிய பெண்ணைப் போல மினுங்கும் ஏனைன் சாலையை விட்டு இறங்கி கிராமங்களிற்குள் நுழைய வேண்டும்.

அப்போது தெரியும் மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்களா, என்பது? நகர மாந்தர்களுக்கு சமாதானத்தின் மீது இருக்கும் கவர்ச்சி இந்த கிராம மக்களுக்குக்கிடையாது.

இதற்கு இந்த மக்கள் தம் சிறகுகளுக்குள் போராளிகளைக் காத்தவர்கள் என்பதால் அவர்களுக்கு எது முடிவாக இருக்க வேண்டுமென புரிகிறது.

அதனால் தான் இந்த மக்கள் உறுதியாய் இருக்கிறார்கள். நாம் கிளிநொச்சியிலிருந்து பழம்பெரும் விவசாயக்கிராமமான முத்துஐயன் கட்டுக்கிராமத்திற்குப் புறப்பட்டோம்.

இன்னமும் எங்கள் பண்பாட்டின் அடையாளங்களையும், எமது பழைய வாழ்வியலின் கூறுகளையும் சுமந்தபடி ஜீவகளையோடு இந்த கிராமம் வாழ்கிறது.

கிராமத்தின் அழகு அப்படியே... காடுகளிற்குள் இருந்து அறுத்தோடிகள் அள்ளி வந்த நீரால் வீதியின் மருங்கில் மண்ணரிப்பு ஏற்பட்டதாலும் யாரோ கைதேர்ந்த சிற்பிபுதிய கலை நயத்தோடு மண்ணில் செதுக்கிய சிற்பம் போல ஒன்று. அதைத்தாண்டி சற்று தூரம் சென்றவுடன் சிறுகுளங்கள் இல்லை..... இல்லை.... அவற்றை அந்த மக்கள் குளங்கள் என்று அழைப்பதில்லை பதிலாக "மோட்டை" என்றே அழைக்கிறார்கள்.

அந்த 'மோட்டை'களைப்பார்த்தவுடன் எங்கோ ஒரு கவிதையில் வாசித்த'கரிய குன்றுகள்' கண்களுக்குள் விரிந்தன.

கல்லாய், அசையாக்குன்றாய்த் தொ[illegible]ம் கற்பாறைகளுக்குப் பதிலாக, அடிக்கடி [illegible]ய் அசைத்து தலைநிமிர்த்தி.... வால் சுழற்றி நீருக்குள் அமிழ்வதும் பின்னர் எழுவதுமாய் எங்களை வரவேற்றது அந்தக்கரிய குன்றுகள் போலிருந்த 'எருமைகள்'.

பாலுக்காய்... உரத்துக்காய்... உழவுக் காய்... என அந்த மக்களின் பொருளாதாரத்தின் பங்காளிகள் மோட்டைகளுக்குள் அட்டகாசமாய் குளித்துக்கொண்டிருந்தார்கள்.

இதையும் தாண்டிப் போனவுடன் 'முத்து ஐயன்கட்டு' குளத்திலிருந்து வகிடு எடுக்காத ஒரு பெண்ணை நினைவுபடுத்தியபடி நாணத்தால் வளைந்து நெழிந்து ஓடிவரும் வாய்க்கால்...

அந்த வாய்க்காலில் வரும் நீரை தன் வயிற்றில் சுமந்தபடி சிறு குளங்கள்.

பெயர் தெரியா ஒரு சிறுகுளத்தின் நடுவில் ஒரு பட்டமரம். அதன் உச்சியில் ஏதோ ஒரு பறவையின் எச்சத்திலிருந்து முளைத்த ஒரு பச்சைமரம். அதன் ஒரு கிளையில் அப்போது தான் நீராடிவிட்டு தலைதுவட்டும் நீர்க்காகம் ஒன்று தன் சிறகுகளை அகலவிரித்து அசைத்து அசைத்து வருக... வருக... என்று... அழைத்தது எங்களையா... கிழக்கில் உதித்துக்கொண்டிருந்த சூரியனையா என்று இனங்கான முடியா அழகு. இப்படித்தான் முத்துஐயன்கட்டு கிராமத்தின் வாயில் எங்களை அன்று தன்னுள் உள் வாங்கியது. கிராமத்துக்குள் நுழைந்த எங்களை முத்துஐயன்கட்டு குளத்திலிருந்து நீரைக் காவிவரும் பெரிய வாய்க்கால் வீதிக்கும் குடியிருப்புக்கும் நடுவில ஓடிக்கொண்டிருந்தது.

வீதியிலிருந்து வீட்டுக்கும் வீட்டிலிருந்து வீதிக்குமாய் அந்த வாய்க்காலைக் குறுக் கறுத்துப் போட்டிருந்த மெல்லிய காட்டுத்தடிகளில் அசுரவேகத்தில் ஓடிவரும் சின்னஞ் சிறுசுகள்.

அச்சமறியாது... சிரித்தபடி ஓடிவரும் சிறுசுகளைப் பார்க்க அற்புதமாய் இருந்தாலும் காலிடறுப்பட்டால் நீருக்குள் வீழ்ந்து விடுவார்களே என்று பயந்து நாங்கள் கண்களால் துலாவிய போது எங்குமே காணவில்லை அந்த குடியிருப்புக்களை மக்கள் சென்றடைவதற்கான திட்டமிட்டுக் கட்டப்பட்ட பாலங்களை..... முத்துஐயன்கட்டு கிராமத்தைச்சேர்ந்த கந்தசாமி ஐயாவின் வீட்டை சென்றடைந்த நாம்.

எப்படி ஐயா இருக்கு முத்துஐயன்கட்டு என்றோம். என்னத்தைத் தம்பி சொல்லுறது. ஒருகாலத்தில் யாழ்ப்பாணத்தில இருந்து உழைப்புக்காய் வெளிக்கிடு எண்டால் ஒண்டு விசுவமடுவுக்கு வெளிக்கிடுவினம் இல்லாட்டி முத்துஐயன்கட்டுக்கு வெளிக்கிடுவினம்.

அந்த அளவுக்கு விவசாயத்துக்குப் பேர் போன இடம். இண்டைக்கு எதைச்செய்தாலும் எதுவும் கிடையாது எண்ட நிலைமையில இருக்கினம்.

நெல்லை சூடடிச்சா வீட்டுக்க கிடக்கு... செத்தல் விக்கப்போன எல்லா இடத்திலையும் தூத்துக்குடி மிளகாய் கிடக்கு, வெங்காயம் பிடியக்கட்டி வீட்டுக்கவச்சு இருக்கிறம். இப்படித்தான் போகுது எங்கட நிலைமை.

கிடக்கிற நகைய அடைவு வச்சு தோட்டம் செய்துபோட்டுப்பாத்தா காணியில வருமானமும் இல்லை. கழுத்தில கிடந்த நகையும் இல்லை.

முந்தி எத்தனை'பம்போசுகள்' வச்சுப் தோட்டம் செய்த இந்த கிராமத்தில இப்ப எல்லா பம்போசுகளும் துருப்பிடிச்சுப்போய் கிடக்கு.

காணியள விட்டு வெளியேறின சனங்களும் சில காணிகளில குடியிருக்கும் சனத்துக்கான ஆவணங்களை வழங்கி அதுகள தட்டிவிடுற நோக்கமும் யாருக்கும் இருக்கிறதா தெரியல்ல.

எல்லாத்துக்கும்மேல எங்களுக்கு ஒழுங்கான ஒரு ஆசுப்பத்திரி கிடையாது. இஞ்சேயிருந்து யாருக்கும் பாம்பு கடிச்சாக்கூட பன்னிரண்டுமைலுக்கு அப்பால இருக்கிற புதுக்குடியிருப்புக்குத்தான் போகவேணும் என்கிற நிலைமை.

எங்களுக்குத் தம்பி ஒரு நல்ல ஆசுப்பத்திரி வசதிய செய்து தரவேணும். நாங்கள் குழந்தை குட்டியளோட இருக்கிறனாங்கள்.

நாங்கள் மருத்துவ வசதிக்கு எவ்வளவு கஷ்டப்படுறம். மருத்துவ வசதி எண்டா போக்கு வரத்தும் எங்களுக்குப்பிரச்சினையா இருக்கிறது. ஒரு பஸ்தான் வந்துபோகுது. அதுவும் சிலநேரங்களில பழுதாகிப்போடும். பிறகு எங்களுக்குக் கஷ்டம் தான்.என்றவரிடம் ஏன் உங்களின் உற்பத்திப் பொருட்களை விற்க முடிவதில்லையா என்கிறோம்.

தம்பி இப்பவெல்லாம் "தம்புள்ளயிலிருந்து மரக்கறி வேண்டிய மட்டும் எல்லா இடமும் வருது. இதால எங்கட மரக்கறியளுக்கு கிராக்கி கிடையாது. தம்புள்ள மரக்கறிய ஓரளவுக்கு கட்டுப்படுத்தினா உள்ளூர் விவசாயிகள் நன்மையடையக்கூடிய மாதிரி இருக்கும்.

வடபகுதி விவசாயிகளின் சந்தை வாய்ப்பை குறிவைத்து உருவாக்கப்பட்ட தம்புள்ள சந்தையின் தாக்க அதிகாரம் விவசாயிகளைச் சுவைக்கத் தொடங்கிவிட்டதைத் தெளிவாக உணரக்கூடியதாக இருந்தன.

இப்படித்தான் அடிப்படை கட்டுமானங்கள் எல்லாம் எந்த அபிவிருத்தியும் இன்றி கிடப்பதைக் கிராமத்தின் சிறு வீதிகள் உணர்த்தின. நாம் கந்தசாமி ஐயாவிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட நாம் முத்துஐயன்கட்டு குளத்துக்குச் சென்றோம்.

நீரை வயிற்றுக்குள் சுமந்தபடி இருந்த அந்த குளத்திலிருந்து நீர் செல்வதற்கான வாய்க்கால்கள் புனரமைக்கப்படாததால் பெருமளவு நீர் விரயமாக்கப்படுவதைக் காணக் கூடியதாக இருந்தது.

பின்னர் ஒரு முதியவரை அணுகி முத்து ஐயன்கட்டு கிராமத்தைப்பற்றிக் கேட்டோம்.

தம்பி இதுவொரு பழம்பெரும் கிராமம் இஞ்ச'முத்துஐயன்' என்ற ஒரு சிற்றரசன் இருந்ததாகக் கூறப்படுகிறது. அவனுடைய தொன்மையான சான்றுகள் சில இப்பொழுதும் இங்கிருக்கிறது என்றார்.

இந்தத் கிராமமக்களால் 'பூதம் அடுக்கிய கல்லு' என்று அழைக்கப்படும் இடத்திற்குச் சென்றோம். நீர் ஓடிவரும் கற்தொடருக்குக் குறுக்காக மிகவும் நேர்த்தியாகப் பாரிய கற்களை அடுக்கிய ஒரு சுவரைக்கண்டோம்.

இதனைப் பூதங்கள் அடுக்கியதாக இந்தக் கிராமமக்கள் கூறுகிறார்கள். இது தொடர்பாக அந்த முதியவர் கூறும் போது முந்தி வற்றாப்பளை பக்கமாக ஒரு அரசன் இருந்தவனாம். அவனுக்கும் 'முத்துஐயன்' அரசனுக்குமிடையில முரண்பாடு வந்தாப்போல அங்கால தண்ணி போகாமல் கட்டின கட்டுத்தான் இது எண்டு சொல்லுறவை என்றார். அதோட முத்துஐயனா...முத்தரையனோ எண்டது எனக்கு குழப்பம் என்றார்.

ஆனால் அந்த பிரதேசத்தில் பற்றை மண்டி சிதைவடைந்து கொண்டு போகிறது ஒரு வரலாற்றுச்சான்று.

ஒரு திட்டமிட்ட ஆய்வின் மூலமாக பழைய வரலாற்றையும், அங்கிருக்கும் இத்தகைய தொல்லியல் சான்றுகளையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் காணப்படுகிறது.

நாம் அங்கிருந்து மாலை மங்கிய நேரம் புறப்பட்டோம். அதே கிராமத்தின் அழகிய காட்சிகளை இரசித்தபடி.

-வேழினி-

# தகவல்களும் தடயங்களும்




காலனித்துவ ஆதிக்கத்தோடு முகை அவிழ்த்த கைத்தொழிற் புரட்சிக்கு, ஜேம்ஸ்வாற் இன் ஒற்றை நீராவி இயந்திரக் கண்டுபிடிப்பே பின்னாளில் முதுகெலும்பாகித் தாங்கி நின்றது என்றால் அது மிகையாகாது. அப்படியே நகர்ந்த காலச்சக்கரம் 1947இல் 'ட்ரான்ஸ்சிஸ்ரர்' யுகத்தினை மெல்லத் தட்டிப்பார்த்து உள்ளே நுழைந்தபோது, எண்ணிலடங்கா வாய்ப்புக்களோடு தகவல் யுகம் என்றதொரு புதியதைக் கண்டு சொக்கிப்போய்விட்டது. இந்த வகையில் நகர்ந்து கொண்டிருக்கும் இந்த உலகத்தினை, அதிக அளவில் பாதிக்கக்கூடியதாயும் தகவல் தொழில்நுட்பம் மாறிவிட்டது.

இந்தத் தகவல் தொழில் நுட்பத்தினை வெறுமனே 'கணனி' என்ற ஒரு வடிவத்தினுள் வைத்துப் பார்க்காமல், அதற்கு அப்பாலும் விரிந்து விளங்கிக்கொள்ளுதல் அவசியம். இன்று தகவல்களே நம்மை இயக்குகின்றன. அப்படியானால் இந்தத் தகவல்களில் மேலாண்மை கொள்வோர் நம்மையும் மறைமுகமாக அதாவது சனநாயக வழிமுறைகளுக்கொப்ப (?) இயங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும் அல்லவா. அதற்காக எல்லாவற்றையும் சந்தேகக் கண்கொண்டு புறம்தள்ளத்தேவையில்லை. ஏனென்றால் இதேதகவல் தொழில்நுட்பம் தான் கல்வி, மானிடம், மருத்துவம், அறிவியல், வரலாறு என்று பல தளங்களிலும் அவற்றின் மேம்பாட்டிற்கு ஆதாரசுருதியாய் விளங்குகின்றன. Big Brothet is watching you என்ற புதிய வழக்குத்தொடர் மூலம் குறிக்கப்படும் தனிநபர் பற்றிய அவதானிப்புகளும், தகவல் கையாடல்களும் அவற்றிற்கான வாய்ப்புகளும் பற்றி மட்டுமே இக் கட்டுரையிலே நோக்கப்படுகிறது.



உள்ளே நுழைய முதல் 2 தகவல்கள் ஐரோப்பிய நாடொன்றில் குறிப்பிட்ட சில வியாபார நிறுவனங்களுக்காக, தபால்-ஊழியர்கள் மூலம் தனிநபர்களின் விருப்பு வெறுப்புக்குறித்த தகவல்கள் பெற்றுக்கொடுத்தது பற்றிய சர்ச்சை நீதிமன்றம் வரை சென்றிருந்தது. ஒருவர் கார் சம்பந்தப்பட்ட சஞ்சிகையினை மாதாந்தம் பெற்றுவருகிறார். இன்னுமொருவர் புதிய இலத்திரனியல் கருவிகள் பற்றியதைப் பெற்றுவருகிறார். இவற்றை விநியோகம் செய்து வரும் தபால்ஊழியர்கள் மூலம் குறித்த தகவல்களைப்பெற்று, அவர்களைக் குறிவைத்து விளம்பரக் கையேடுகளை தினமும் அனுப்பி ஆசைகாட்டி, தம் வியாபார வலைக்குள் விழுத்துகின்றனர். தள்ளுபடி விலையென்றும், குறைந்த கட்டுப்பணம் என்றும் மயங்கி தமக்குத் தேவையில்லாத பொருட்களை வாங்கி இவ் வாடிக்கையாளர்கள் நெருக்கடிகளுக்குள் உள்ளாகித் துன்புறுகின்றனர். இதற்கு மேலாக அண்மையில் ஸ்பெயின் நாட்டில் இடம்பெற்ற குண்டுவெடிப்புடன் தொடர்புடைய பொருளொன்றிலே காணப்பட்ட கைரேகைகள், இன்னுமொரு நாட்டிற்கு அனுப்பப்பட்டன. 'அல்கெய்தா' அமைப்பைச் சேர்ந்தவர்களினுடையதாக இருக்கலாமா என்று அந்தக் குறித்த நாட்டின் தகவல் சேகரிப்புடன் ஒப்பீடு செய்வதற்காகவே இது அனுப்பப்பட்டது. கிடைத்த பதில் அனுப்பப்பட்ட நாட்டிலே முஸ்லிம் மதத்திற்கு மாறிய அப்பாவி வெள்ளையர் ஒருவரின் கைரேகையுடன் அது ஒத்துப் போகிறது என்பதுதான். கொஞ்சக் காலத்திற்கு ஸ்பெயின் குண்டு வெடிப்புடன் சம்பந்தப்பட்ட பயங்கரவாதியாக அனைவருக்கும் காட்சி அளித்த அந்த அப்பாவி, கடுமையான முயற்சிகளின் பயனாக இறுதியில் குற்றமற்றவராக நிரூபிக்கப்பட்டார். எல்லாம் சுமூகமாகிய பின்னர் அபாண்டமாகப் பழி சுமத்தியவர்கள் கூறிய சமாதானம் என்னவென்று நினைக்கிறீர்கள்? "ஸ்பெயின் தந்த கைரேகையின் பிரதி சரியில்லை".

இனி விடயத்துக்கு வருவோம். தனது நாட்டுக்குள் வந்து செல்பவர்கள் பற்றிய தகவல்கள் விடயத்தில் அமெரிக்கா தற்போது மிகவும் இறுக்கமான விதிமுறைகளைக் கையாளத்தொடங்கியிருக்கிறது. 'அல்கெய்தா' அமைப்பினரின் அச்சுறுத்தல்களிலிருந்து காத்துக் கொள்வதற்கான இந்த நடைமுறையில் விதிமுறைகளிலிருந்து இதுவரை காலமும் விதிவிலக்களிக்கப்பட்டிருந்த ஐரோப்பிய நாடுகள் உட்பட 26 நாடுகள் மேலதிகமாக இந்த இறுக்க வலைக்குள் புதிதாக வருகின்றன. இதனூடாக வருடத்திற்கு 13 மில்லியன் வருகையாளர்களைப் பற்றிய அனைத்துத் தகவல்களும், அவர்களது களஞ்சியத்தில் உள்ளீடு செய்யப்படும். அமெரிக்க விசா விண்ணப்பத்தில் கோரப்பட்டிருக்கும் அனைத்துத் தகவல்கள் உட்பட மேலதிக விசாரணைகளில் பெறப்படுபவை, விசாரணையாளர்களின் தனிப்பட்ட கருத்துக்கள் உட்பட, மேலதிக விசாரணைகளில் பெறப்படுபவை. விசாரணையாளர்களின் தனிப்பட்ட கருத்துக்கள் யாவும் இக் களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்பட்டு, தேவையான போது ஒப்பீடு செய்யப்படும்.

நல்ல காலம், சிறிலங்கா இவ்வளவு தூரம் வளர்ச்சி அடையவில்லை என ஆறுதல் கொள்கிறீர்களா? நாடு தழுவிய நியமமான கணிப்பீடுகள், தரவுச் சேகரிப்புக்கள் இலங்கையில் நடைபெற்றுக் கிட்டத்தட்ட 20 வருடங்களாக ஆகின்றன. இந்த யுத்தநிறுத்தகாலத்தினைப் பயன்படுத்தி தமிழர்கள் அனைவரினதும் முகங்களும், முகவரிகள் உட்பட ஏனையவை எல்லாம் எப்படி இருக்கின்றன என்று அறியும் ஆவல் அவாவி நிற்கின்றது சிறிலங்கா அரசு. அதைத் தவிர 'அனைவருக்கும் அடையாளஅட்டை' என்று முண்டியடிப்பதற்கு வேறெந்தக் காரணமும் அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை!

வாக்காளர்களே இல்லாமல் வாக்கு வேட்டையாடும் தந்திரத்தில் ஆழ்ந்த பக்திகொண்ட அவர்களா கள்[illegible]ாக்கைத் தடுக்கப்போகிறார்கள்.

இனி பாதச்சுவடுகளை விட உங்களைப் பற்றிய தகவல்களைத் துல்லியமாகத் தரக்கூடிய எண்ணியல் 'டிஜிற்றல்' தரவுகளைப் பற்றிக் கொஞ்சம் பார்க்கலாம். உலகக் கிராமத்திற்குள் (Global Village) உள்நுழைவதற்கான வாயிலென அழைக்கப்படும் இணையத்தளத்தின் பயன்களைச் சுகிக்கும் அதேநேரம், அதன் பின்தளத்திலே என்ன நடக்கலாம் என்பதை மேலோட்டமாக அறிந்துகொள்ளவும் இது உதவலாம். கூடவே இலங்கைத்தீவின் 30 வீதத்திற்கும் குறையாத மக்களால் பயன்படுத்தப்படுவதாகக் கணிப்புகள் தெரிவிக்கும் செல்லிடப்பேசிகளைப் பற்றியும் சில விடயங்கள்! கைத்தொலைபேசி அல்லது செல்லிடப்பேசி என அழைக்கப்படும் இவற்றின் அதிகரிப்பு ஒப்பற்றது. இந்தியாவில் கடந்த வருடத்தில் மட்டும் 1மில்லியன் (பத்துலட்சம்) செல்லிடப்பேசிகள் புதிதாக புழக்கத்திற்கு வந்துள்ளன. உலகம் பூராவும் எத்தனை பாவனையில் உள்ளன என்று நினைக்கிறீர்கள்? 1.5பில்லியன் (1500 000 000) ஆ... கடவுளே! உலகின் மொத்த சனத்தொகையே 6 பில்லியன் தானே! என்ன... "ஒவ்வொரு நாலாவது மனிதனும் என்ன செல்லிடப் பேசியுடனா திரிகிறான்?" என்று

(18 ஆம்பக்கம்பார்க்க..)

# பற்கள் கவனம்

பல்லுப்போனால் சொல்லு மட்டும் போகாது. எமது அழகும் சேர்ந்து போய்விடும்.எனவே நாம் பற்களை பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்தவேண்டும். குறிப்பாக இங்கு நாம் குழந்தைகளின் பற்களை பாதுகாப்பது பற்றிப் பார்ப்போம்.

தாய் வயிற்றில் குழந்தை வளர்ந்து வரும் போதே அதன் பற்கள் உருவாகத்தொடங்கி விடுகின்றன. இந்நிலை குழந்தைகளின் உறுதியான பற்களுக்கு கருவுற்ற தாயார் அதிகமாக பால் குடிப்பது நன்று. குழந்தைகளுக்கு நிரந்தரமான பற்கள் ஆறு வயதில் வெளிவர ஆரம்பிக்கின்றன. இருந்தாலும் குழந்தை பிறந்த இரண்டு மூன்று மாதங்களிலேயே அவை உருப்பெறுகின்றன. இந்த வயதில் குழந்தைகளுக்கு அதிக பால் கொடுப்பதாலும் விட்டமின் சொட்டுகள் கொடுப்பதாலும் பற்கள் நல்லமுறையில் அமைய வாய்ப்பு ஏற்படுகிறது.

இனிப்பு, மாப்பொருட்கள் என்பன அடிக்கடி பற்களின் மேல் பட்டுக்கொண்டிருப்பதால் பற்சொத்தை ஏற்பட அதிக வாய்ப்புப் உள்ளது. இதைவிட சொக்லேட் மற்றும் பலவகை இனிப்பு பொருட்கள் என்பன பற்களில் காணப்படும்போது இவற்றை பயன்படுத்தி குழந்தையின் வாய்க்குள் காணப்படும் நுண்கிருமிகள் தங்கள் இனத்தைப் பெருக்கிக்கொள்வதுடன் லாக்டிக் எனும் அமிலமும் உற்பத்தி செய்யப்படுகின்றது.

ஒருநாளில் எவ்வளவு நேரம் இவ்வாறான இனிப்புப் பொருட்கள் குழந்தையின் வாயில் உள்ளதோ அந்தளவுக்கு நுண்கிருமிகளும், லாக்டிக் அமிலமும் உற்பத்தியாகிவிடுகின்றன. நம் உடலுக்கு தோல் எவ்வாறு பாதுகாப்பு அளிக்கின்றதோ அதேபோல பற்களுக்கு டென்டைன் எனும் ஒருவகை எனாமல் பாதுகாப்பு வழங்குகின்றது. இந்த எனாமலை லாக்டிக் அமிலம் கொஞ்சம் கொஞ்சமாக கரைத்துவிடுகின்றது. பின்னர் கிருமிகள் அமிலத்தின் உதவியுடன் பற்களில் துளைகளை ஏற்படுத்தி உட்சென்று பல்லை சொத்தையாக்கிவிடுகின்றது. எனவே குழந்தைகளின் பற்களில் பெற்றோர்கள் நீங்கள் அவதானமாக இருப்பது நன்று.

மருத்துவம்

# தொல்லை தரும் பொடுகு

பொடுகுத்தொல்லை என்பது இன்று ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது. இது ஒழுங்கற்ற தலை பராமரிப்பால் ஏற்படுகிறது. பெரும்பாலும் இருபதிலிருந்து இருபத்தைந்து வயது வரையான காலப்பகுதியில்தான் இதன் தொல்லை அதிகமாக இருக்கும்.

பிட்டிரோஸ்போரம் ஓவேல் என்ற சிறிய காளான்தான் பொடுகு ஏற்படுவதற்கு மூலகாரணம். இது தற்போது மலாசேஷியா பர்ப[illegible] என அழைக்கப்படுகிறது. செபசியஸ் சுரபிகள் அதிகமுள்ள மற்றும் தலையின் மேற்புறச்சருமத்தில் இவ்வகைக் காளான் மிக அதிகமாகக் காணப்படுகிறது. இது அதிக அளவில் வளரும் போது இயற்கையாக செல் புதுப்பித்தல் தடைப்பட்டு அரிப்புடன் கூடிய பொடுகுகள் தோன்றுகின்றன. இதைவிட பின்வரும் காரணங்களாலும் பொடுகு ஏற்படலாம்.




கடினமான ஷம்பூ பயன்படுத்துதல், விட்டமின் பி அடங்கலான ஊட்டச்சத்துக்கள் மற்றும் தேவையான கொழுப்பு அமிலங்கள் செலினியத்தின் குறைபாடுகள்.

உணவு ஒவ்வாமை, அதிக வியர்வை, மற்றும் காரச்சோப்புகள்.

குளிர் அத்தோடு அதிக வெப்பம், இறுக்கிப் பிடிக்கும் தொப்பிகள், புற ஊதாக்கதிர்கள்,மனஅழுத்தம், கவலை போன்றனவும் காரணங்களாக அமையலாம். பொடுகு ஏற்படுவது ஒரு இயற்கையான செயலே. எனவே இதனை கட்டுப்படுத்தமுடியுமே தவிர முற்றாக அகற்ற இயலாது.

தினசரி மென்மையான ஷம்பூக்களை பயன்படுத்தி தலைமுடியை அலசுவது பொடுகினைக் கட்டுப்படுத்தும் முறைகளில் சிறந்தது ஆகும்.

பேரிக் அமிலத்தை நீருடன் கலந்து தலையில் தேய்த்து பின் இளஞ்சூடான நீரில் அலசலாம். இது பொடுகு நிவர்த்திக்கு ஏற்ற பழமையான முறையாகும்.

கடலை எண்ணையுடன் எலுமிச்சை சாற்றை சேர்த்து தலையில் சற்று நிமிடங்கள் ஊறவைத்து பின் முடியை கழுவலாம்.

தலையின் மேற்புறச் சருமத்தை வரட்சியாக்கும் அல்கஹோல் அடங்கிய சிகை அலங்காரப்பொருட்களையும் சிகை உலர்ப்பான்களையும் முற்றாகத் தவிர்ப்பது போன்றன பொடுகு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு சிறந்த வழிமுறையாகும். எனவே பொடுகுத் தொல்லை சம்பந்தமான வீணான மனக் குழப்பத்தை விட்டுவிட்டு கட்டுப்படுத்த இன்றே தயாராகுங்கள்.




# அறுபடாத வேர்கள்



நெழிந்து செல்லும் அந்தப் புளியடிவீதி முடக்கில்; மனித சஞ்சாரமே இல்லாமல் பற்றை மண்டிக் கிடக்கும் பெரிய வளவு.

வளவின் நடுவே அநாதரவாக விடப்பட்டிருக்கும் விசாரணை மண்டபமும், பாழடைந்த நாற்சார் வீடும்.

அழிந்துபோன அதிகார வர்க்கத்தின் ஆட்சி எதிர்வுகூரும் எச்சங்களாய்,

வாழ்ந்து, அழிந்துபோன கிராம அதிகாரியை நினைவுபடுத்திக்கிடந்தன.

அந்த வீதியால் போய் வரும் போதெல்லாம் கிராம அதிகாரியின் கையில் இருக்கும் வெள்ளிப் பூண் போட்ட பிரம்பும், வழுக்கைத் தலையும் வாட்டசாட்டமான உடல்கட்டும் தோளில் தொங்கும் ஆரணியஞ்சால்வையும் என் நினைவுக்கு வரும்.

ஒருமுறையேனும் என் கண்கள் அந்த மண்டபத்தையும் வீட்டையும் பார்க்கத் தவறுவதில்லை.

எனக்கு எட்டு வயதிருக்கும். அப்போதும் அவர்தான் எங்கள் கிராம அதிகாரி. சதாசிவம் பெயர் கேட்டாலே ஊர் நடுங்கும். அவரின் அதிகாரங்கள் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. அவர் எங்கடை ஆக்களைப் படுத்தின பாடு. வீட்டில வந்து அடிச்சு அடிச்சுக் கூட்டிக்கொண்டுபோனதைப்பார்த்திருக்கிறன். அழுதிருக்கிறன். ஆத்திரப்பட்டிருக்கிறன்.

எங்கட அம்மாவைக் கேட்டால்; "அவர்தானே கிராம அதிகாரி அவர் சொல்லுறதைச் செய்யாட்டி இப்பிடித்தான் நடக்கும். அவ்வளவு கொடியவன்'' என்று சொல்லி நடுங்குவாள். "உது பெரிய அநியாயம்'' என்று அப்பவே சொல்லுவன்.

அம்மா என்னை ஏசுவா. அதிகாரியின் காதில விழுந்துதோ அவளவுதான். ஊருமில்லை, ஆளுமில்லை என்பா. நான் பேசாமல் இருந்து விடுவன்.

இது வழமையான செயற்பாடுதான். அதிகாரி என்றால் சனங்களுக்கு கெடிக்கலக்கம்தான். எனக்கு ஏனென்று சரியாக விளங்காத காலம்.

எங்கடை ஊரிலை எல்லாம் ஏழைச்சனங்கள் எதுக்கெடுத்தாலும் கிராம அதிகாரியட்டைத்தான் போக வேணும். வயல்வேலை, தோட்ட வேலை, என்னவேலையெண்டாலும் அவரைக் கேட்டுத்தான் செய்ய வேணும். அவற்ரை இனசனத்துக்கெல்லாம் இதுகள்தான் கூலிகள். கொடுக்கிறதை வாங்கவேணும். இல்லாட்டி அடியும் உதையும்தான்.

கிராம அதிகாரி வீட்டில எல்லாம் இலவசமாகத்தான் செய்து குடுக்க வேணும். முந்தி மன்னர் காலத்தில இராஜகாரியம் என்றுதான் செய்யுறது வழக்கமாம். எப்பவும் இந்த ஏழை எளியர்தான் முதுகு முறிஞ்சவை என்று வாசித்த ஞாபகம்.

அந்தப் பரம்பரைதான் இதுவோ என்று ஐயுறவேண்டிக்கிடக்குது. அந்தக்காலம்தான் படிப்பறிவு குறைஞ்ச சனங்கள். இப்ப எல்லாரும் படிக்கிற காலம்.

இதனால தான் இந்தச் சனங்களைப் படிக்கவிடாமல் வேறதொழில் செய்யவிடாமல் அடிச்சு மிரட்டி தங்கட அடிமைக்குடிமைகளாய் வைச்சிருக்கப்பாக்கினம் என்று அப்ப எங்கட பெரியவை கதைக்கிறவை.

ஓ... எங்கட பெரியப்பா சொல்லுவார் எங்கடஊர் இருந்த நிலையை அவர் சொல்லச் சொல்ல எனக்குச் சரியான கோபம்தான் வாறது. அப்ப நான் சின்னப்பொடியன். என்ன செய்யிறது. அதிகாரி அறிஞ்சால் முறிச்சுப் போடுவான் என்ற பயம் எனக்கும் இருந்தது.

எங்கட மாமா கொஞ்சம் துணிஞ்சவர். அவர் ஊருக்கை சில நல்ல காரியங்கள் செய்யவேணும் எண்டு பாடுபட்டவர். வேற ஊருகளில இருக்கிற எங்கட சனங்களோட அவருக்கு நல்ல உறவு இருந்தது.

அவர் சொல்லுவார் நீ நல்லாய் படிக்கவேணும். உனக்கு ஆரும் ஏதும் செய்ய நான் விடமாட்டன். உப்பிடித்தான் எங்களையும் பயமுறுத்தி எங்கட படிப்புகளையும் கெடுத்தவங்கள். அரசாங்க உத்தியோகம் எங்களுக்குக் கிடைச்சால் தங்களை மதிக்கமாட்டம் என்று நினைக்கிறாங்கள். இதை நீ உணரவேணும். அப்ப அரசாங்கத்தில உத்தியோகம் பாக்கிறவைதான் பெரியவை. நாங்கள் அப்ப மூன்றாம் வகுப்புத்தானே படிச்சனாங்கள். பள்ளிக்கூடத்திலையும் எங்களுக்கு ஆக்கினைதான்.

எங்கடை பின்காணி மரமில்லாத வெட்டைக்காணி. அது எங்கடையில்லை. அது கிராம அதிகாரியின்ர ஆக்களின்ரைதான் ஒருத்தரும் வரயில்லை. எங்களுக்குப் பக்கத்தில இருக்கக்கூடாதென்று ஆரும் வீடு கட்டயில்லையாம். அதை வாங்குறதுக்கும் எங்கடை ஐயாவிட்டையோ மற்றவையட்டயோ காசில்லை. அவ்வளவு விலை.

பாவம் எங்கட சனங்கள் அண்டாடம் காய்ச்சியல் காசு எங்காலை வரும். ஆரும் வாங்கயில்லை. அந்தக் காணிக்கைதான் நாங்கள் யாட் விளையாடுவம். கொடி எடுப்பம், கிட்டி புள்ளு அடிப்பம், போளை சொட்டுவம். பள்ளிக்கூடம் விட்டுவந்தால் எங்கடை கூட்டம் எல்லாம் அதுக்கைதான் நிக்கும்.

அந்தக்காணி மூலையில ஒரு வேப்பமரம் சடச்சு, விசாலிச்சு, சோலைமாதிரி விரிஞ்சு நிண்டது. அதிலதான் பெரியாக்கள் கூடி இருந்து கதைப்பினம். தங்கட கதையள கதைக்கிறதோட எங்கடை விளையாட்டையும் இடக்கண் வலக்கண் பாப்பினம்.

நாங்கள் சின்னப்பொடியள் தானே சிலவேளை ஆளுக்கையாள் கொழுவலும் வரும் அப்ப அவையள் ஆரும் இருந்தால் கூப்பிட்டுப் பேசுவினம் அப்பவே எங்கட மாமா சொல்லுவார் "டேய் நாங்கள் எப்பவும் ஒற்றுமையாய் இருக்கவேணும். இல்லாட்டி எங்களை வாழவிடாங்கள் தெரியுமோ?'' என்று.

அப்ப எங்களுக்கு விளங்கயில்லை. இப்பதான் எங்கடை ஒற்றுமை எவ்வளவு பலம் என்றது விளங்குது.

அப்ப நாங்கள் வெட்டையில கிட்டிபுள்ளு அடிச்சுக்கொண்டு நிண்டனாங்கள் வேப்பமரத்தடியில கன பெரியாக்கள் கூடியிருந்து கதைச்சுக் கொண்டு இருந்தவை. நாங்கள் சின்னப்பொடியள். பெரியாக்கள் கதைக்கிற இடத்துக்குப் போகக்கூடாது எண்டு எங்கடபாட்டில விளையாடிக்கொண்டு நான் கிட்டிபுள்ளு அடிக்கிறபக்கம். மாறிமாறித்தானே அடிக்கிறது. நான் பட்டுப்போனேன். அப்ப ஒரு இடத்தில இருந்து பார்த்துக்கொண்டிருந்தன்.

அவையள் கதைச்சுக் கொண்டிருந்ததில கொஞ்சம் காதில விழுந்துது.

மாமா சொன்னார்...

நாங்கள் எல்லாரும் சேர்ந்து சங்கம் கூடுவம். மாதம் மாதம் உழைக்கிறதில ஒருரூபா போடுவம். எங்கட ஒற்றுமையைக் கண்டு மற்றவை எங்களை சுரண்டாமல் இருக்கட்டும்.

**முருகு பாரிமகன்**

பெரியப்பா ''சரி'' என்று சொன்னார்.

''நாங்கள் முதல்லை சங்கத்துக்குக் கொட்டில் போடுவம். எங்கடகாளி கோயிலிலை ஒரு பக்கமாப்போடுவம்''

இருந்தவை எல்லாரும் "ஓம்'' என்று தலையை ஆட்டிச்சினம். மற்றையவையை விட மாமா கொஞ்சம் கதைப்பார். புத்தகங்கள் வாசிப்பார். அவரைத்தான் தலைவராக இருக்கச் சொல்லிச்சினம்.

கதையைக் கேட்க எனக்கு விருப்பமாய் இருந்துது. மெல்ல மெல்ல அரக்கி அரக்கி போய் நல்லாய்க் கேட்கக்கூடிய இடத்தில இருந்தன்.

அப்ப, மாமா சொன்னார்,

"என்ன நடந்தாலும் நாங்கள் பயப்படக்கூடாது. எங்கடை தலை போனாலும் சங்கத்தை அழிக்கவிடக் கூடாது. எங்கடை வெற்றியள்தான் எங்கடை சந்ததிக்கு உதவப்போகுது".

கேக்கக் கேக்க விருப்பமாய் இருந்துது. நாங்களும் சின்னப் பொடியள் சேர்ந்து ஒரு சங்கம் கூடினால் என்ன என்ற யோசினை எனக்கும் வந்துது.

அப்ப மாமா சொன்னார்

இந்த விஷயம் எங்கட மட்டத்திலதான் இருக்கவேணும். இப்ப இது தெரிஞ்சால் அதிகாரி ஆக்களை வைச்சு கொட்டிலை கொளுத்திப் போட்டு எங்களுக்குத்தொந்தரவு தருவான். அதனாலை எந்தப் பயமுறுத்தலுக்கும் பணிஞ்சு போகாமல் காரியங்களை நடத்துவம்.

மாமா சொன்னதைக் கேட்டவுடன எனக்கும் ஒரு யோசினை வந்திட்டுது. இப்ப எங்கட பொடியளட்டை கதைச்சால் கதை பெரிசாகி வெளியில தெரிஞ்சிடும். எங்கட சங்கத்தைப் பிறகு பாப்பம் எண்டு நினைச்சுக்கொண்டு அவையின்ர பக்கமாகவே காதைத்திருப்பி வைச்சிருந்தன்.

எல்லாரும் உறுதியாய்த்தான் கதைச்சினம்.

விருப்பமில்லாட்டில் இப்பவே விட்டுட்டுப் போங்கோ நாங்கள் விரும்பிறவைய சேர்த்து சங்கத்தை நடத்துவம் என்று பெரியப்பா கூறியதும் எல்லாரும் பெரியப்பாவைக் கோபத்துடன் பார்ப்பது போல இருந்தது.

ஒருவர் ஆத்திரப்பட்டுக் கொண்டார்.

"அப்ப நாங்கள் பயந்தவங்களோ?'' "அவங்களட்ட தொண்டு துரவு செய்தாப்போல ரோசம் இல்லையெண்டு நினைக்கிறியோ. உப்பிடிக் கதையாதை. இது பொதுவிசயம், ஊர் ஒத்த விசயம்.''

பெரியப்பா சமாளித்தார்.

நான் நினைச்சன் சண்டைதான் வரப்போகுதென்று. மாமா சமாதானப்படுத்திவிட்டார். எனக்கு நல்ல திருப்தியாக இருந்தது.

''சரி நாளைக்கு கொட்டில் போடவேணும்.''

எப்ப?

இரவு

எல்லோரும் முடிவு எடுத்துக் கொண்டனர்.

"எங்கட ஐயா மரங்கள் தாறன் என்றார்.''

சித்தப்பா ஓலை தாறன் என்றார்.

இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொருபொருட்கள் தருவதாகச் சொன்னார்கள்.

மாமா எல்லாருக்கும் நன்றி கூறினார்.

"இனித்தான் எங்கட ஊருக்கு விடிவுவரப்போகுது''

மாமா மகிழ்ச்சியுடன் சொன்னார் எல்லோரும் எழுந்து போய்க் கொண்டிருந்தனர்.

அவர்கள் போகிற வரையும் நான் அந்த இடத்திலேயே இருந்தன். இன்னும் 'எங்கட பக்கம் ஆட்டத்தை முடிக்கயில்லை. அலையுற பக்கம் அடிக்கிறவரையும் ஆட்டம் முடியாதுதானே. விளையாட்டுமுறை அதுதான்.

பொழுது மங்கி இருள் மூடத் தொடங்கினது. இருண்டு போச்செண்டு எல்லாரும் வீடுகளுக்கு ஓட்டம் எடுத்தம்.

* * * * * *

மாமாவுக்கு நிம்மதியே இல்லை. அவர் மிக வேதனைப் பட்டார். நான் சின்னவனாக இருந்தாலும் எனக்கு சமூக முரண்பாடுகள் பற்றி விளக்கிச் சொல்லுவார். சமூக விடுதலையை நோக்கிய பயணத்தை நான் தொடர வேணும் என்று அவர் விரும்பியிருக்கவேண்டும்.

"டேய்தம்பி நாங்கள் இந்தச் சங்கத்தை உருவாக்க விரும்பினால் அதிகாரியும் அவன்ரை ஆக்களும் எதிராய்தான் செயற்படுவாங்கள் என்பது எங்களுக்குத் தெரியும்.

"புரட்சி என்பது சும்மா வராது. விடுதலைக்கு விலை கொடுக்க வேண்டிவரும் எண்டதை எங்கட சனம் புரியிற வரையும் இப்பிடித்தான் இருக்கும். நீ இதுகளை தெரிஞ்சு கொள் பிறகு நீயும் என்னைப்போல...''

அவர் பேச்சை நிறுத்தினார். கண்களில் நீர் உருண்டது.

''ஏன் மாமா அழுகிறியள்''

நான் கண்களைத் துடைத்தேன்.

''சங்கக் கொட்டிலை எரிக்கிறதுக்கு அதிகாரி எங்கடை ஆக்களைத்தானே ஏவிவிட்டிருக்கிறான். இதுதான் சமூகம். இதைப் புரிஞ்சு கொள்''

அவர் என் தலையைத் தடவினாரோ, ஆசீர்வதித்தாரோ எனக்குத் தெரியாது.

எனக்கு இப்போதுதான் புரிகிறது.

பகைவன் மரங்களைத் தறிக்கக் கோடரிக்கு மரத்தையே பயன்படுத்துவான் என்று.

சங்கக் கொட்டிலை எரிச்சுப் போட்டாங்கள் என்று மாமாவுடன் சேர்ந்து அத்தனைபேரும் ஆத்திரமடைந்தனர். இருந்தாலும் வேறு கொட்டில் ஒன்று போடுவதற்கு முயற்சிகள் [illegible]ந்தன.

அதிகா[illegible]ம் விடவில்லை. தடுப்பதற்கு ஆ[illegible]களை ஏவிவிட்டார். கத்தி பொல்லு[illegible]ன் வந்தவர்கள் சத்தம் போட்டனர். எனக்கு உதறல் எடுத்தது.

அதிகாரி அவருடன் சேர்ந்தவர்களும் எதையும் எதிர்கொள்ளத் தயாராகிவிட்டனர். கிராமமே திரண்டது.

கல்லெறியும் பொல்லடியும் ஐயோ என்ற அலறல் சத்தமும் அடியடா, பிடியடா என்ற சத்தங்களும் கேட்டன.

வந்தவர்கள் பயந்து ஓடினார்கள்.

கிராமமே திரண்டு நின்றது.

அதிகாரி தனது மிதிவண்டியில் வந்தார். அவரது கையில் வெள்ளிப் பூண்போட்ட அதிகாரக்கோல்.

அவர் மிகவும் கோபமடைந்தவராகக் காணப்பட்டாலும் வெளிக் காட்டாமல் அமைதியாகப் பேசினார்.

''நான் இருக்கிறன் என்று நீங்கள் யோசிச்சியளோ. எல்லாரும் சண்டைக்கு வெளிக்கிட்டிட்டியள். எனக்கு அறிவிச்சிருக்கலாம் தானே என்றார் முகத்தில் வடிந்த வியர்வையை சால்வையால் துடைத்துக்கொண்டே.

அங்கு நின்ற எவரும் பேசவில்லை. மாமாவே எல்லா விசயங்களையும் எடுத்துச்சொன்னார்.

தலையை ஆட்டியபடியே விதானையார் எல்லாத்தையும் கேட்டுக் கொண்டிருந்தார். பின்னர் ஏதோ யோசித்தவராக மிக மரியாதையாக ☞

## உறைவிடம்

# எமக்காக அவர்கள்



1995ஆம் ஆண்டின் முக்கிய காலப்பகுதி யாழ். மண்ணை விட்டு பெருமளவான மக்கள் வன்னி நோக்கிப் புறப்பட்ட வரலாற்று நிகழ்வு அது. சிறிலங்கா இராணுவத்தினரின் அத்துமீறிய செயற்பாட்டின் விளைவே இவ் இடப்பெயர்வாகும். இக்கால ஓட்டத்தில் அடிபட்டு மீண்டும் யாழ் மண்ணில் குடியேறியவர்களில் ரவி குடும்பமும் ஒன்றாகும். இந்தக் காலப்பகுதியில் தான் பலர் சந்தேகத்தின் பெயரில் பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் மூலம் கைதாகி அவர்கள் இன்று நிரந்தரமாகவே காணாமல் போயுள்ளார்கள். திடீர் சுற்றிவளைப்பு. திடீர் சோதனைகள், திடீர் விசாரணைகள் என யாழ். மண்ணில் இராணுவத்தின் கைகள் ஓங்கியே நின்றன.

ரவி குடும்பத்தினரின் வீடும் கூட எறிகணை வீச்சுக்குள் அகப்பட்டு விழுப்புண்கள் ஏந்தியே இருந்தன. அவற்றைச் சரிசெய்து சீர்ப்படுத்தும் முயற்சியில் ரவி அண்ணையும் அவர் மனைவியும் பிள்ளைகளும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது இங்கே கலைந்தகேசம் நீண்டதூரத்திலிருந்து ஓடி வந்தவர்கள் போன்ற தோற்றம். வந்த இருவரும் வேகமாக மூச்சை உள்வாங்கி வெளியேற்றிக்கொண்டிருந்தார்கள். அவர்களது கண்களில் எமக்கு ஆபத்து காப்பாற்றுங்கள் என்று கேட்பது போல இருந்தது.

"என்ன தம்பியாக்கள் வந்த வரத்தல அப்பிடியே நிக்கிறியள்,''

"அவன்ர 'ரவுண்டப்'புல' தப்பி வந்திட்டம். நீங்க இப்ப எங்களக் காப்பாற்ற வேனும். தாமதிக்கிற ஒவ்வொரு நிமிடமும் அவன் எங்களுக்குக் கிட்டவந்து கொண்டிருக்கிறான். என்றதும் வசந்தாம்மா அந்த மேசைய இழுத்து விறாந்தைக்குக் கொண்டுவா'' என்றவர் மேசையில் ஏறி 'லெவல்சீற் ஒன்றைக் களட்டினார். "தம்பியாக்கள் , இந்த மேசையால ஏறி உள்ளுக்குப் பொய் நிம்ம தியா இருங்கோ'' என இருவரையும் ஏற்றிவிட்டு மீண்டும் களட்டிய "லெவல்சீற்றை" மீண்டும் ஆணி வைத்து அடித்து மூடினார். மேசை இருந்த இடத்திற்குத்திரும்பியிருந்தது.

அவர் வீட்டைச் சுற்றிப் பார்ப்பவர்போல மேசன் கரண்டியை கையிலெடுத்தவாறு பின்பக்கம் வரவும் பின் வாசலால் இராணுவம் உள் நுழையவும் சரியாகத்தான் இருந்தது.

"ஐயே, கொட்டி வந்தது. ரெண்டு... ரெண்டு... கொட்டி..."

"ஓம்சேர்..."

"எங்க... எங்...க..."

"சேர்... இந்தா... இதால தான் ஓடுறாங்கள்" என்றதும் "ஒக்கம மெறபாற என்ன..." (எல்லோரும் இந்தப் பாதையால வாங்கோ) என்ற இராணுவ அதிகாரியின் கட்டளையைக் கேட்ட ஏனைய இராணுவத்தினர் முன்பக்க வாசலால் பிரதான வீதியை நோக்கி விரைந்தனர்.

அவர்கள் ரவி அண்ணையின் கண்ணிலிருந்து மறையும் வரை வீதியிலேயே நின்றார். அவர்கள் மறைந்ததும் உள்ளே வந்த ரவியண்ணை அவர்களை இறக்கியபோது வியர்வையால் தோய்ந்தவர்களாய் காட்சியளித்தனர்.

"தம்பி, அவங்கள் போட்டாங்கள். நீங்க எதுக்கும் கவனமாய் போங்கோ'' என்று ரவி அண்ணை கூற.

பொறுங்கப்பா, தேசிக்காய் தண்ணியக் குடிச்சுட்டுப் போங்கோ'' என நீண்ட குவளைகளை அவர்கள் கைகளுக்குள் திணித்தாள் வசந்தாம்மா. அந்த களைப்புக்கு தேசிக்காய் தண்ணி அமிர்தமாகவே இருந்தது.

**வி. தேவபானு**

---

# எனது மகன்



''டொக்... டொக்டொக்... டொக்...,

''அம்மா... அம்மா... கதவத் திறவுங்கோ...,

''ஆரது... அவசரமா தட்டுற மாதிரிக்கிடக்கு, புஸ்பா, நீ ஒருக்கா கதவப் போய்த் திறவன்.,

"ஏனம்மா, நீங்க துறந்தா குறைஞ்சா போயிடுவியள்...,

''அடுப்பில கறியெல்லோ கிடக்கு. அதுதான் உன்னைப் போகச் சொன்னனான். கதைச்சொண்டு ரீவிக்கு முன்னால இருக்கிறத விட்டுட்டுப்போ... போ...

மதுரா எழுந்து கதவைத் திறப்பதற்குள் பல தடவை தட்டப்பட்டுவிட்டன. அவள் திறக்கவே அந்தப் போராளி கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்து அவனே கதவை இறுகப் பூட்டினான்.

"அம்மா இல்லையா...?" என்றதும்

"அம்மா... ஒருக்கா இஞ்ச வந்து பாருங்கோவன்." என்னபுள்ள வாறன் என முணுமுணுத்தவாறு சமையலறையை விட்டு வெளியே வந்தவள் கதவோடு சாய்ந்துநின்ற அந்தப் போராளியைப் பார்த்ததும் திகைத்துப்போனாள்.

என்ன தம்பி வேனும்

''அம்மா சந்தேக்க வைச்சு ஆமிக்காரன் கூப்பிட்டவன். என்னில அவனுக்கு சந்தேகம் வந்திட்டுது. அதுதான் பின்னால் ஓடி இஞ்ச வந்தனான். [illegible] பத்துக்கு உ[illegible] மனிசர் இருந்தும் பயனில்லை. தம்பி நீ உள்ளுக்கு வா. மதுரா நீ இதுல இரு ஆரும் வந்து உள்ளுக்கு ஆர் இருக்கினம் எண்டு கேட்டா அண்ணாவும் அம்மாவும் எண்டு சொல்லு என்றவாறு அந்தப் போராளியை மளமளவென்று கையில் பிடித்து இழுத்தவாறு அறைக்குள் சென்றாள்.

உள்ளே போனதும் அவளது மகன் ரவியினது பாடசாலை சீருடையை எடுத்துக்கொடுத்து மாற்றிக்கொள்ளுமாறு கூறிவிட்டு வெளியே வந்து நேரத்தைப்பார்த்தாள். அது அவன் பாடசாலை விட்டுவரும் நேரத்தையே காட்டியது.

"தம்பி வெளிக்கிட்டிட்டியா...?

ஓமம்மா..."

''உன்ர உ[illegible]எல்லாத்தையும் கட்டிலுக்குக் கீழ [illegible]வாறு உள்ளே புகுந்தாள்.

அப்போது திறந்த வ[illegible]ல் உள்ளே புகுந்த இராணுவத்தினரில் ஒருவன்

"உள்ளே யார் இருக்காங்க நங்கி"

"அம்மாவும் அண்ணாவும் சேர்".

"வரச்சொல்லுங்கோ..." என்றதும் அவனும் அம்மாவும் வெளியே வர "அம்மா! இங்கால சின்ன கொட்டி வந்ததா...? இல்லசார். நாங்க காணேல்ல"

"வந்தா எங்கட காம்புக்கு வந்து சொல்லுறது

"ஓம் சேர்"

''அபிஙீன் என்னம்'' (நாங்க போட்டுவாரம்) என்று கூறியவாறு அவர்களைப் பார்த்து உறுமிய "ரோசி" நாயைப்பார்த்து ஏதோ சொன்னவாறு அவர்கள் வெளியேறினார்கள்.

அவர்கள் வெளியேறி கிட்டத்தட்ட ஐந்தா[illegible]நிமிடங்களில் உண்மையிலே அவள[illegible] மகன் யாழ். மத்திய கல்லூரியிலிருந்து வீடு வந்து சேர்ந்தான்.

---

"நீதானே சங்கத் தலைவர்'' மாமா "ஓம்" என்றார்.

"இது எங்கட ஊர் இனி இப்பிடி நடக்க நான்விடன் நான் அவங்களைக் கூப்பிட்டு விசாரித்துப்போட்டு இருத்திப் போட்டு வந்தனான். நீ ஒருக்கால் என்னோட வா இனி ஒரு சண் டையும் வராமல் சமாதானம் செய்து எழுதி எடுப்பம்" என்றார்.

மாமா சற்றுத்தயங்கினார்.

"நாங்களும் வாறம்'' என்று எல்லாரும் சொன்னார்கள்.

''வேண்டாம் வேண்டாம் தலைவர் மட்டும் வந்தால் போதும்" என்றார் அதிகாரி.

மாமாவும் எல்லாரையும் நிக்கச் சொல்லிப்போட்டு அதி காரியுடன் கூடிக்கொண்டு போனார்.

கனநேரமாக மாமா திரும்பி வரவில்லை. அதனாலை மாமாவைத்தேடி எல்லாரும் அதி காரியின்ர வீட்டை படையெடுத் தினம்.

இந்த ஒன்றுபட்ட திரளை அதிகாரியின்ர ஆக்கள் பாத்துக் கொண்டு நிண்டினம். என்ன நடக்குமோ என்ற பயம் அவையளுக்கு.

நான் என்ன செய்ய சின்னப் பொடியன் அம்மாவின்ரை அம்மாவின் தொங்கலில் இழுபட்டுச் சென்றேன்.

அதிகாரியின் சொந்தக்காரர் ஒருவர் சொன்னார்.

"எடிபிள்ளை உன்ரை தம் பியை அந்த அதிகாரி கெட்ட நாய் அடி அடியெண்டு அடிச்சுப் போட்டு பொலிசுக்குக் கொண்டு போறான் நீங்கள் அங்கை போங்கோ!"

அம்மா தலையில அடிச்சுக் கொண்டு ஓடினா நானும் பின் னால ஓடினன்.

இது நடந்து அன்று பின்னேரமே விடுபட்டு வீட்டுக்கு வந் தார். கையிலையும் காலிலையும் பத்துப் போட்டிருந்தார். ஆச்சி உணவு ஊட்டினார். அம்மா பக்கத்திலிருந்து தடவித் தடவி ஆறுதல் சொன்னார்.

முற்றத்தில் கனக்கச் சனங் கள் கூடியிருந்தனர். "எத்தினை தரம் சொன் னனான் கேட்டியே"

அம்மா கண்ணீர் சிந்தினார்.

மாமா சிரித்துக்கொண்டே சொன்னார்.

''இதுதானக்கா போராட்டம். நாங்கள் எங்கட சுதந்திரத்துக்காய் உயிரையும் இழக்கவேண்டி வருமக்கா. அந்த அதிகாரி என்னை அடிச்சான் கடைசியில எங்கட சாதியை இழுத்துப் பேசினான். தன்னை வெட்டக் கத்திகொண்டு வந்ததெண்டு பொலிசிலை பதிஞ்சான் கடைசியில அவன் கொண்டு வந்த சாட்சிக்காரன் கார்த்திகேசு என் னை கண்டிட்டு மாறிச் சொல்லிப் போட்டான் அதிகாரி சொல் லித்தந்தபடி தான் சொல்ல வந்த தென்று உண்மையைச் சொல் லிப்போட்டான்.

எங்கட பெரிய சங்கக்காரர் அறிஞ்சுபோட்டு அங்கை வந்து எனக்காக வந்திட்டினம். அவை பேசின இங்கிலிசிலை அதிகாரி ஏங்கிப்போனான். இனியொரு சோலியும் கொடுக்கமாட்டன் என்று ஒப்பந்தம் எழுதி கையெழுத்துப் போட்டு மன்னிப்புக் கேட்டார். எனக்கு ஐநூறுரூபா நஷ்டஈடு கொடுக்கச் சொல்லி பொலிஸ் அதிகாரி சொல்லிச் சமாதானம் செய்தார். நான் காசை வேண்டயில்லை.

அதிகாரி தலை கவிண்டு நிண்டதைப்பார்க்க எனக்கும் வேதனையாக இருந்துது. நாங்கள் விழுந்தாலும் எங்கள் வேருகள் அறுபடாது. மீண்டும் நிமிரும்... என்று கூறிக்கொண்டே எனது தலையைத் தடவினார்.

''நாங்கள் இனித்தான் நெருப்பில நடக்கவேணும். இது கள் அறுபடாத வேர்கள். இது களை பாதுகாத்துவிடுவம்"

நாங்கள் நெருப்பு ஆற்றில்தான் நீந்தி வந்தம். இப்ப எங்கட காலத்தில பல மாற்றங் களைக் கண்டிட்டம். மாமா இன்னமும் உயிருடன்தான் இருக்கிறார். எனக்கு இன்றும் வழிகாட்டியாக, அன்று எரிக் கப்பட்ட சங்கம் இன்று கட்ட டமாகத் தலைநிமிர்ந்து நிற்கிறது. அவரின் எதிர்பார்ப்பை நான் முன்னெடுத்துச் செல்கிறேன்.

---

## துயர் கசியும் வெளி

உப்பூறி ஈரலித்துப்போன
துயர் கசியும்
இருள் கவிந்த மௌனப் பெருவெளி
அகதி நாட்களின் காதல் சுவடுகள்
இனி நீடூழிக்கும்
காடுகளில் உறங்கும்
யாரும் மீட்காதபடி
சருகுகளும், முட்களும், புதர்களும் மூடிய
ஆரண்யக் காதல் எச்சங்களை
இனி யாரால் மீட்கமுடியும்
அலை நீளும் கரையிலிருந்து
வலியுதிர வலியுதிர
சிறகு சிதைந்த வண்ணத்துப்பூச்சியாய்
மனசு
பின்னோக்கிப்பறக்கிறது
கை சேராது கடலோடு போன
என்கண்மணியே.

சித்திரை 23 இரவு 7.15
கைபிடிக்க இன்று தானே
நாட்குறித்தோம்
சித்திரை முழு நிலவின்
கண்ணீராய்
இரட்டைத்தூணோடு கிடக்கிறது
தேவாலயம்.

ஆடையுமின்றி
பாடையுமின்றி
நிர்வாணப்பிணமாய்
நீ புதையிடப்பட்ட மணல் மேட்டில்
ஒற்றை மெழுகுவர்த்தியோடு நான்
மூசியெழும் காற்றோடும்
விம்முகின்ற ஊமை நிலவோடும்
பனியிரவின் தனி வெளியே
ஏகாந்த மௌனியாய் கிடக்கிறேன்
யுகத்துயரோடு
சிறகு சிதைந்த வண்ணத்துப் பூச்சியாய்
மனசு போகிறது திசையற்று.

அநாமிகன்

## புதுயுகம் படைக்க உன்னால் முடியும்

நிலம் பார்த்து நடவென
நிந்தனுக்குக் கட்டளைகள்
நித்தமும் பிறப்பித்தே
நிலத்தின் கீழுள்ள
பாதாளத்திற்குள்- உன்னை
நிறுத்தியவர்க்குப் பதிலடி ஈந்திட
நிமிர் கண்ணே!

நிமிர்ந்து பார்
நிலத்திற்கு மேல்
விரிந்து பரந்திருக்கும்
நிர்மலமான விசும்பைப்பார்
நீ அடிமையல்ல
நிமிர்ந்து நில்!
வானத்து அழகை ரசி
வானத்து வண்ண வீதியில்
வானம் பாடியாய் வலம்வா
வையகத்தைப்பார்
வையம் அரியதோர் அழகென
அப்போ புரிந்துகொள்வாய்!
புதுயுகம் படைத்திட உன்னால் முடியும்
புறப்படு பெண்ணே!

பராகு
பழம்பாசி

## முடியும்..!

முடியும் என்ற
பொழுதுக்காய்
காத்திருப்பதை விட
முடிந்த தென்ற
பொழுதை -நீ
காதல் செய்.







# திருக்கை

தட்டையான வட்டவடிவ உருவமைப்புக் கொண்டவை திருக்கை மீன்கள். இதுவும் சுறா மீனும் அடுக்குச் செவுளிகள் வகுப்பைச் சேர்ந்தவை. இதை இலாஸ்கோ பிராங்கை வகுப்பு என்பார்கள். திருக்கை மீனில் 350 வகைகள் உள்ளன. முதுகெலும்பிகளில் முக்கியமான பிரிவைச் சேர்ந்தவை. இவற்றின் முதுகெலும்புகள் குருத்தெலும்புகளினாலானவை. இவற்றிற்கு ஐந்து சோடிமுதல் ஏழுசோடி செவுள்கள் கொண்டைப் பகுதியில் அமைந்திருக்கும். அதே அளவு செவுள் பிளவுகளும் இருக்கும்.

30 செ.மீ நீளமுள்ள கொட்டு திருக்கையிலிருந்து 7 மீட்டர் நீளம்வரை வளரக்கூடிய மண்டா வரை பல இனங்கள் உள்ளன. இவற்றின் உடலின் மேற்புறம் பழுப்பு நிறத்துடனும் கறுப்புத் திட்டுக்களுடனும் காணப்படும். பொதுவாக வயிற்றுப்பகுதி வெள்ளையாக இருக்கும். இதன் மார்புத்துடுப்புகள் அகன்று முன்புறம் வரை நீண்டு தலையின் முன்புறம் இணைந்து இறக்கைபோல் காணப்படும். நீந்தும்போது இந்தத் துடுப்புக்களை மேலும் கீழும் அசைத்து நீந்துவதால் பார்ப்பதற்குப் பறப்பது போலிருக்கும். இவை தங்களுக்குத் தேவையான ஒட்சிசனை தலைக்கு மேலே அமைந்துள்ள இரு துளைகள் மூலமாகப் பெறுகின்றன. இதன் தலையின் அடியில் வாய் அமைந்துள்ளது. இதன் உணவு சிறு மீன்கள் ,சிப்பி நத்தைகள், நண்டுகள் முதலியன. இவற்றை அரைத்துண்ணும் படியாக இதன் பற்கள் தட்டையாக அமைந்திருக்கும். இதன் முட்டை தாயின் உடலிலேயே பொரித்து குஞ்சாக வெளி வரும்.



இதிலே மின் திருக்கை, கழுத்துத் திருக்கை, கொட்டு திருக்கை, மண்டா என்று நான்கு வகைகள் உள்ளன.கொட்டு திருக்கையின் வால் நீண்டு சாட்டை போலிருக்கும். அதன் முனையில் நச்சு முள் ஒன்றிருக்கும். மின் திருக்கை மின் அதிர்ச்சியை உண்டு பண்ணி எதிரியை செயலிழக்கச் செய்யும். இவற்றில் மண்டாவைத் தவிர மற்றவை ஆழ் கடலில் வசிப்பவை.

## சொற்சிலம்பம் - 86

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ண | ப் | வு | சி | ன் | னை | தீ |
| டு | கு | நீ | பா | ந் | மி | ங் |
| தி | லா | தி | கோ | னி | ணி | ஸ் |
| லி | அ | பி | ரி | டோ | சீ | ச் |
| மே | ட் | தா | ஷ் | ர் | ரி | னை |
| நை | ப | யா | சா | ஸ் | ரு | ம |
| யா | ல் | ரே | ஓ | கி | த் | அ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 84 இன் விடைகள்

01. இந்தோனேசியா.

02. சுண்டிக்குளம்.

## சொற்சிலம்பம் - 84 இன் பரிசுக்குரியவர்

க.அர்ச்சனா,
43, கணேசபுரம்,
கிளிநொச்சி.

## சொற்சிலம்பம் - 84 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. சி.சஜிதன், ஆயப்பகுதி, புளியங்குளம்.
02. அப்பன், உருத்திரபுரம், கிளிநொச்சி.
03. காஷ்மியா, இரத்தினபுரம், கிளிநொச்சி.
04. த.நிவேதாயினி, 7 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
05. செல்வானந், வேணாவில், புதுக்குடியிருப்பு.
06. க.சுகி, கோணாவில், கிளிநொச்சி.
07. பிரியா, சங்கானை, யாழ்ப்பாணம்.
08. தர்ஷா, வைரவபுளியங்குளம், வவுனியா.

01. எண்ணிக்கையில் குறைந்த நாடுகளைக் கொண்ட கண்டம்?

01) ......................................

02. இலங்கையின் தேசிய மிருகம்?

01) ......................................

சொற்சிலம்பம்-86
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

பெயர் :- ..........................................................

முகவரி :-..........................................................

..........................................................

## ஓட்டப்பந்தயம்...

பகுதி-04




நன்றி:- பன்டேடைம்ஸ்

# நாட்டுப்பற்றாளர் குலசேகரம்



மாவீரர்களின் ஈகத்தால் விடுதலைப் பயிர் இன்று மாபெரும் வளர்ச்சியடைந்துள்ளது. ஆனால் விடுதலைக்கான விதை விதைக்கப்பட்டு, முளை விட்ட பொழுது மிதிபட்டு அழிந்து விடாமல் வேலி போட்டு குருத்திலை வந்தபொழுது அவற்றை எதுவும் தின்று அழித்து விடாமல் காவல்காத்து பயிர் வாட விடாமல் நீர் ஊற்றி வளர்ப்பதுவே தொடக்கத்தில் அவசியமானதாகும்.

தமிழீழ விடுதலை வித்தை தேசியத் தலைவர் விதைத்தபொழுது அதற்கான காவல் பணியைச் செய்தவர்களில் முதன்மையானவர் நாட்டுப் பற்றாளராக இன்று போற்றப்படுகின்ற சேகரண்ணா என்று அழைக்கப்படும் குலசேகரம் ஆவார்.

தமிழீழத்தில் பிறந்து மலேசியாவில் தொடக்கக் கல்வியைப் பெற்றவர் இவர். தாய் நாடு திரும்பிய பின்னர் தனது சொந்த ஊரான உரும்பிராயில் வசித்துவந்தவர். உரும்பிராய் இந்துக் கல்லூரியில் தனது கல்வியை தொடர்ந்தார். தமிழ் மொழிமேல் பற்றுக்கொண்ட சேகரண்ணா மலேசியாவில் தொடக்கக் கல்வியைப் பெற்றதனால் ஆங்கில மொழியிலும் நல்ல ஆற்றல் உள்ளவராக விளங்கினார்.

சிறுவயது முதலே சீர் திருத்த எண்ணங்களை கொண்டிருந்த குலசேகரம் பகுத்தறிவு இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு சீர் திருத்தக் கருத்துக்களை மக்கள் முன் பரப்பி வந்தார்.இளமைக் காலங்களில் இவ்வாறு சீர்திருத்தம் பேசுபவர்கள் வயது அதிகரிக்கும் பொழுது அவற்றை விட்டு விடுவார்கள். ஆனால் சேகரம் அவ்வாறில்லாமல் தான் எந்தப் பகுத்தறிவுச் சிந்தனையுடன் வாழத் தொடங்கினாரோ இறுதிவரை அதை விடாமல் உறுதியோடு கடைப்பிடித்தார். இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்பினால் அவரது முழுச் செல்வமும் அழிந்து போயிற்று. அவ்வேளையிலும் கூட "ஐயோ கடவுளே" என்று கூக்குரல் போடாது உறுதியுடன் விடுதலைக் கான தன் பங்களிப்பை அவர் தொடர்ந்தார்.

**சிறுவயது முதலே சீர்திருத்த எண்ணங்களை கொண்டிருந்த குலசேகரம் பகுத்தறிவு இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு சீர் திருத்தக் கருத்துக்களை மக்கள் முன் பரப்பி வந்தார்.இளமைக் காலங்களில் இவ்வாறு சீர்திருத்தம் பேசுபவர்கள் வயது அதிகரிக்கும் பொழுது அவற்றை விட்டு விடுவார்கள். ஆனால் சேகரம் அவ்வாறில்லாமல் தான் எந்தப் பகுத்தறிவுச் சிந்தனையுடன் வாழத் தொடங்கினாரோ இறுதிவரை அதை விடாமல் உறுதியோடு கடைப்பிடித்தார். இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்பினால் அவரது முழுச்செல்வமும் அழிந்து போயிற்று. அவ்வேளையிலும் கூட "ஐயோ கடவுளே" என்று கூக்குரல் போடாது உறுதியுடன் விடுதலைக் கான தன் பங்களிப்பை அவர் தொடர்ந்தார்.**

விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டிராமல் தனது மகள் ஒருவரையும், மகன் ஒருவரையும் போராளிகளாக மகிழ்ச்சியுடன் அனுப்பி வைத்தவர் குலசேகரம். ஓயாத அலை 3 இல் மகன் மாவீரனாகிவிட்டான். மகள் பதினைந்து ஆண்டுகளாக இன்றும் போராளியாகவே தொடர்கின்றார். "ஊருக்கடி உபதேசம் உனக்கல்லடி" என்று வாழத் தெரியாதவர் அவர். சொல்லிலும் செயலிலும் ஒன்றையே பேணும் திட சிந்தனையாளர் அவர்.

தந்தை செல்வாவின் மேல் மிகவும் அன்பும் மதிப்பும் கொண்டிருந்தவர் குலசேகரம். தமிழரசுக் கட்சித் தலைவர்கள் அனைவரும் குலசேகரத்தின் அமைதியான ஆனால் உறுதியான கொள்கைப் பற்றை அறிந்து வைத்திருந்தனர். சட்டமறுப்புப் போராட்டங்கள் அனைத்திலும் பங்கு பற்றியவர். 1976 இல் வட்டுக் கோட்டைத் தீர்மானம் என்று கூறப்பட்ட தமிழீழத் தீர்மானத்தை சட்டத்தை மீறி விநியோகிக்கும் சட்ட மறுப்புப் போராட்டத்தில் குலசேகரத்தையும் தலைவர்கள் இணைத்துக் கொண்டனர். இன்று த.வி கூட்டணித் தலைவர்கள் என்று சொல்வோரைக் கூட அப் போராட்டத்தில் சேர்க்கத் தந்தை செல்வா விரும்பவில்லை. ஆனால் குலசேகரம் அதில் இணைக்கப்பட்டார். அச் சட்ட மறுப்புப் போராட்டத்தில் பங்கு பற்றுபவர்களுக்குச் சிறைத் தண்டனையுடன் அவர்களின் அசையும் அசையாச் சொத்துக்களும் பறிமுதலாகும் என்ற அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆட்சியாளர்கள் அறிவித்திருந்தனர்.

தமிழரசுக் கட்சியிலும், தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் இயங்கும் உறுப்பினராக இருந்த குலசேகரம் தொடக்கத்தில் அறப் போராட்டத்தை ஆதரித்து வந்தார். அப்பொழுது ஆயுதப் போராட்டச் சிந்தனை ஆக்கபூர்வமாக எழவில்லை. ஆனால் துடிப்பு மிக்க இளைஞனாக இருந்த சிவகுமாரன் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்துச் செயற்பட்டான். அப்பொழுது அவனது கண்ணில் ஒருவர் தென்பட்டார். அவர் தமிழரசுக் கட்சியில் இருந்தாலும் கூட ஆயுதப் போராட்டத்துக்கு எதிராக இருக்கமாட்டார். அவரை சில பணிகளுக்காக அணுகலாம் என்று நினைத்தான். அவனது நம்பிக்கையை நிறைவுசெய்தார் குலசேகரம். தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்கும் சிவகுமாரனுக்கும் ஓர் இணைப்புப் பாலமாகச் செயற்பட்டார். சிவ குமாரனின் மிகவும் நம்பிக்கைக் குரிய அண்ணனாகக் குலசேகரம் திகழ்ந்தார்.

தமிழராய்ச்சி மாநாட்டுடன் இறுதி நாள் அட்டூழியங்களின் பொழுது அல்லற்பட்ட மக்களுக்கு உதவி செய்து விட்டு கடைசியாக அவ்விடத்தை விட்டு அகன்ற வர்களில் குலசேகரமும் ஒருவர். இதில் படுகொலையுண்ட வர்களின் நினைவாக எழுப்பப்பட்ட நினைவுத் தூண்களை சிறிலங்கா காவல் துறையினரும், இராணுவத்தினரும் உடைப்பதும் மீண்டும் நிறுவுவதும் அதை மீண்டும் அவர்கள் உடைப்பதும் நடைபெற்ற நிகழ்ச்சிகளாகும். வெட்ட வெட்டத் தளிர்க்கும் மரம் போல் அவ் நினைவுச் சின்னங்கள் மீண்டும் மீண்டும் நிறுவப் பாடுபட்டவர்களில் குலசேகரமும் ஒருவராவார்.

1974 இன் பிற்பகுதியிலிருந்து 1983 இன் பிற்பகுதி வரை ஒன்பது ஆண்டுகள் தன் வீட்டிற்கு வந்து சென்ற இளைஞன் யாரெனத் தன் மனைவி, பிள்ளைகள், தாய், தகப்பன் ஆகியோருக்கு யார் எனக் கூறாமல் மறைத்து விட்டார் குலசேகரம். சிங்களப் பேரினவாத அரசால் தேடப்பட்ட ஒருவர் தனது வீட்டிற்கு வருகிறார் இவர்தான் பிரபாகரன் என்ற தகவல் சிறிது கூட கசியக் கூடாது என்ற காரணத்தால் இவ்வாறு கவனமாக நடந்து கொண்டார்.

அவர் 1983 இல் நடந்த தமிழினப் படுகொலைகளையடுத்து "சன்டே" இதழில் தலைவர் பிரபாவின் முகப்புப்படம் வெளிவந்ததைக் கண்ட பின்புதான் குலசேகரத்தின் வீட்டிலிருந்தவர் களுக்கும் தமது வீட்டிற்கு வந்தவர் யார் என்பது தெரிந்தது. எத்தனையோ இரவுகள் வீட்டுக்காரர் அறியாமலே அவ்வீட்டில் அவர் தங்கிச் சென்றுள்ளார்.

ஆனால் தமிழினத்தின் விடுதலை தலைவர் பிரபாகரனின் சரியான நெறிப்படுத்தலில் நெருங்கிக் கொண்டிருப்பதை நினைத்து மகிழ்ச்சி கொண்டிருந்தார். இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்பால் தனது தொழிலை மீண்டும் முன்னெடுக்க முடியாமல் துன்பப்பட்டார். அவர்கள் இவரது இல்லத்தை நோக்கி வீசிய குண்டு வீட்டின் அருகிலேயே வீழ்ந்து வெடித்தது. அக்குண்டு வீழ்ந்த இடத்திலேயே இவர் தனது மனைவியின் நகைகளை பாதுகாப்பிற்காக புதைத்து வைத்திருந்தார். குண்டு வீச்சால அவற்றையும் முற்றாக இழந்து விட்டிருந்தார். ஆனால் அவர் இழக்காதது "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்ற இலட்சிய வேட்கையைத்தான்.

குலசேகரத்தின் அஞ்சலி உரையில் ஒருவர் குறிப்பிட்டார் தலைவரை மறைத்து வைத்துப் பாதுகாத்த குலசேகரத்தின் வீடு விடுதலைபெற்ற தமிழீழத்தில் நினைவுச் சின்னமாகப் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்று. அதே போன்று தன் சொத்துக்கள் அனைத்தையும் இழந்து தன் மக்களையே போராளிகளாகவும் (ஒருவர் மாவீரர்) தமிழீழத்துக்குத் தந்த குலசேகரம் மிகச் சிறந்த மனிதர்.

**- கதிர் -**




புலிகளின் விமானம் குறித்து இந்தியா கவனஞ் செலுத்துகிறது.

"ஆடு நனையுதெண்டு ஓநாய் அழுது"

கொலைகளைத் தடுக்க 'பீல்ட்பைக்' படைகிழக்கில் செயலாற்றும்.

"பாலுக்குப் பூனைக் காவல்"

சிவராமின் படுகொலை கண்டிக்கப்பட வேண்டியது- ஜே.வி.பி.

"முதலைக் கண்ணீர்"

ரணில் அழைப்பை நிராகரித்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியது- சனாதிபதி

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"

அரசாங்கத்துள் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக இணக்கப்பாடில்லை. - மகிந்த ராஜபக்ஷ

"அடிமடியில் கட்டிய நெருப்பு"

அரசாங்கம் கவிழும் நிலை ஏற்பட்டாலும் விடுதலைப் புலிகளுடன் பொதுக் கட்டமைப்பை உருவாக்கியே தீருவேன்- சனாதிபதி

"பண்டாரவெடி"






# தங்கி வாழ்தல் வேண்டாம்

நாம் வாழும் வாழ்க்கை என்பது வளம்கொண்டதாக இருக்கவேண்டுமானால் அதனை புத்திசாலித்தனமான முறைகளைக் கொண்டு கையாள பெண்களான நாம் முயற்சிக்க வேண்டும்.

வெறுமனே சும்மா முயற்சியில்லாமல் இருந்து கொண்டு எம்வாழ்க்கை வளம்பெறவில்லையென அலட்டுவதால் பயனில்லை. நாம் எப்பொழுதும் மற்றவரை எதிர்பார்த்து இருக்கக் கூடாது. அப்படி எதிர்பார்ப்புக்கள் கூடும் போதே நம்முடைய முயற்சிகள் யாவும் மழுங்கடிக்கப்படுகின்றன. எம்மால் முடியுமானவரை எதையும் முயற்சி செய்துபார்க்கவேண்டும்.

இன்றைய வீடுகளில் உள்ள ஒரு சில பெண்கள் தம் பொன்னான நேரத்தையும் வீணடித்து வீணான ஊர் வம்புகளிலும் மாட்டுப்பட்டுத் தவிக்கின்றனர். இதற்கு பொறுப்பானவர்கள் தாங்கள் தான் என்பதை அப்பெண்கள் உணர மறுக்கின்றனர். இதனால் நடப்பது என்ன என்பதை ஒவ்வொரு பெண்களும் தெளிவாகப் பார்த்தால் மிகவும் விளக்கமான விடைகள் கிடைக்கும்.

ஒரு குடும்பத்தின் நிர்வாகப் பங்கு என்பது சீரான ஒரு பெண்ணின் தலைமையில் நடந்தால் அதன் வளர்ச்சியென்பது சிறப்பாக இருக்கும். பெண்கள் தம்முடைய வேலைகளை அந்தந்த நேரத்திற்குச் செய்துவிட்டு தமக்கு தேவையான நேரத்தை மீதப்படுத்த வேண்டும். அப்படியான நேரத்தை பயனுள்ள வழிகளில் பயன்படுத்த வேண்டும். அப்படி நாம் செய்தால் எம்முடைய வாழ்க்கையின் தரம் மேம்படும்.

சில பெண்கள் எந்நேரமும் ஆண்களின் கைகளைத்தான் எதிர் பார்க்கிறார்கள். இம்முறை தவறு. எங்களால் முடியுமென உழைக்க வேண்டும். அப்போது எங்கள் கைகளிலும் பணம் இருக்கும். குடும்பத்தில் கஸ்ரமான நிலைவரும் போது அப்பணம் பேருதவியாக இருக்கும். நாம் இக்கட்டான நிலையில் இருக்கும்போது பிறருடைய உதவி தேவைதான். எந்நேரமும் அதனை எதிர்பார்ப்பது உதவி என்று பொருள்படாது. உபத்திரவம் என மாறிவிடும்.

மனிதனாகப் பிறந்த நாம் எம்மால் இயலாது என்று சொல்வதற்கு ஒன்றுமில்லை. எம்மால் இயலுமானவரை உழைத்து இயலாமை என்ற ஒன்றை எங்கள் வாழ்வில் இருந்து அகற்றவேண்டும்.

சு. சிவாஜினி

## மாஸ்மலோ புடிங்



சமையல் குறிப்பு

தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| சீனி | -1கப் |
| நீர் | -1 1/2 கப் |
| முட்டை | -4 |
| ஜெலற்றீன் | -1 1/2 மே.க |
| வனிலா | 1 தே.க |

செய்முறை:-

- சீனியை ஒரு கப் நீர் சேர்த்து நூல்பதம் வரை காய்ச்சி இறக்கவும்.
- ஜெலற்றீனை 1/2 கப் நீரில் கரைத்து சீனிக்கரைசலுடன் கலக்கவும்.
- முட்டை வெண்கருவை நன்றாக அடித்துக் கரைசல் ஆறிய பின் கலந்து பின் அடிக்கவும்.
- கலவை தடிப்பாக வரும்வரை அடித்து வனிலாவையும் கலந்து குளிரூட்டியில் வைக்கவும்.

# நம்பிக்கை

மனித சமுதாயத்திலே தாழ்வுக்கும், உயர்வுக்கும் நம்பிக்கை என்பது இன்றியமையாததாகத் தென்படுகின்றது. மனிதனுடைய வாழ்வில் நம்பிக்கை இல்லாவிட்டால் துடுப்பில்லாத படகு போன்றவனாகிறான். நாம் பயணிக்கும் பாதையில் ஏராளமான தடங்கல், சிரமங்கள், தோல்விகள் என ஏராளமான சம்பவங்கள் எமது மனதை விரக்தி அடையச் செய்கின்றன. அதற்கு எதிர் நீச்சல் போடுவதிலேயே மனிதனுடைய வெற்றி அமைகின்றது. நாம் எந்த வகையில் தோல்வியடைகின்றோம், விரக்தியடைகின்றோம் என்பதனை அறிவோமானால் அதனை எவ்வாறு தீர்க்க முயற்சி செய்கின்றோம் எனும் பொழுது அவ்விடத்தில் எமக்கு தன்னம்பிக்கை வேண்டுமென்பது தான் கருத்து.

அதாவது பற்று சுயமுயற்சி, தன்னம்பிக்கை எந்தவொரு வேலைக்கும் இந்த மூன்றும் அவசியம் தேவைப்படுகின்றது. ஒரு வேலையைச் செய்வதாயின் அதில் முதலில் பற்றுக்கொள்ள வேண்டும், பின்பு அதை செய்வதற்கான முயற்சி எடுத்தல் வேண்டும். இந்த இரண்டும் ஒருமித்து எம்மிடம் சங்கமிக்கும் போது தன்னம்பிக்கை என்ற ஒரு ஓர்மம் எம்மை வெற்றியாளனாக மாற்றிவிடுகின்றது.

சில நண்பர்கள் கூறுவார்கள் நான் நம்பிக்கையுடன் செய்தேன் அது தோல்வியடைந்து விட்டது. எனக்கும் இந்த வேலைக்கும் சரிப்பட்டுவராது வேறு வேலைக்குச் சேரப் போகின்றேன் என்று. அந்த வேலையிலும் அவனுக்கு அதேகதிதான். இதற்கு விடை காண்பதாயின் மேலே குறிப்பிட்ட மூன்று விடயங்களும்தான். இதனைக் கருத்தில் கொண்டு முயற்சி செய்யும்போது தோல்வியே கிடையாது.

மு.கவிதரன்

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

# வீட்டுமருத்துவக்குறிப்புகள்

- *முகப்பருக்கள் அதிகமாகும் போது எண்ணெயில் பொரித்த உணவைத் தவிர்க்கவும். தினமும் 2 லீட்டர் தண்ணீராவது குடிக்கவும்.*
- *வயிற்றுப் போக்கு வந்தால் சிறிது உப்பும் சீனியும் சேர்த்துக் கொதிக்க வைத்த நீரை அருந்தவும். நிறைய இளநீர் அருந்தவும்.*
- *மூக்கில் பொருக்கு ஏற்பட்டால் அது அடிக்கடி பிய்ந்து போய் இரத்தக் கசிவு ஏற்படும். மாதுளை மொட்டைப் பசு நெய்யில் போட்டுக் காய்ச்சி அந்த நெய்யில் காலையிலும் இரவிலும் ஒரு சொட்டு நாசித் துவாரங்களில் தடவி வர பொருக்கு ஆறி உதிர்ந்து விடும். மூக்கில் இரத்தம் வருவதும் நிற்கும்.*

# சிரிப்பொரு கொடை

இன்றைய இயந்திர உலகில் வாழும் நாம் யாவரும் சிரிப்பை மறந்தும் அதனை விரும்பாமலும் வாழ்வது எம் வாழ்வை துன்பக் கேணியில் இட்டுச் செல்கின்றது. எத்தனை வகையான துன்பம் எம்மை வாட்டியபோதும் எம் மனம் நகைச்சுவைகளில் ஈடுபடும் போதும் சிரிப்பு என்ற ஒரு வரப்பிரசாதம் எமக்கு கிடைக்கின்றது.

அந்தப் பொழுதுகளில் எம் மனம் சகலவிதமான சஞ்சலங்களையும் மறந்து சுகம் காணுகின்றது. இப்படியான சிரிப்பை வரவழைக்க நம்மில் எத்தனை பேர் முற்படுகின்றோம் என்பது கேள்விக் குறியே?

இயற்கையால் படைக்கப்பட்ட உயிரினங்களில் மனிதனாகப் பிறந்த எமக்கு மட்டும் சிரிப்பு சொந்தமானது. இது பற்றி நாம் ஒவ்வொருவரும் ஆழமாகவும், தெளிவாகவும் சிந்திக்கவேண்டும். எம்வாழ்வில் சிரிப்பு என்பதை ஒரு மருந்தாகக் கருதவேண்டும். ஒருவன் என் நேரமும் சதா தன்னைப்பற்றியே சிந்தனை செய்வான் ஆயின் அவன் வாழ்வில் சிரிப்பு என்பது , சிறகொடிந்த பறவையாகிவிடும். நமக்கு மட்டும்தான் துன்பம் என்று எண்ணி சிலர் எந்நேரமும் யோசனையோடு தம் வாழ்நாட்களைக் கழிக்கின்றனர். நாம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையின் அத்தியாயங்களையும் புரட்டிப்பார்க்கவேண்டும். அப்படியானால் எம் வாழ்வின் பிரச்சினைகள் எமக்கு சுலபமாகும். எந்தக் குழப்பம் வந்தபோதும் எம் மனது குழப்பமடையாமல் பார்ப்பது நம் பொறுப்பாக இருக்கவேண்டும்.

இன்றைய வீட்டிலுள்ள ஆண் பெண்களின் முகங்களில் சிரிப்பின் ரேகைகளே மறைந்து எதையோ பறிகொடுத்துத் தவிப்பது போன்ற காட்சியோடு தம்மை வெளிக்காட்டுகின்றனர்.

எம்முடைய சுமைதாங்கியான எதையும் தாங்கும் மனதில் பல இன்ப துன்பங்கள் இருக்கும். அதனை அடுத்தவர் வெளிப்படையாக அறியாமல் இருக்க எம் மனதிற்குள் புதைக்கிறோம்.

நாம் குடிப்பது கூழானாலும் கொப்பளிப்பது பன்னீராக இருக்கவேண்டும். மனதில் இருக்கும் சுமைகளைச் சுகமாக்குவது சிரிப்பு ஒன்றுதான். எதையும் சாதாரணமாக எடுக்கப் பழக நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

எம்வாழ்க்கையில் துன்பத்தால் எம் இன்பத்தின் கதவுகள் அடைக்கப்படும்போது வேறு ஒரு வழியை திறக்க முயற்சிக்கவேண்டும். இறைவன் ஒரு வாசலை மூடிவிடும்போது இன்னுமொரு வாசலை எமக்காக உருவாக்கியுள்ளான் என்பதை நாம் உணர மறுக்கின்றோம். நாம் தான் உருவான புதிய வழிகளின் கதவுகளைத் திறக்கவேண்டும்.

துன்பத்தில் தவிக்கும் மனதை நாம் வேறு வழியில் திசைத்திருப்ப வேண்டும்! நாம் எவ்வளவு வசதியானவர்களாக இருந்தபோதும் மனம் வலிமை கொள்ள[illegible]து எம் பணம் பயனற்ற[illegible] மாறிவிடும்.

இவ்வு[illegible]ல் வாழும் நாம் எதிர்கால [illegible]ழ்க்கைக்காக நிகழ்காலத்தை இன்பமாக்கி வாழவேண்டும். நிகழ்காலம் என்பதே நிஜம். சிலர் எதிர்காலத்தை எண்ணி இருக்கும் இன்பங்களையும் தொலைத்து விடுகின்றனர். நாம் இவ்விடயங்களை பார்த்து தேவையற்றவற்றை மறந்து விடவேண்டும். அப்படியானால் சிரிப்பு எம் வாழ்வில் சிறகடிக்கும். சுகமும் பிறக்கும்.




குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.

நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்—47

பெயர்:........................................

முகவரி:........................................

........................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# மக்களின் பிரச்சினைக்கு அழுத்தம் கொடுத்து வரையப்படுவதே மக்கள் இலக்கியம்

## மூத்த படைப்பாளி செம்பியன்செல்வன்



ஈழத்து இலக்கியத்துறையில் கடந்த நாற்பது வருடங்களிற்கு மேலாக பல்வேறு பரிமாணங்களில் இயங்கிவரும் செம்பியன்செல்வன் தமிழ் இலக்கியத்துறைக்குக்கிடைத்த படைப்பாளிகளில் முதன்மையானவர். ஈழத்து நவீன இலக்கியத்தின் புத்தெழுச்சியுடன் 1960ஆம் ஆண்டுகளில் இலக்கியக்களத்தில் புகுந்த ஆறுமுகம்-இராஜகோபால் என்ற செம்பியன் செல்வன் ஓர் பண்முகப் பார்வையான படைப்பாளி. சிறுகதை, நாவல், குறுங்கதை ஆகியவற்றில் தனக்கென ஒரு தனித்துவப் பாணியை வகுத்துக்கொண்டு நிலையான இடத்தையும் தக்கவைத்துள்ளார் என்பது மறுக்க முடியாத உண்மை.

நாவல், சிறுகதை, நாடகம், உருவகம், குறுங்கதை, திரைப்படம், சஞ்சிகை, மேடைப்பேச்சு, ஆன்மீகம் எனப் பல்துறையில் ஈடுபாடுகொண்ட இவர் ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக கல்விப் புலத்திற்குப் பணியாற்றி அதில் நிறைவு கண்டவர். காலத்தின் தேவையுணர்ந்து இலக்கியக்களத்தில் நின்று நிதானித்துத் தடம் பதித்துள்ளார். மூத்தபடைப்பாளியான இவரை நேர்காணலிற்காக இவரது இல்லத்தில் சந்தித்தோம். இலக்கியத்துறை தொடர்பாக பதிந்துகொண்ட கருத்துக்களை இப் பத்தி வாயிலாக வாசகர்களிற்கும் தருகிறோம்.

நாம்-: இத்துறையில் நீங்கள் பிரவேசித்தமை பற்றி....

செ.செல்வன்-: எனது பாட்டியார் பழந்தமிழ் பாடங்கள், இலக்கியக் கதைகள், புராணக்கதைகள் இவற்றை சுவைபடக் கூறுவார். எங்களிற்கு கற்பிக்கின்றா என்றோ நாங்கள் கற்கிறோம் என்றோ அப்போது எங்களிற்குத் தெரியாது. ஆனால் காலப்போக்கில் பாட்டியின் கற்பித்தலால் கிடைத்த பலா பலனை உணர்ந்து கொண்டேன். முன்பு நிலவிய கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையும் அச்சூழலில் ஏற்பட்ட பரீட்சயமும் சிந்தனையைத் தூண்டவும் கற்பனையை வளப்படுத்திக்கொள்ளவும் காரணமாயின. இவற்றுடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சந்தித்த மூத்த,இளைய இலக்கிய நண்பர்களின் நட்புடன் இத்துறையில் இயங்க ஆரம்பித்தேன். கல்கியின் தொடர் பொன்னியின் செல்வன் நாவல் இவற்றைப் படிக்கும் போது ஏன் நாம் இவ்வாறு எழுத முடியாது என்ற உணர்வுமே என்னை எழுதத் தூண்டியது என தனது இளமைக் கால நினைவுடன் இருந்தவரிடம்.

நாம்-: இலக்கியக்களத்தில் தடம் பதிக்கத் தூண்டிய நிகழ்வுகள்...

செ.செல்வன்-: மூத்த இலக்கியவாதிகள் சிலரது கருத்துக்களைச் சவாலாக ஏற் டர்ந்தியங்க எண்ணினே சனங்கள், மேடைப்பேச்சுக்க இலக்கிய மோதல்கள் களத்தைப்பலப்படுத்த உதவியது. தரமான இலக்கியத் தளத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். இவற்றினால் எமது தனித்துவமான போக்கை இனம் காட்ட முடிந்தது. விமர்சனங்களும்,

### இரா-வின்

கருத்தாடல்களும் இலக்கியப் பாதையின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றின. நாம் எம்மை எமது அடையாளத்தை நிறுவவேண்டுமென்றால் தடம்புரளாது அர்ப்பணிப்புச் சிந்தையுடன் உழைக்க வேண்டும். இவை இன்று அற்றுப்போயுள்ளன. ஆரோக்கியமான இலக்கியச் சூழலைக் காண முடியவில்லை எனத் தான் இலக்கிய களத்தில் இனம் காணப்பட்டது தொடர்பாக பகிர்ந்தவரிடம்.

நாம்-:கடந்த சில தசாப்தங்களிற்கு முன்னர் இடம்பெற்ற கற்பித்தல் முறையே பல இலக்கியவாதிகள் உருவாகுவதற்குக் காரணமாகக் கூறப்படுகிறது. இது பற்றி தங்கள் கருத்து.....

செ.செல்வன்:- எம் மூத்தவாகளின் பெயர்களிலேயே இலக்கியத்தோடு ஒன்றித்த தன்மையுள்ளது. அது மட்டுமன்றி சமய, தமிழ்பற்றுள்ள ஆழ்ந்த சிந்தனை வெளிப்பாடான பெயர்களைக் குறிப்பிட்டு அழைத்தனர். இராமாயணத்தில் தமர் தாம்பிகை மிக முக்கிய கதாபாத்திரம். எனது தாயாரின் பெயரும் தமர் தாம்பிகை. தமர்தாம்பிகை என்பது நெற்றியில் வீற்றிருக்கும் சரஸ்வதியைக் குறிக்கின்றது.

ஆசிரியர்கள் ஒழுக்கம், நற்பண்புகளுடன் இலக்கியங்களையும் சுவைபட மிக நேர்த்தியாக உணர்வுடன் கற்பித்தார்கள். இவற்றுடன் நூலகக்கல்வி எமது வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளது. ஒவ்வொரு மாணவர்களும் கிழமைக்கொரு நூலைப் படித்து அவற்றை கதைநகையுடன் சொல்லவேண்டும். நூலகத்தில் கவிதை, கட்டுரை, சிறுகதைகள் அதிகளவில் இருந்தன. கிழமைக்கு ஒருவர் தான் கற்ற புத்தகம் தொடர்பாகக் கதைக்க வேண்டும் என்பதால் மாணவர் மத்தியில் விரும்பியோ, விரும்பாமலோ வாசிப்பின் வேகம் ஏற்பட்டது. இச் செயற்பாடுகளினால் மொழியை பேசுவது, எழுதுவது , சுவைப்பது என தொடர் பரிமாற்றம் இடம்பெற்றது. இவை பல பேச்சாளர்களையும் உருவாக்குவதற்குக் காரணமென்றால் அது மிகையாகாது. எழுத்துத்துறையில் பிரவேசித்த காலத்தில் பத்திரிகைகளையும் தான் பயன்படுத்தத் தொடங்கினேன். சமநேரத்தில் பத்திரிகைகள், சஞ்சிகைகளுடன் இணைந்து செயற்பட்டமையையும் இங்கு நான் குறிப்பிட்டாகவேண்டும் என யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வுகளை நினைவு கூர்ந்தவரிடம்.

நாம்-: ஈழத்து கலை இலக்கியத் துறையின் வளர்ச்சிக்கு உங்களின் பங்களிப்பு எவ்வாறானது...

செ.செல்வன்-: யாழ்.இலக்கிய வட் நாயக செயலாளராகவும், இலங்கை இலக்கியப்பேரவை செயலாளராகவும், இலங்கைத்தமிழ் எழுத்தாளர் ஒன்றியத் தலைவராகவும், இலங்கை கலாசாரப் பேரவையின் தமிழ் நாடகப்பிரிவு செயலாளராகவும் தூர நோக்குடன் பலருடன் இணைந்து செயற்பட்டேன். இக்காலத்தில் கலை இலக்கியத் துறையில் பல புதிய படைப்பாளிகளை இனம் காட்டியதுடன் கூட்டங்கள், கருத்தாடல்கள், வெளியீடுகள், கௌரவிப்புக்கள், விமர்சன, விவாதப் பரிமாற்றங்கள் என ஒன்றித்த குடும்பமாக பெரும் பணியாற்றினோம்.

1968ஆம் ஆண்டில் இருந்து 1990ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் சில சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் இருந்தேன். விவேசி, அமிர்தநங்கை ஆகிய இரண்டு இலக்கிய இதழ்களில் முறையே இணை ஆசிரியராகவும், ஆசிரியராகவும் பங்காற்றினேன். யாழ். பல்கலைக் கழகத்தில் கலைஞானம் சஞ்சிகையின் ஆசிரியராகவும், செங்கையாழியனின் புவியல், நுண்ணறிவியல் ஆகிய சஞ்சிகைகளின் இணையாசிரியராகவும் கடமையாற்றினேன். கால மாற்றத்தில் அவை தடைப்பட்ட போதிலும் ஒரு கனதியான இலக்கியப்பங்களிப்பாகவே அதனை நான் கருதுகிறேன் என அன்றைய வெளியீடுகளை இன்றைய சஞ்சிகைகளுடன் ஒப்பிட்டு பல வியாக்கியானங்கள் கூற முற்பட்டவரிடம்.

நாம்-:இலக்கியங்களில் மக்கள் இலக்கியங்கள் என்று ஏதேனும் வரையறை உண்டா...

செ.செல்வன்-: யதார்த்த பூர்வமான மண்ணோடிணைந்த தமிழீழத் தேசியத்தை நேசித்த மக்களிலக்கியப் படைப்புக்கள் சூழலியலுடன் ஒன்றிக்கின்றன. பேச்சு வழக்கையும் சூழலையும், தொழிலையும் சித்தரிப்பது மட்டும் தான் மக்கள் இலக்கியமெனச் சொல்வது மிகப்பெரிய தவறாகும். வாழும் மக்களின் முக்கிய பிரச்சினைகளிற்கு அழுத்தம் கொடுத்து வரையப்படும் எந்தவொரு இலக்கியமும் மக்களிலக்கியங்களாகும். மக்களிற்காக மக்களின் நலன் கருதி மக்களில் ஒருவனாக வாழும் கலைஞர் ஒருவரால் பிறப்பிக்கப்படும் எந்த இலக்கியமும் மக்கள் இலக்கியமாகும்.

எனது சிறுகதைகளில் பாரம்பரியம், வர்க்கங்கள், பாதிமலர், இதயக்குமுறல், அமைதியின் இறகுகள், நீரும் நிலமும், பழங்கட்டில், பூவும் கனியும், ஒரு ஞாயிற்றுக்கிழமை இவற்றை மக்கள் இலக்கியங்களாகக் கூறமுடியும் என சற்று அமைதியானவரிடம்.

நாம்-:இன்றைய படைப்பாளிகளிற்கு நீங்கள் கூறுவது.......

செ.செல்வன்-: சமூகத்தை நேசிக்கத்தெரிந்தவர்கள் சமூகத்தை ஊடுருவி நோக்கும் போது



அவ்களிடையே தேடல் பிறக்கின்றது. சமூகம் சார் அறிவும் அனுபவமும் ஆழமான சிந்தனாசக்தியும் உடையவர்கள். இலக்குகளை சவாலாக ஏற்று செயற்பட வேண்டும். இன்றுள்ளவர்களிற்கு கலை இலக்கியத்தின் வரலாறு தெரியாது. கனதியான திருப்பங்களை ஏற்படுத்திய படைப்புக்களைப் பார்த்திருக்கமாட்டார்கள். படைப்பாளிகள் சமூகத்திற்கு என்ன செய்துள்ளார்கள் என்றால் அது அவர்களால் படைக்கப்பட்ட கலைவடிவங்களால் சமூகத்திற்கு என்ன சொல்லியுள்ளார்கள் என்பதே முக்கியம். அவ்வாறான படைப்பாளிகளே ஈழத்துக்கலை இலக்கிய உலகிற்குத் தேவை. இவ்வாறானவர்களின் உழைப்பே கலை இலக்கிய வளர்ச்சிக்கு உரமூட்டும் என நடப்பியல் படைப்பாளிகளின் குறைகளுடன் எதிர்காலப் படைப்பாளிகளின் தேவைகளையும் அவர்கள் செய்ய வேண்டியதையும் சற்று காரமான வார்த்தைகளால் வெளியிட்டவரிடம் நன்றி கூறி செவ்வியை நிறைவு செய்தோம்.

செம்பியன்செல்வன் பல்துறைப் பரிமாணங்களில் இயங்கியவர் என்பதற்கு விடிய இன்னும் நேரமிருக்கு, சின்ன மீன்கள். இந்திரசித் போன்ற பெரு வெற்றி பெற்ற நாடகங்களைக் குறிப்பிட முடியும். செங்கை ஆழியனின் வாடைக்காற்று நாவலிற்குத் திரைக்கதை வசனம் எழுதிக் கொடுத்ததுடன் அத்திரைப்படம் ஏ தரச்சான்றையும் பெற்றுள்ளது. இவ்வாறு எழுதிக் கொண்டே போகமுடியும். செம்பியன் செல்வனின் பல்துறை ஆளுமைகளை.

ஈழமுரசில் தொடராக வெளிவந்த விடியலைத்தேடும் வெண்புறா என்ற நாவல் பூர்த்தி செய்ய முடியாதுள்ளது. ஈழப்போரியல் வரலாற்றை பின்னணியாகக் கொண்டு தாயக விடுதலைக்கு வலுச்சேர்க்கும் நாவலாக வெளிவருவதற்கு துறைசார்ந்த அன்பர்கள் முன்வருவார்களானால் அது இலக்கியத்துறைக்கு மட்டுமன்றி நாவலாசிரியருக்கும் செய்யும் உதவியாகும். இதை ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் நாவலாசிரியர் கடந்த சில வருடங்களாக நோய்வாய்ப்பட்ட நிலையிலுள்ளார். கலைஞர்கள் படைப்பாளிகளை அவர்களது காலத்தில் அவர்களைக் கௌரவிக்கும் போது அதன் தனித்துவமும் சிறப்பும் பெறுமதியானதாகும்.

சொற் சிக்கனமும், சொல் வழுவாமையும், பல்மொழித் தேடலால் பிறந்த கருவூலவுமே இவரது படைப்புக்களில் மின்னித் தெறிக்கும் மண்வாசனையும் மக்கள் செறிவும் கிளர்ச்சியான நடையும் இவரது படைப்புக்களில் காணமுடியும். ஒரு படைப்பாளி இருந்தான் என்பதற்கு அவன் வாழ்ந்த காலப் பதிவுகள் சமூகத்திற்கு என்னசொல்லி வைத்துள்ளதென்பதைக் கானகத்தின் கானம், நெருப்பு மல்லிகை, விடியலைத்தேடும் வெண்புறா போன்ற நாவல்களும், குறுங்கதைகள் நூறும், அமைதி யின் இற குகள் சர்ப்பவியூகம் போன்ற சிறு கதைத் தொகுதிகளுமே சான்றாக வுள்ளன. பலபரிமாண வெளிப்பாடுகளின் தோற்றங்களாக இவை வெளிவந்துள்ளன.

பேராதனைப் பல்கலைக் கழக புவியல் சிறப்புப்பட்டதாரியான ஆறுமுகம்-இராஜகோபால் செம்பியன் செல்வனாக தொடர்ந்தியங்கியவர் தற்பொழுது அவரது இயக்கத்தில் சிறு தளர்வு ஏற்பட்டுள்ளது. இதற்கு அவரது உடல் நிலைதான் காரணமென்பது வேதனையுடன் கூற வேண்டிய உண்மையாகவுள்ளது. 62 வயதான செம்பியன் செல்வன் ஈழத்து இலக்கியத்துறைக்குக் கிடைத்த இணையற்ற படைப்பாளி என்றால் அது மறுப்பதற்கில்லை.




2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமியின் அதிர்வலைகள் இன்னமும் எம்மைவிட்டு நீங்கவில்லை. சுனாமியினால் ஏற்பட்ட நேரடி மறைமுகப் பாதிப்புக் கள் ஏராளம்.

சுனாமியினால் பாதிப்புற்ற வளங்களில் முதன்மையானது நீர்வளம் ஆகும். அதாவது குடிதண்ணீர். யாழ்ப்பாணத்தின் கணிசமான பகுதிகளிலும் கிளிநொச்சியில்

# எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

பூநகரிப்பகுதியிலும் இன்னும் வேறு இடங்களிலும் தூய்மையான நன்னீர் என்பது அருந்தலான ஒரு பண்டமாகவே கணிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் சுனாமி பாதித்த அநேக இடங்களில் உள்ள கிணறுகள் உவர் நீர்க் கிணறுகளாகிவிட்டன.

நன்னீரானது அடர்த்தி குறைந்தது. சுனாமியினால் அடர்த்தி கூடிய கடல் நீர் சேர்ந்ததனால் அது மேலாகவும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அடர்த்தி வேறுபாட்டால் நீர் கீழ் மேலா அசையும் போது நன்னீரும் கடல் நீரும் சேருகின்றன. இதனால் நீர் உவர்த்தன்மை யுடையதாக மாறுகின்றது.

இந்த உவர்த்தன்மையை கிணற்றை முழுமையாக இறைப்பதன் மூலமாக நீக்கி விட முடியாது என நிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள்.

கிணறுகளை சுத்தப்படுத்தும் போது சிறிய விசையுடன் கூடிய நீர் வெளியேற்றலை மேற்கொள்வது பொருத்தமான நடவடிக்கையாக அமையும் என மேற் குறித்த நிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள்.

கிணற்று நீரின் உவர்த்தன்மை தொடர்ச்சியான மாரிமழைக்கு பின்னர் நீண்ட கால நோக்கில்தான் இல்லாமல் போகும்.

அதாவது மழை நீர் கடல் நீருடன் சேரும் போது உப்பின் செறிவு குறைவடையும். தொடர்ச்சியான இந்த நடவடிக்கையின் மூலமே நன்னீரை பெற்றுக்கொள்ள முடியும்.

# போசாக்கு நிறைந்த இலை மரக்கறிகளின் முக்கியத்துவம் தான் என்ன?

நாம் போசாக்கு நிறைந்த வர்களாக இருக்க வேண்டுமேயானால் நாளாந்த உணவில் இலைக் கறி களைச் சேர்த்துக்கொள்ளுதல் அவ சியமானதாகும்.

குழந்தையானது தனது தாயின் கருவறையில் வளர்ச்சி அடை யும் போது தனக்குத் தேவையான உணவினைத் தன்தாயின் மூலமே பெற்றுக்கொள்ளுகிறது. ஆகவே தாயானவள் புரத உணவுகளான தானியங்கள், பருப்பு வகைகள், பழவகைகள், இலை மரக்கறிவகை கள் போன்றவற்றை நிறை உண வாக உட்கொள்ளுதல் வேண்டும். போசாக்கு நிறைந்த உணவினை உட்கொள்ளும்போது தாயின் வயிற்றில் கருவுற்றிருக்கும் குழந்தை அத்தாயிடமிருந்தே போசாக்கைப் பெறமுடியும்.

இது மட்டுமல்ல இக் குழந்தை பிறந்த பின்பும் தாயானவள் குழந்தைக்குப் பாலூட்டுவதால் தொடர்ச்சியாகவே போசாக்கு நிறைந்த உணவுகளையே உட் கொள்ளுதல் வேண்டும்.

இப் புரத உணவுகளில் இலகுவாகவும், மலிவாகவும் பெறக் கூடியதாகவுள்ள இலை மரக்கறி வகை மிகவும் முக்கியத்துவம் மிக்க தாய் உள்ளது. ஒவ்வொருவரினதும் நாளாந்த உணவில் இலை மரக் கறியானது அவசியமாகச் சேர்க்கப் படல் வேண்டும். இவற்றில் உடல் வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் தேவை யான உயிர்ச் சத்துக்கள், கனிப் பொருட்கள், உயிர்ச்சத்து சி, இரும்பு, கல்சியம், பொஸ்பரஸ் ஆகிய போசனைச் சத்துக்கள் நிறைவாகக் காணப்படுகின்றன.

இரும்பு இரத்தத்தில் உள்ள சிவப்பணுக்கள் ஆரோக்கியமாக இருக்கவும் உயிரணுக்களுக்கு தேவைப்படும் பிரதான வாயுவை எடுத்துச் செல்லவும் உதவுகிறது. இரும்புச் சத்துள்ள உணவுகளை உட்கொள்ளும்போது இரத்தச் சோகை நோய் அற்றுப்போகின்றது. இரும்புச் சத்து இலக்கறி வர்க்கங் களில் ஏராளமாக உண்டு.

கல்சியம் பொஸ்பரசு என்பன தசை, நரம்புஆகிய உயிர்ச்சத்துக்கள் சமச்சீராக செயற்படவும் பல், எலும்பு போன்றவை உறுதியாகவும் ஆரோக் கியமாகவும் இருக்கப் பயன்படுகிறது.

உயிர்ச்சத்து சி முரசுகரை தல், பல்லீறுகளில் இருந்து இரத்தம் வடிதல், தடிமன் போன்றவற்றிற்கு நிவாரணியாக அமைகின்றது. எனவே இலை மரக்கறி வகைகளை அன்றாட உணவில் சேர்ப்பது அவசியமாகின் றது. இலை மரக்கறிகள் விவசாய மாகச் செய்யப்படும்போது அவை உடலுக்கு மிகவும் இன்றியமை யாததாக நஞ்சற்றவையாக அமைந்து விடுகின்றன.

இலைக் கறிகளைச் சமைத் தோ அல்லது பச்சையாகவோ உண் ணலாம். பச்சையாக உண்பதால் அனைத்து உயிர்ச்சத்துக்களும் அழிக்கப்படாது கிடைக்கும். அதிக நேரம் அவிய வைத்தாலும் அவற்றில் இருந்து வடித்தெடுக்கப்படும் நீரில் சூப் தயாரித்தல் அவற்றின் போசாக் கினை முழுமையாகப் பெற முடியும். புதியதும் பூச்சி புழுக்களின் பாதிப் பற்றதுமான இலைக்கறிவகை களைப் பயன்படுத்தும் பொழுதே நிறைவான போசாக்கினைப் பெற முடியும்.

அழுக்கு நீர் நிலைகளில் உற்பத்தியாகின்ற இலைக்கறிகளை சந்தையில் வாங்கி உண்ணும் போது அது பாரிய தாக்கங்களை ஏற் படுத்தும். ஏனெனில் அவற்றில் எமது உடலை தாக்குகின்ற கிருமிகள் ஒட்டியிருக்கலாம் அல்லவா?

இலைக்கறி வகைகளை சந்தையில் வாங்குவதை விட வீடு களில் உற்பத்தி செய்வதே சிறந்த தாகும். வீட்டுத் தோட்டங்களில் கீரை வகைகளை நாட்டி விட்டாலே போது மானதாகும். வீடுகளில் நாம் உற்பத்தி செய்யும் போது ஏற்படும் நன்மைகள்.

* எல்லாப் பருவகாலங்களிலும் இலகுவாகக் கீரைகளைப் பெற முடியும்.

* செலவு குறைவு.

* தரமானதாக இருக்கும் அதாவது பூச்சி, புழுக்களால் பாதிக் கப்படாத இலை மரக்கறிகளைப் பெறமுடியும்.

* இடப் பிரச்சினை ஏற்படாது வேலிக்கரையோரங்களில் நாட்ட லாம்.

எனவே பொன்னாங்காணி, வல்லாரை, கறிமுருங்கை, வாதநா ராணி, பொன்னாவரை, அகத்தி, பூசணி, வற்றாலை, முசுட்டை, குறிஞ்சா, தூதுவளை, தவசி முருங்கை, சண்டி, மரவள்ளி போன்ற கீரைகளை தோட்டங்களில் பயிரிட்டு போசாக்கான உணவினைப் பெற்றுக்கொள்ளலாம்.

சிவகமலா

(06 ஆம் பக்கத்தொடர்ச்சி)

இந்த நிலையில், முன்னர் ஆதரவளிப்பதாகக் கூறிய ஐ.தே.க இப்போது அதிலிருந்து நழுவத் தொடங்கிவிட்டது. பொதுக்கட்டமைப்பை ஆதரிக்கலாம். ஆனால், அது அரசியலமைப்புக்கு அமைவானதாக இருக்கவேண்டும் என்று கூறத்தொடங்கிவிட்டது. இது உண்மையில் ஜே.வி.பி, ஹெல உறுமய போன்றன காட்டும் வெளிப்படையான எதிர்ப்புக்குச் சமமானதே.

ஏனெனில், இலங்கைத்தீவில் இன்றுவரை தமிழ்த் தரப்புக்கும் ஆளும் தரப்புக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட எல்லா உடன்பாடுகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் எங்கேனும் ஒரு வழியில் அரசியலமைப்புக்கு முரணானது என்று கூறக்கூடியதே. அதனை வலிந்து கண்டுபிடித்தே இதுவரையான கிழித்தெறியப்பட்ட அல்லது ஆர்ப்பாட்டங்களுக்கும் சர்ச்சைகளுக்கும் உள்ளாக்கப்பட்ட உடன்பாடுகள் இருக்கின்றன.

தத்தமது கட்சி நலனில் நின்று கொண்டு எல்லா பெரும்பான்மை அமைப்புக்களும் செயற்படுவதன் விளைவே இதுவாகும். அதற்கு இலங்கைத்தீவின் வரலாற்றில் இனவாதத்தையே மூலதனமாகக் கொண்டுவாழும் இரு பிரதான கட்சிகளும் ஒருபோதும் விதிவிலக்காகப் போவதில்லை. அத்துடன் எழுச்சிபெற்றுவரும் ஜே.வி.பி என்ற மூன்றாவது இனவாதக் கட்சியும் இணைந்து கொண்டுள்ளது.

இவை எல்லாம் திரும்பத் திரும்பத் தமிழர்களுக்கு ஒரே உண்மையைத்தான் சொல்கின்றன. சிங்களப் பேரினவாத அரசுகள் எவையுமே தமிழர்களுக்கு எதையும் தந்துவிடப்போவதில்லை என்பது தான் அந்த உண்மை. மறுவளமாக ஒடுக்குமுறைகளை தொடர்ந்தும் கட்டவிழ்த்துவருகின்றது.

சுனாமியின் பின்பு இலங்கையின் கரையோரப் பகுதிகளை பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தும் அளவுகளிலேயே தமிழர் தாயகப்பகுதிக்கு வேறுபாடு காட்டப்பட்டது. அது நடைமுறையில் வெவ்வேறு நிர்வாக அலகுகளுக்குள் செயற்படுகின்றபோதிலும் தனது மேலாண்மையை வெளிப்படுத்தும் அறிவிப்பாக அதனையே செய்தது.

அதிலிருந்து இப்போது இராணுவ அணுகுமுறைகளையும் முடுக்கிவிட்டுள்ளது. திருகோணமலையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு இராணுவம் ஊடாக விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள், மட்டக்களப்பில் புதிதாக மேற்கொள்ளப்படும் சோதனைக் கெடுபிடிகள், அமைக்கப்படும் காவலரண்கள், அதனை நிராகரிக்கும் மக்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்கள் எல்லாம் அவற்றின் வெளிப்பாடுகளே.

மொத்தத்தில் தமிழர் தாயகம் கடுமையாகப் போராடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்தப் போராட்டம் அகிம்சை வழியிலான புறக்கணிப்புப் போராட்டங்களாக கடந்த மூன்றாண்டுகளாக இடம்பெறுகின்றன. இப்போது அவை தீவிரம் பெற்றிருக்கின்றன. இந்தப் போராட்டத்துக்கு எத்தகைய பதில்களை தென்னிலங்கை தொடர்ந்தும் வழங்கப்போகின்றது என்பதைப் பொறுத்துத்தான் இலங்கைத்தீவின் எதிர்காலமே தீர்மானிக்கப்படும்.

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீங்கள் கேட்கக்கூடும்! ஏன் ஒருசிலர் 2-3 என்று வைத்திருக் கிறார்கள் போலும்! அல்லது கட்டணம் செலுத்தப்பட முடியா மல் கைவிடப்பட்டதாகவும் இருக் கலாமல்லவா!

**இணையத்தில் உலாவுதல**

இணையத்தளத்தில் உலா வரும்போதிலெல்லாம் நீங்கள் பார்வையிடும் பக்கங்களையும், அதிலுள்ள படங்களையும் (Log-Files) உங்களுக்கு இணைப்புத் தரும் நிறுவனம் (உ+ம் SLT) பதிந்துகொள்ளும். இதனூடாக ஒவ்வொரு பாவனையாளரின் இணையப்பாவனை வழக்கம் குறித்த கேள்விகள் எழுமாயின் அவற்றை மதிப்பீடு செய்து தெளிவுறலாம். கொள்கை ரீதி யாக இது முடியுமாயிருந்தும் அளவு கடந்த பாவனையாளர் களின் எண்ணிக்கை காரணமாக, மிக முக்கியமான தேவைகளுக் காக மட்டுமே இந்த வசதி பயன்படுத்தப்படுகின்றது. மேலை நாடுகளிலே பயங்கரவாத அமைப்புக்கள் மற்றும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோக நட வடிக்கைகளில் தொடர்புபட்ட வர்களைக்கண்காணிப்பதற்காக இவ்வாறான Log-Files பின் தொடரப்படுகின்றன.

இணையத்தளங்களிலே பொருட்களைத்தெரிவுசெய்து கோரல்களை விடுக்கலாம். எடுத்துக்காட்டாக இணையப் புத்தகசாலை ஒன்றிற்கு நீங்கள் செல்லும்போது, உங்களது கணனியிலே உங்களைக் கேட் காமலே Cookie எனப்படும் ஒரு தரவை அது இருத்திவிடும். மீண்டுமொரு நாளிலே அதே பக்கத்திற்குச்செல்லும்போது உங்களை அது அடையாளம் கண்டுகொள்ளும். சிலவேளை களிலே உங்கள் பெயரைப் பாவித்து உங்களுக்கு வணக்கம் தெரிவிக்கப்படக்கூடும். உங் களுடைய கணனியிலே இருத் தப்பட்ட Cookie உங்களால் அழிக்கப்படாதவரை, அது Timestamp என்பதற்கேற்ப சேமித்து வைத்திருக்கப்படும்.

**செல்லிடத்தொலைபேசிப் பயன்பாடு.**


செல்லிடத்தொலைபேசி களிலிருந்து மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு அழைப்பும் பல தகவல்களை விட்டுச்செல்லும். ஒவ்வொரு அழைப்பின்போதும் Call Data Records (CDR) என அழைக்கப்படும் கிட்டத்தட்ட 25 தரவுகளைப் பதித்துக்கொள் கின்றது. இந்தத் தரவுகள் யாவும் சங்கேத எண்களாகப்பதியப் பட்டு, ஒவ்வொரு நிறுவனத் தையும் பொறுத்து குறிப்பிட்ட காலத்தின்பின் அழிக்கப்படு கின்றன. ஏதாவது தேவைகருதி பாவனையாளர் ஒருவரின் தகவல்கள் தேவைப்படின் சங்கேத எண்கள் மொழிபெயர்க் கப்படுகின்றன.

இவ்வாறாக நாம் விட்டுச் செல்லும் இலத்திரனியல் தடங் கள் சாகாவரம் பெற்றவையாய் தேவைகளைப்பொறுத்து பின் தொடரப்படக் கூடிய சாத்தி யங்களைக்கொண்டு விளங்கு கின்றன.




தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியிலும் மேற்கிந்தியத்தீவுகள் அணி தோல்வியுற்றதுடன் ஒரு நாள் போட்டித் தொடரையும் அவ் அணி இழந்துள்ளது.

# தென்னாபிரிக்காவிடம் மண்டியிட்டது மேற்கிந்தியத்தீவுகள் அணி



நேற்று முன்தினம் பாபடோசில் நடைபெற்ற மூன்றாவது ஒரு நாள் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி ஒரு ஓட்டத்தினால் பரிதாபகரமான தோல்வியைச் சந்தித்தது.

முதலில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவு அணியின் தலைவர் சந்திரபோல் தென்னாபிரிக்கா அணியை துடுப்பாட அழைத்தார்.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி ஐம்பது ஓவர்கள் முடிவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 284 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டிபென்னர் 123 ஓட்டங்களையும், ஜக் கலிஸ் 87 ஓட்டங்களையும், அணித்தலைவர் ஸ்மித் 28 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் பிறட்ஷோ, பிறவோ தலா இரண்டு விக்கெட்டுக்களையும், கொலிமோர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 285 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 49.5 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 283 ஓட்டங்களைப் பெற்று பரிதாபகரமான தோல்வியைச் சந்தித்தது. இதில், கிறிஸ் ஹெயில் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடி ஏழு நான்கு, இரண்டு ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 132 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் லாறா 32 ஓட்டங்களையும், சந்திரபோல் 23 ஓட்டங்களையும், டேவான் ஸ்மித் மற்றும் பிறவோ தலா 21 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்து வீச்சில் லாங்க்வெல்ட் 9.5 ஓவர்கள் பந்து வீசி 62 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களை கைப்பற்றினர். நெல் மூன்று விக்கெட்டுக்களையும், மக்காய என்ரினி இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

ஐந்து போட்டிகளைக் கொண்ட மேற்படி தொடரில் 3-0 என்ற நிலையில் தென்னாபிரிக்கா ஒரு நாள் போட்டித் தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இரு அணிகளுக்குமிடையில் நடைபெற்ற நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் போட்டியிலும் தென்னாபிரிக்கா அணி 2-0 என்ற நிலையில் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.




# கௌரவத்துடன் விடையளிக்க வேண்டும்

சிறிலங்கா கிரிக்கெட் அணியில் பலதிறமைகளை வெளிப்படுத்திய ஹசன் திலகரத்ன தேசிய அணியிலிருந்து நீக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தியடைந்து விட்டது.

கடந்த ஆண்டு நடைபெற்ற அவுஸ்திரேலிய அணியுடனான டெஸ்ட் தொடரின் பின்னர் அவர் எதுவித போட்டிகளில் கலந்துகொள்ள வாய்ப்பளிக்கப்படவில்லை. இதனால் அவர் மறைமுகமாக நீக்கப்பட்டுள்ளார் என்றே கருதலாம்.

எனினும் திலகரத்னவை பொறுத்தவரை மீண்டும் அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவார் என்ற நம்பிக்கையுடனேயே இருப்பதாக அண்மையில் அணி நியூசிலாந்துக்கு செல்லும் முன்பு அவர் ஊடகம் ஒன்றிடம் தெரிவித்திருந்தார்.

அது போல் அவர் அண்மையில் நடைபெற்ற மாகாண அணிகளுக்கிடையிலான தொடரில் மூன்று போட்டிகளில் பங்கேற்று 210 ஓட்டங்களைப் பெற்றார். முன்னர் துடுப்பாட்டத்தில் சிறப்பிக்கத் தவறியதாலேயே இவர் அணியிலிருந்து நீக்கப்பட்டார் என்பதால் மாகாண அணிகளின் போட்டிகளில் சிறப்பாக ஆடியதால் நியூசிலாந்து சுற்றுப் போட்டிக்கு தான் இணைத்துக் கொள்ளப்படலாம் என நம்பினார்.

எனினும் தேர்வாளர் சபைத் தலைவரான அசந்தா டிமெல் இவர் இன்னும் நிலையான துடுப் பாட்டத்துக்கு வரவில்லை என்று தெரிவித்தார். ஆயினும் அவருடைய வயது அவரை அணியிலிருந்து நீக்கக் காரணமில்லை எப்போதாவது அணியில் இடம் பிடிப்பார் என்றும் டிமெல் தெரிவித்துள்ளார். இவரை அணியில் சேர்த்துக்கொள்வது அல்லது விடுவது என தனிப்பட்ட முறையில் தான் தீர்மானிக்கவில்லை என்றும் ஏழுபேர் அடங்கிய குழுவின் முடிவே இது என்றும் அசந்தா டிமெல் விளக்கியுள்ளார்.

எனினும் ஹசன் திலகரத்ன அனுபவமுள்ள வீரர்களில் ஒருவராவார். சுனாமி உதவி கிரிக்கெட் அமைப்பின் நிறைவேற்றதிகாரியாக இவர் நியமிக்கப்பட்டிருப்பதால் இவரின் மதிப்பு விளங்கும்.

ஹசன் திலகரத்னவின் 18 வருட கிரிக்கெட் காலப் பகுதியில் அரவிந்த டிசில்வா, அர்ஜுன ரணதுங்க ஆகியோரையும் முந்திச்சென்று சாதனை படைத்துள்ளார். 83 டெஸ்ட் போட்டிகளில் 4545 ஓட்டங்களையும் 200 ஒரு நாள் போட்டிகளில் 3789 ஓட்டங்களையும் பெற்றுள்ள இவர் ஒருகாலத்தில் இவர் டெஸ்ட் அணிக்கு தலைவராகவும் செயற்பட்டார்.

இவ்வாறான ஒருவரின் ஓய்வு ரசிகர்களுக்கு பாரிய ஏமாற்றம் அளிப்பதாகவே தோன்றுகிறது. எனவே இவர் வேதனையுடன் நீங்கிப் போவதை தவிர்த்து அவர் நன்றியுடன் விடைபெறும் வாய்ப்பை அதிகாரிகள் ஏற்படுத்தித் தர வேண்டும்.

இவரின் மொத்த ஓட்ட எண்ணிக்கை 12,632 ஆகும். அதிகூடிய ஓட்டம் 204.36 சதங்களும் 57 அரைச்சதங்களையும் பெற்றுள்ள இவரின் சராசரி49.53 ஆகும். 267 பிடிகளை எடுத்துள்ள இவர் வீழ்த்திய விக்கெட்டுக்கள் 40. ஏனைய நாட்டு வீரர்களை கௌரவமான முறையில் ஓய்வில் செல்ல தேர்வாளர்கள் அனுமதிப்பது போன்று இவரையும் கௌரவத்துடன் வழியனுப்புவதே சிறந்தது.

-சம்பத்-



*இங்கிலாந்து நாட்டில் கௌண்டி கிரிக்கெட்போட்டி நடக்கிறது.*

*இதில் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் சேன் வோனே ஹாம் செயர் அணி கப்டனாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.*

*கென்ட் அணிக்கு எதிராக ஹாம் செயர் அணி மோதியது. முதல் நாள் ஆட்டத்தில் 130 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. 9ஆவது விக்கெட்டுக்கு களம் இறங்கிய வோர்ன் அதிரடியாக விளையாடி 72 பந்துகளில் சதம் அடித்தார். இது அவரது முதல் சதம் ஆகும். மொத்தம் அவர் 107 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமமிழக்காமல் இருந்தார்.*



# மன அமைதி குலைகிறது

## ஹர்பஜன்சிங்

"பந்து வீச்சு சந்தேகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்காமல் இழுத்து அடிப்பதால் மன அமைதி குலைகிறது" என்று ஹர்பஜன்சிங் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவர் ஹர்பஜன்சிங் இவரது 'டூஸ்ரா' பந்துவீச்சு சர்ச்சைக்கு உள்ளானது. விதிமுறைக்கு புறம்பாக டூஸ்ரா பந்து வீச்சு இருப்பதாக கடந்த 3 மாதங்களில் 2 முறை புகார் செய்யப்பட்டது.

ஏற்கனவே இதே குற்றச்சாட்டுக்கு ஆளாகி சோதனைக்கு உட்பட்டு வெளியே வந்த ஹர்பஜன்சிங்குக்கு இந்த முறை தடை எதுவும் விதிக்கப்படவில்லை. இந்த நிலையில் ஜலந்தரில் ஹர்பஜன்சிங் அளித்த பேட்டியில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

விதிமுறைக்கு புறம்பாக நான் பந்துவீசுவதாக கூறப்பட்ட புகாரால்எனது மனஅமைதி குலைந்து போய் இருக்கிறது. இதனால் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் எனது ஆட்டத்திறன் பாதிக்கப்பட்டது. எனது பந்து வீச்சில் எந்தவித தவறும் இல்லை. இருப்பினும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் முடிவுக்காக காத்து இருக்கிறேன்.

நான் ஏற்கனவே நடுவரால் புகாருக்கு உள்ளாகி அதில் இருந்து விடுபட்டு இருக்கின்றேன் எத்தனை முறை ஒரு பந்து வீச்சாளர் சோதனைக்கு உட்பட முடியும். என் மீதான புகாரை ஆய்வு செய்து விரைவில் தீர்வு காண வேண்டும். அப்போதுதான் ஆட்டத்தில் முழுகவனமும் செலுத்தமுடியும். இவ்வாறு ஹர்பஜன்சிங் கூறினார்.

*இந்திய கிரிக்கெட் அணிக்கு பந்து வீச்சு பயிற்சியாளராக ஸ்ரீநாத்தை நியமிக்க வேண்டுமென ஸ்டீவ்வாக் தெரிவித்துள்ளார்.*

*அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் ஸ்டிவ்வோ இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளர் தேர்வு குறித்து கருத்து தெரிவிக்கையில்:*



# இந்தியா மிகச்சிறந்த அணி

## ஸ்டிவோ

*புதிய பயிற்சியாளர் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டு இருக்கும் கிரேக்சப்பல் மிகச்சிறந்த கிரிக்கெட் சிந்தனை உள்ளவர் நம்பமுடியாத அளவிற்கு பயிற்சியாளர் பணியையும் திறம்பட செய்வார். ஆனால் என்னுடைய தனிப்பட்டவிரும்பம் என்னவென்றால் டாம்மோடியை இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக நியமிக்கவேண்டும் என்பதே.*



இத்தாலி நாட்டின் ரோம் நகரில் நடைபெறும் மாஸ்டர் டென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் சொீனா வில்லியம்சும், இத்தாலியின் பிரான்சிஸ்காவும் மோதினார்கள் இதில் செரினா வில்லியம்ஸ் பந்தை ஆவேசமாக அடித்து ஆடும்காட்சி இந்த போட்டியில் செரினா வில்லியம்ஸ் வெற்றி பெற்றார். ஜேர்மனி நாட்டின் ஹாம்பர்க் நகரில் மாஸ்டர் டென்னிஸ் போட்டி நடந்தது.

# முன்னோக்கிப் பதியவேண்டிய பாதங்கள்



மனித இனத்தினுள் மேம்பாடு என்பது ஒவ்வொரு தனிமனிதனின் வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும், அபிவிருத்தியையும் குறித்து நிற்கின்றது. சமூக உறவுகளில் உழைப்புச் சக்தி வலுப்பெற்றமைக்கு ஆண்-பெண் இருவருமே காரணமாகக் கொள்ளப் படுகின்றது. பழமைகளிலிருந்து புதுமை நிலையைப் பெண்கள் எட்டிவிட்டார்கள். மகாத்மா காந்தி கூறியது போல "நேற்று அசாத்தியமாய் இருந்தது, இன்று சாத்தியமாகும் அற்புதத்தை ஒவ்வொரு நாளும் நாம் கண்டு வருகின்றோம்"

பெண்களில் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து விரிவு படுத்தும் வாய்ப்பு, தலைமைத்துவம், நாட்டுப்பற்று, சமூக உணர்வு, கடின உழைப்பு போன்ற நற்பண்புகள் சீராக நிர்வகிக்கப்பட்டு நிறுவனமயப்படுத்தப் பட்டுள்ளன. சமூகத் தொடர்புகளின் இயல்புகள், ஒரு குழுவிலுள்ள ஆண், பெண் உறுப்பினர்களின் மனப்பாங்குகள், பண்புகள் இவை யாவும் சமூக அளவைகளால் நேராக அளக்கப்படும் போது ஏற்படுகின்ற கருத்து மோதல்களில் பெண்களின் பால் மீதமாயுள்ள பிரச்சினைகளில் ஒரு சிலவற்றை உற்று நோக்கலாம்.

பெண்களின் வாழ்வியல்களுடன் ஒப்பிடுகையில் குழுக்களின் தலைமைப்பண்புகள், குழுக்களின் எண்ணங்கள், மனநிலைகள், நம்பிக்கைகள் போன்ற விடயங்கள் உத்வேகத் தொழிற்பாட்டுடன் எல்லாப்பெண்களும் வாழவே பிறந்தவர்கள் என்பது ஒரு புறமிருக்க, பெண்களுக்கெதிராகப் பல்வேறு முட்டுக் கட்டைகளைப் போட்டுக்கொண்டு காலம் முழுவதும் தம் கருத்திலேயே வழிப்பட வேண்டியவர்களாக முறைதவறிய எண்ணங்களும், செயற்பாடுகளும் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறது. மாறாக பெண் மேம்பாட்டில் ஆர்வம் கொண்டவர்களின் ஒத்துழைப்பானது ஆண், பெண் பாகுபாடின்றி முழுச்சமூகத்தினுள்ளும் விருட்சங்களாக வளர்ந்து நிற்கக் காண்கிறோம்.

சமூக ஒருங்கிணைப்பானது ஆண்களாலும், பெண்களாலும் முயன்று வெல்லப் பட்டது. அவ்வாறிருக்க ஆணாதிக்கம், பெண்ணாதிக்கம் எனும் இரு வேறுபட்ட அம்சங்கள் தமக்காக வாழும் சில சுயநலவாதிகளால் தோற்றம் பெற்றிருக்கலாம். சமூகத்தில் பெண்களின் வளர்ச்சிக் கூறுகள் சில இடங்களில் மாத்திரமே ஸ்தம்பிதம் அடைவதற்குரிய காரணம் என்ன? பெண்கள் மேம்பாட்டின் ஆர்வலர்களால், மேம்பாட்டின் புதிய பரிமாணமாக இச் சிந்தனை கட்டியெழுப்பப்படுகின்றது.

பெண் வாழ்வில் திருமணபந்தமும், அவளுக்கெதிரான வன்முறைத் தூண்டல்களும், சந்தர்ப்பவாதங்களின் பழிவாங்கல்களும் வாய்ப்புற்றிருக்க பணம், பதவி, அந்தஸ்து போன்ற இன்னோரன்ன பெரும்பான்மை வாக்கெடுப்புகள் வசதி செய்து கொடுத்திருக்கின்றன.

அயர்லாந்து நாட்டின் பழமொழிகளில் ஒன்று, "பெண்கள் பேயையும் வென்றுவிடுவார்கள்" என்பது. சிக்கலான சூழ்நிலைகளிலும் வாழ்வியக்கங்களின் வாழ்வதற்கான தொடர் சோதனைகளில் இன்று சீதனம் என்பது பேயாகப் பெண்கள் முன் தோற்றமளிக்கின்றது.

"பொல்லாத காசு, பணம், பூமி தன்னை ஆளுதடா!

எல்லாம் தெரிந்த மனம் ஏங்கி ஏங்கித் தவிக்குதடா!"

என்பதாக ஒரு கவிஞன் பாடியது போல பணம் எனும் பேய் பலரை ஆட்டிப் புரட்டிக்கொண்டிருக்கிறது. பெண்கள் கல்வி கற்று, கடின உழைப்பின் வழி முன்னின்று மேம்பட்டாலும் வரதட்சணை என்பது ஆணாதிக்கத்தின் தண்டச் சோறாக இருக்க, பெண்களால் பேயை வெற்றிகொள்ள முடியாதநிலை உருவாகிறது.

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்

அறிவிலோங்கி இவ்வையகம் தழைக்கும்"

என்பதாகப் பாரதி ஆண், பெண் சமத்துவத்தை அழுத்திப் பாடியுள்ளார். தன்னுடைய உரிமையை, திறமையை, மேம்பாட்டை ஒவ்வொரு பெண்ணும் தானே தெரிந்து வைத்திருத்தலே உயர்வுக்கு ஒரே வழி.

எமது சமூகத்தில் தம் பிழைப்பு சார்ந்த உயிர்கள் பெரும்பான்மையாக "திருமணம்" எனும் பந்தத்திற்குப் பல்வேறு அடக்குமுறைகளையும், அசம்பாவிதங்களையும், கேள்வி நிரம்பல்களையும் ஏற்படுத்தி, ஆதாரமில்லாத கோரிக்கைகளை, ஆதாரத்துடன் தம் வன் குழுக்களால் வன்முறைத் தடயங்கள் வழி உருவாக்கி வசை தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆண், பெண் என்பதற்கு மேலாக ஆணாதிக்கம் எனும் போர்வையில் மறைமுகமான அழுத்தங்களும், பக்கப் பாட்டுக்களும், குறுக்கு வழிப் பிரயாணங்களும், தத்தமது சமூக ஊழல் மனப்பாங்கை மறுக்கும், மூடி மறைக்கும் தந்திரோபாயங்களாகத் தப்பிதம் கொள்கின்றன.

"பெண்கள் எந்தக் குலத்தில் துன்பப் படுகிறார்களோ அந்தக் குலம் நசியும். எந்தக் குலத்தில் மகிழ்ச்சியை அடைகிறார்களோ அந்தக் குலம் மேன்மையடையும்"

என்கிறது மனுதர்மசாஸ்திரம். எமது சமூகத்தில் எந்த விதத்தில் பெண்கள் நசுக்கப்படுகிறார்கள்? வன் முறைகள், சீதனம் போன்ற ஒரு சில காரணிகளால் மட்டுமே தான். இவற்றுக்கெல்லாம் தீர்வாக நோக்கின், சுவாமி விவேகானந்தர் கூறிய, "எல்லா நாகரிகங்களுக்கும் அடிப்படை சுயநலத்தியாகமே" என்பது விடையாக அமைந்து விடும்.

எனவே சமூக மேம்பாட்டில் ஆண்-பெண் இருவரும் தனியுரிமை படைத்தவர்கள். உழைப்பின் உயர்வு என்பது எல்லோருக்கும் பொதுவானது. சமூக மேம்பாட்டில் பெண்களுமே பங்குதாரர் ஆவர். சமூகப் படிநிலைகளில் இவர்களது பதங்களும் முன்னோக்கிப் பாதிக்கப்பட வேண்டியவை.

**இனியவள்.**


## மிருதங்க அரங்கேற்றம்

எமது தமிழீழ நுண்கலைக் கல்லூரியின் மிருதங்க மாணவனும்
நவம் அறிவுக்கூட போராளியுமான

**திரு.கி.இதயராஜ் அவர்களின்**

மிருதங்க அரங்கேற்றம் எதிர்வரும் 15-05-2005 ஞாயிறு
மாலை-4.00 மணிக்கு கிளிநொச்சி நவம் அறிவுக்கூட
கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.



**அணியிசைக்கலைஞர்கள்**

பாட்டு-இசைக்கலைமாணி-திரு.தவநாதன் றொபேட்
வயலின் இசைக்கலைமாணி திரு.சு.கோபிதாஸ்
மிருதங்கம்-திரு.கி.இதயராஜ்
கடம்-கலாவித்தகர் திரு.சதா.வேல்மாறன்
கெஞ்சிரா-கலாவித்தகர் திரு.ந.சதீஷ்குமார்

ரசிகப்பெருமக்களை அன்புடன் அழைக்கிறோம்
(15-05-2005 மாலை 3.00 மணிக்கு கிளி.பண்பாட்டு மண்டபத்தில் இருந்து
வாகன ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது)

தமிழீழ நுண்கலைக் கல்லூரியினர்

(கி-11963)


'வணக்கம் எல்லாருக்கும்! இஞ்சத்தைப் புதினங்கள் எழுதிற அளவுக்கு எனக்கு மனசு சரியில்லை. நான் அப்பிடி பெரீசா என்ன எழுதிக் கிழிக்கப்போறன். எழுத்து எண்ட தமிழ்ச்சொல்லுக்குள்ளையே எழுச்சியைத் தூண்டிற 'எழு!' எண்ட கட்டளைபொதிஞ்சு கிடக்கு. ஆனால் பொதிஞ்சு கிடந்து என்னபயன் ? அப்பிடியான தரமான எழுத்துக்கள் இடம், காலம், போக்கு எண்டு எல்லாம் அறிஞ்சு வெளிவரேக்கிள்ளை தானே, அதுகளும் எழுச்சி மிக்கதாய் இருக்கும். அப்படியான எழுச்சியைத் தன்ரை எழுத்துக்களூடாகக் குடுத்து எங்களுக்குத் தெரியாதே !

இல்லைப்பாருங்கோ நீங்கள்! மாமனிதர் டி.சிவராம் கடத்தப்படிறதுக்கு முன்னாலை கதைச்சுக் கொண்டிருந்த உணவகத்தில இருந்து டி.என்.ஏ எண்ட மரபணு மாதிரியளை பொலிஸ் எடுத்திருக்காம். கடத்தினவங்கள் வெளியால காத்துக் கொண்டு இருந்திருக்கிறாங்கள். அப்பிடியிருக்க DNA மாதிரியள், அதுஇதெண்டு உள்ளுக்குள்ளை எடுத்து தாங்கள் பெரிய அளவில செய்து கிழிக்கிற மாதிரிக் காட்டிக் கொள்றாங்கள். உண்மையிலையே உருப்படியாய் ஏதாவது செய்யிற தொடாமலேயே துள்ளிக்கொண்டு வாற சில அயல்- மற்றும் சர்வதேச மட்டங்கள் இப்பை மௌனம் சாதிக்கிறது எவ்வளவு கேவலமானதொரு போக்கெண்டு கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ !

காலாகாலமாய் நாங்கள் அறிஞ்சு வைச்சிருக்கிற அரசாங்கத்தின்ரை இன்னுமொரு படுமோசமான அடாவடித்தனம்தான் இதுவும். தங்கட ஓடிப்போன 70 000 ஆமிக்காரரைப் பிடிக்க வக்கில்லாத அரசாங்கம், எங்களுக்கெதிராய் ஈடுபடுத்திறதுக்காக ஆயுதக் கும்பல்களை உருவாக்கிதாம். கொஞ்சம் பொறுங்கோ, பிள்ளையள்! தலைப்புச்செய்தியாய் சொல்லிற, போடிற வழக்கமும் நிறைஞ்ச எங்கட ஊடகங்களுக்கு அவர் கடைசியாய் அருமையான விசயங்களைக் குடுத்திட்டுத்தான் போயிருக்கிறார். News-First எண்டு சொல்லிக் கொள்ளிற ஒரு ஊடகம் டி.சிவராமின்ரை இழப்புச்செய்தியையே தவிர்த்து, 'பொதுக்கட்டமைப்பை நடைமுறைப் படுத்துவதில் சனாதிபதி உறுதி' எண்ட பம்மாத்துக்கதைக்கு விளம்பர மணி அடிச்சுக்கொண்டிருக்கிது. இப்பைதானே எல்லா வானொலியளையும் உலகம்பூரா இன்ரர்நெற்றில கேட்கலாம். அரசாங்க வானொலி பரம்பரையாய் எல்லாரும் புதுப் பிறப்பெடுக்கோணும். அதைவிட்டிட்டு நாங்கள் சும்மா அடுக்கிக்கொண்டு போற வசனங்கள் எல்லாம் தராகியை அவமதிக்கிறதாய்த்தானிருக்கும். அவரின்ரை எழுத்துகளை முடக்க நினைச்ச எதிரிக்கு, அவர் தன்ரை எழுத்துக்களில எங்களுக்காய் விட்டிட்டுப்போன விடயங்களை, ஊடக நெறியைப் பின்பற்றி தமிழ் எழுத்துத்துறையைச் சேர்ந்த எல்லாரும் நெஞ்சார முடிவெடுக்கோணும். ஒடுக்கப்படிற எங்கட இனத்தின்ரை தேசிய ஆன்மாவின்ரை குரலாய் ஒவ்வொரு பேனாவும் மாறோணும். அதுக்கு

# தமிழ் இனத்தின் தேசிய ஆன்மாவின் குரலாய்

வந்த, வல்லமை படைச்ச ஓராளைத் தான் நாங்கள் இண்டைக்கு இழந்து நிக்கிறோம். ஆருக்கு, என்னத்தை, எப்பிடி எழுதிறதெண்டு தெரிஞ்சு எழுதி வந்தவர் மாமனிதர் டி.சிவராம். அவரின்ரை பேனாக்கூர்முனைக்குப் பயந்த குறுக்கால போவாங்கள்தான் உப்பிடிச் செய்திருக்கிறாங்கள். அதுகும் பாருங்கோ தமிழீழப்பகுதிக்கு வெளியால சிறிலங்காவில மட்டும் எண்டில்லாமல் மேற்குநாடுகளிலையும் கூட, எங்கட பிரச்சினையளின்ரை உண்மை நிலையை எடுத்து விளக்கி வந்தவர். வீரகேசரியை எடுத்தால் அவற்ரை கட்டுரை கிடக்கோ எண்டெல்லே முதல் பார்க்கிறனாங்கள். முந்தி குமார் பொன்னம்பலம். இப்பை டி.சிவராம். நினைக்க நினைக்க விசராய்க் கிடக்கிது. எவ்வளவு பெரிய இழப்பு... சீ ! இயற்கையாய் நடந்திருந்தால் இழப்பெண்டு ஏதோ மனசைத் தேற்றியிருக்கலாம். ஆனால் இது வேண்டுமெண்டே செய்யப்பட்ட பறித்தெடுப்பெல்லே!




ஏப்ரல் 28 ஐ தமிழ் ஊடகத்துறையின்ரை மறக்கமுடியாத நாளாய் மனசில இருத்தி எளிமையான மொழி, தர்க்க வல்லமை, நேர்மையான வாழ்வு, ஓயாத தேடல், சுய விமர்சனம் எண்ட பண்புகளோடை ஊடகவியலாளர்கள் உருவாகோணும். இந்த மாற்றத்துக்கு தங்களை உட்படுத்த விரும்பாதவை துறையை மாற்றிக்கொள்ளிறது தமிழுக்குப் பலம் சேர்க்கும்.

மற்றது நான் சுவிஸில நிக்கிறன். விசயத்தை அண்டைக்கு கேள்விப்பட்டதில இருந்து மனம் சரியில்லை. இஞ்சை கேட்கக்கூடியதாய் இருக்கிற எங்கட வானொலியளும் மாறிமாறி செய்தியளைத் தந்துகொண்டிருந்திச்சினம். நீங்களும் உங்கத்தைய நேரம் விடியக்காலை 5.30 மணிக்கு ஐபிசி கேட்பியள் எண்டு நினைக்கிறன். அதான் பாருங்கோ சிற்றலை வரிசையில 41 மீற்றர் 7.45 ஆர்ண இற்குப் பக்கத்திலை கேட்கக்கூடிய மாதிரி லண்டனில இருந்து 1 மணித்தியாலம். ஒலிபரப்புச்செய்யினம். கேட்காத ஆக்கள் கேட்டுப்பாருங்கோ! நான் இஞ்சையிருந்து கொண்டு உங்கத்தைய சகல வானொலியளையும் இன்ரர்நெற்றில கேட்டனான். மனம் அவ்வளவு சரியில்லாததால பெரீசா நான் இஞ்ச வெளிக்கிடேல்லை. அதால கொஞ்சமாய் சுவிசைப் பற்றிச்சொல்லிறன். வாறகிழமை வேற இடம் போறன்.

# ஒவ்வொரு "பேனா"வும் மாறவேண்டும்


இந்தக் கொலை பற்றின விசாரணையளுக்காக நோணா 3 பொலிஸ் குழுக்களை நியமிச்சிருக்கிறாவாம். உப்பிடியான விசர்ப்பட்டம் கட்டிற அறிக்கையளைக் கேட்கத்தான் இன்னும் பத்திக்கொண்டு வாறது. கடத்தப்பட்டது சனசந்தடி கூடின கொழும்பின்ரை ஒரு இடம். பக்கத்தில பொலிஸ்-ஸ்ரேசன் வேற கிடக்கிது. சடலம் கண்டெடுக்கப்பட்டது அதிகூடின உயர்பாதுகாப்புக்கொண்ட நாடாளுமன்றப்பகுதியில. நடந்து அரைமணித்தியாலத்துக் குள்ளை எல்லா செக்போஸ்ற்றுகளுக்கும் தாங்கள் அறிவிச்சிட்டம் எண்டு பொலிஸ் தரப்பு சொல்லினம். டி.சிவராம் கூடவே நிண்டு சம்பவத்தைப் பார்த்தவர், மற்ற மற்ற ஓட்டோக்காரர் எண்டு எல்லாரும் அந்த வான் பற்றின அடையாளங்களைச் சொல்லக்கூடியதாய் இருந்திருக்கும். அங்கை ஒரு கடத்தல் முயற்சி நடக்கிதெண்டு விளங்கினவுடனயே கூட இருந்தவர் வாகன-இலக்கத்தை எப்பிடியும் பார்த்து வைச்சிருப்பார். அப்பிடியில்லை எண்டு அவர் சாதிக்கப்பார்த்தால், அவரே ஒரு துப்பு மாதிரித்தான். சரி கடத்தினாப் பிறகு தானும் ஏன் பொலிசால அந்த வானைக் கண்டு பிடிக்கவோ, தடுக்கவோ முடியேல்லை. அரசாங்கத்தின்ரை உயர் பாதுகாப்பு வலயத்துக்குள்ளையே கடத்திக் கொலை செய்யிறதுக்கு கொலைகாரருக்குத்தேவையான பாதுகாப்பு இருந்திருக்கெண்டால் பாருங்கோவன். நிமலராஜனைச் சுட்ட ஆளை லண்டனுக்கு மாறவிட்ட அரசாங்கத்தின்ரை வண்டவாளம் தெண்டால் சிவராமின்ரை கைத் தொலைபேசியை வைச்சே எல்லாத்தையும் தடுத்திருககலாம் அல்லாட்டி கொலைகாரங்களை ஆவது கண்டுபிடிச்சிருக்கலாம். கடத்தினவங்கள் அவற்றை ரெலிபோனை நிற்பாட்டி வைச்சிருந்தால் ஒண்டும் செய்திருக்கேலாது. ஆனால், அவங்கள் நிற்பாட்டாமல் அழைப்புகள் போற நேரமெல்லாம் அமத்தி, அமத்தி இணைப்பை துண்டிச்சிருக்கிறாங்கள். அவற்ரை தொலைபேசிக்கு இணைப்பை வழங்கியிருக்கிற நிறுவனத்திட்டை பொலிஸ் கேட்டிருந்தால், அவையள் உடனயே தங்கட CRD எண்ட Call Data Records பதிவுகளை வைச்சு சில நிமிசங்களிலையே அண்ணளவாய் ஆள் இருக்கிற இடத்தைச் சொல்லியிருப்பினம். அதைச் செய்யாமல் 3 நாளைக்குப்பிறகு அப்பிடியான நவீன அணுகுமுறையளைத் தாங்கள் பின்பற்ற இருப்பதாக விலாச அறிக்கையை எந்தப் பேயனாவது விடுவானே! அவங்களிட்டை தொலைபேசி போட்டவடி இருக்கேக்கிளையெல்லே அதால பிரயோசனம். ஆனால் பாருங்கோ அரசாங்கத்தின்ரை உந்த அனுமார் (ஹனு-மான் : அரைமனிதன். . அப்ப' மிச்சம் பாதி !) வேலையளுக்கெல்லாம் சேர்த்து வாங்கிக்கட்டேக்கிள்ளை தெரியும். தமிழ்-சிங்கள தரப்பு அல்லாத பக்கங்களில இருந்து இந்த நேரத்திலை வாற கண்டன அறிக்கையளை வைச்சு வெவ்வேறு தரப்புகளையும் நாங்கள் இனம் காணலாம். சும்மா பொறுமையைச் சீண்டிப்பார்க்கிற குரங்குக்கு பொங்கினாப் பிறகு தெரியும்.

இன்னுமொண்டு நடந்ததை நினைச்சுக் குறைப்பட்டுக்கொண்டிருக்கிறதோட 4 கவிதையும், 5 இரங்கலுரையும் வாசிச்சுப்போட்டு நாங்கள் விடுவோமாய் இருந்தால் கொலைகாரரைவிட மோசமான ஆக்களாய் நாங்கள்தான் இருப்போம். அந்த ஒப்பில்லாத ஊடகவியலாளனின்ரை எழுத்துக்கள் எடுத்துச்சொன்ன விசயங்களை எங்களுக்குள்ளை நாங்கள் நிரப்பிக்கொள்ளோணும். வெறுமனே அடைமொழியளையும், பழமொழியளையும், கூடவே கொஞ்சம் எதுகை மோனையளோடை அடுக்குமொழியளையும் சேர்த்து உணர்ச்சி வசப்படுகிற வசனங்களை அள்ளிக்கொட்டி, குப்பை கொட்டிற ரகத்தைச் சேர்ந்தவரில்லை டி.சிவராம். அதேநேரம் தன்னைப் பற்றி எல்லாரும் பெரீசாய் நினைக்கோணும் எண்டு நினைச்சு, சாதாரணமான மொழிநடையை விட்டிட்டு மேதாவியளுக்கான பரி பாசையில புத்திஜீவித்தனம்(?) பண்ணிற ஆளும் இல்லை அவர். அவசியமான விசயங்களை, ஆழமான பார்வையோட எளிய வசன நடையில எல்லாருக்கும் விளங்கிற மாதிரி எழுதிறவர் அவர். அதிலையும் அவர் கடைசிக்காலத்திலை எழுதின விசயங்களை நாங்கள் முழுமையாய் உள்வாங்கிறதுதான் அவருக்கு நாங்கள் அளிக்கக்கூடின உயர் அஞ்சலியாகவும் இருக்கும். வதந்தியை நம்பி இல்லாத செய்தியை அவசரப்பட்டுச் சொல்லிறதும், உண்மையெண்டு உறுதிப்படுத்தின செய்தியை ஒருகிழமை கழிச்சு டி.சிவராம் பற்றிக் கதையே இல்லை.

மனசில படிற ஒண்டை உங்களுக்குச் சொல்லிறன். எங்கட இனத்தின்ரை வெற்றிநாள் ஒண்டிலை எங்களுக்கு சோகத்தைத் தரோணும் எண்டு உப்பிடிச் செய்திருக்கிறாங்கள். ஊடகத்துறையில எங்கட பலவீனமான நிலையை மேலும் பலவீனமாக்கத்தான் எதிரி உப்பிடிச் செய்திருக்கிறான். எங்களை அவன் விழுத்திறதுக்காக வெட்டின குழியையே மேடாக்கி, நாங்கள் வலிமையாய் ஊடகத்துறையில எழுந்து நிற்கோணும். எங்களில ஒரு ஆளை அழிக்கிறதால, அதேமாதிரியான பலரை எங்களுக்குள்ளை உருவாக்கி விடிறாங்கள் எண்டு, அவன் அஞ்சிற மாதிரி நாங்கள் மிஞ்சோணும். ஊடகத்துறையில ஈடுபடிற ஆக்களை மக்களும் மதிச்சு ஆதரவளிக்கோணும். தேடலோட அதை வளர்த்தெடுக்கோணும். நேற்றையான் இன்னுமொண்டிலை பார்த்து இண்டையானை நிரப்பி ஏதோ சரிக்கட்டிற எங்கட 'சுகமான' வேலையளை விட்டுவிட்டு, கூடுதல் வீரியத்தோட செயற்படோணும். எழுத்துத்துறையில ஈடுபட்டிருக்கிற எல்லாத்தமிழரும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாமனிதர் தராகி டி.சிவராம் மேம் மானசீகமாக உறுதி எடுத்துக் கொள்ளோணும். நக்கீரப்பாரம்பரியம், 'நாமார்க்கும் அஞ்சோம் நமனை அஞ்சோம்!' எண்டு சூளுரைச்ச நாவுக்கரசரின்ரை பரம்பரை, அது இதெண்டு வெற்று வசனம் பேசிக் கொண்டிருக்கிறதைவிட்டிட்டு, தேடலோட கூடிய புதிய ஊடகப்

வடக்கில யேர்மனி, கிழக்கில ஒஸ்திரியா, தெற்கில இத்தாலி, மேற்கில பிரான்ஸ் எண்டு எல்லையளைக் கொண்டிருக்கிற சுவிஸ் இலங்கையைவிட சின்ன நாடு (41 285 சதுர கி.மீ.- இலங்கை 65 610 ச.கி.மீ.). ஹெல்வேற்றிகா எண்டு சுதேசியமாய் அழைக்கப்படிற இதின்ரை சனத்தொகை கிட்டத்தட்ட 7 மில்லியன். தலைநகரம் பேர்ண். நாணயம் சுவிஸ் ஃபிராங்க். மொழி எண்டு குறிப்பாய் ஒண்டைச் சொல்லேலாது. 65 வீதமான ஆக்கள் யேர்மனிய டொச் (டச் இல்லை, அது நெதர்லாந்து மொழி) ஐயும், 20 வீதமானவை பிரெஞ்சையும், 8 வீதம் இத்தாலி மொழியையும், கிட்டத்தட்ட 1வீதமானவை ருமேனிய மொழியையும் கதைக்கினம். அரசியல் ரீதியாகவும், நடைமுறையளிலையும் 4 மொழிக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிது. அந்தந்த மொழிக்குரிய கன்ரனில (எங்கட மாவட்டம் மாதிரி) அங்கத்தைய மொழிதான் கற்பிக்கப்படுகிது. ஒண்டை மற்றது அடக்க முனையாததால எந்தவித காழ்ப்புணர்ச்சியையும் காணேலாமல் இருக்கிது. இதைத் தவிர துருக்கி, போர்த்துக்கல் நாடுகளிலை இருந்து வந்த ஆக்களும் இருக்கினம். அப்ப எங்கட சனம் என்னமாதிரி எண்டு நீங்கள் கேட்கிறது விளங்கிது. இஞ்சை எங்கட தமிழ்ச்சனம் ஒரு 35 000 இற்கும் குறையாமல் இருக்கினம்.

(22ஆம் பக்கம் பார்க்க)



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 09

### பகுதி -46

"சுவர்களை வெறுக்கிறேன்.
பூட்டிக் கொள்ளும் கதவுகளையும்
உள்ளே தள்ளிவிடும் ஆட்களையும்
நான் வெறுக்கிறேன்.
கண்ணீரையும் கோபமான சொற்களையும்
நான் வெறுக்கிறேன்.
என் சிறிய வெட்டுக் கத்தியால்
இவை எல்லாவற்றையும் கொல்வேன்.
எலும்புகளை அடித்து நொருக்குவேன்.
அவற்றின் மீது காறித்துப்புவேன்..."

கையை நீட்டி ஒரு பொம்மை போர் வீரனை எடுத்தவன் றப்பர் சுத்தியலால் அதற்கு அடித்தான். அதன் மீது துப்பினான்.

"உன் முகத்தில் துப்புகிறேன்
உன் கண்ணில் துப்புகிறேன்
மண்ணின் ஆழத்தில்
உன் தலையை புதைக்கிறேன்"

என்று பாட்டுத் தொடர்ந்தது. அவனது குரல் இனிமையாகவும் தெளிவாகவும் ஒலித்தது.

"கிழக்கிலிருந்து மேற்காய்
பறக்கின்ற பறவைகள் போல்
நான் ஆக வேண்டும்.
சுவர்களின் மேலாக பறப்பேன்.
கதவுகளுக்கு வெளியே பறப்பேன்.
என் எதிரிகளை விட்டு
தூர...தூர...தூர பறப்பேன்.
உலகை சுற்றி வருவேன்.
மீண்டும் மணலுக்கு வருவேன்.
விளையாட்டு அறைக்கு வருவேன்.
என் நண்பரிடம் திரும்பி வருவேன்.
மணலில் புதைந்து கொள்வேன்.
மணலை அள்ளி எறிவேன்.
அதில் இருந்து விளையாடுவேன்.
மணல் மணிகளை எண்ணுவேன்.
மீண்டும் குழந்தையாக ஆவேன்"

சூப்பிப் போத்தலை மீண்டும் உறிஞ்சினான். என்னைப் பார்த்து பெரிதாக சிரித்தான்.

"எப்பிடி? என்ர பாட்டு பிடிச்சிருக்கோ?" என்று கேட்டான்.

"அருமையான பாட்டு" என்றேன்.


"ஓம் அது அருமையான பாட்டுத்தான்" என்றவன் மணல் பெட்டியை விட்டு வெளியே வந்தான். என்னை நோக்கி நடந்து வந்தான். எனது கடிகாரத்தைப் பார்த்து விட்டு "இன்னும் பத்து நிமிடங்கள் இருக்கின்றன" என்று சொல்லி விட்டு பத்து விரல்களைத் தூக்கிக் காட்டினான்.

"ஓம் இன்னும் பத்து நிமிடங்கள் இருக்குது என்றேன் நான்."

பத்து நிமிடங்கள் முடிந்ததும் நான் வீட்ட போற நேரம் வந்து விடுமென்று நீங்கள் நினைக்கிறீங்கள் என்றான்.

"ஓம் நீங்கள் சொல்லுறது சரி நான் அப்பிடித்தான் நினைக்கிறன்" என்றுவிட்டு, "நீங்கள் எப்பிடி நினைக்கிறீங்கள்?" என்று கேட்டேன்.

"ஓஹோ!" என்று வியப்புக் குரல் எழுப்பிய அவன், "நீங்கள் அறிய விரும்புகிறீர்களா? நல்லது . போவதற்கான நேரம் விரைவில் வந்துவிடும் என்றுதான் நான் நினைக்கிறேன். நான் மற்றச் சண்டைபோடும் ஆட்கள வெளியில எடுக்கப்போறன். இந்த இரண்டு பேரும் துவக்குகள வைச்சிருக்கினம் இது ஒரு விமானம். ஒரு பறவையைப் போன்றது. விமானங்கள் பறக்கும். ஐயோ, இந்த விமானத்துக்குள்ள மணல் நிறைஞ்சிருக்கு. பறந்து போ... பறந்து போ.... வானத்தில பறந்து போ" என்று சொல்லிக்கொண்டே விமானத்தை மேலே நோக்கிப் பிடித்துக்கொண்டே அறைக்குள்ளே சுற்றிச் சுற்றி ஓடினான். அவனது ஓட்டம் மகிமையானதும் சந்தத்துடனானதாகவும் இருந்தது. "ஓ விமானமே எனக்குச் சொல்லு" எவ்வளவு உயரத்துக்கு நீ பறப்பாய்? நீலம் நீலமாய் தெரிகிற வானத்திற்கு கிட்ட நீ பறப்பாயா? வானத்துக்கு அங்காலயும் நீ பறப்பாயா? அங்க உயரத்தில



மழையை வைத்துக் கொண்டிருக்கிற மேகங்களுக்கும் காத்துக்கும் கிட்ட நீ பறப்பாயா? அழகான விமானமே எனக்குச் சொல்லு நீ பறப்பாயா? ஓ விமானமே.... திடீரென்று அவனது செயற்பாடுகள் நின்று போயின எதையோ முனைப்பாக காது கொடுத்துக் கேட்டான். விமானத்தை திரும்பவும் மணலில் போட்டு விட்டான். திடீரென்று அவனது மகிழ்ச்சியும் உற்சாகமும் அவனில் இருந்து எங்கோ போய்விட்டதுபோல் தோன்றியது.

"டொறத்தி இருக்கிறாள்" என்றான். பிறகு மணல் பெட்டிக்குச்சென்றான். உள்ளே ஏறிக் கொண்டான். பிறகு சவளை எடுத்து மணலைத் தோண்டி பொம்மை வீட்டினுடைய சுவர்களையும் கதவையும் வெளியே எடுத்தான். இதுகள புதைக்கிறதுக்கான நேரம் இன்னும் வரயில்ல" என்றான். துன்பம் அவன் உதடுகளை இறுகச் செய்ய அவன் என்னைப் பார்த்தான். நெற்றியில் சுருக்கங்கள் விழுந்தன. "இன்னும் ஒன்பது நிமிடங்களா?" அவன் என்னைக் கேட்டகுரல் அவனது துக்கத்தால் தரைமட்டமாகியிருந்தது.

"இல்லை. இன்னும் ஐந்து நிமிடங்கள் மட்டும்தான் இருக்கு" என்று அவனுக்குச் சொன்னேன்.

"அப்படியோ?" என்றவன் ஐந்து விரல்களைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு "மிச்ச நாலும் எங்க போனதுகள்?"

"நாலு நிமிடங்கள் கடந்து போய்விட்டன. என்று நீங்கள் நினைக்கையில்லையா?"

"வீட்டபோற




நேரம் கெதியா வந்துவிடும்"

டிப்ஸ் சொன்னான். "நான் வீட்டபோக விரும்பாட்டியும் அது வரும். இப்ப எல்லாம் முடிந்துபோய்விட்டது எண்டு சொல்லுகிற நேரம் வரும்" "ஓம்" என்று பதிலளித்தேன். "அப்பிடித்தான் என்றாலும் நேரம் முடிவுக்கு வரத்தான் வேண்டும்" தொடர்ந்து சொன்னேன்.

வெளியே ட்ரக் புறப்பட்டுச்செல்லும் ஓசை கேட்டது. "அந்தா... எங்கட ட்ரக்போகுது" என்ற டிப்ஸ் "உங்களுக்கு கேட்கயில்லையா?" என்றான். "எனக்கு கேட்டது"

"ட்ரக்குக்கும் வீட்டபோற நேரம் வந்திடடுது" டிப்ஸ் சொன்னான்.

"ஓம் அப்பிடித்தான் என்று நினைக்கிறன்."

"இன்னும் எவ்வளவு நிமிடம் இருக்குது?" டிப்ஸ் கேட்டான்.

"மூன்று நிமிடங்கள்"

பொம்மை வீட்டின் கதவை கையில் எடுத்துவைத்துக்கொண்டே அதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"நான் இதை பொம்மைவீட்டில பொருத்திப் போட்டு ஜன்னல்கள் எல்லாத்தையும் பூட்ட வேணும்.என்றவன் ஆணியை அடிக்கிற சுத்தியல் எங்கே?" என்று கேட்டான்.

இப்ப இஞ்ச ஒண்டும் இல்ல. நீங்க விரும்பினா அத றாக்கைக்கு மேல அல்லா விட்டால் பொம்மைவீட்டுக்க வையுங்க. பொறுப்பாளர் பிறகு அத பொருத்திவிடுவார்" என்றேன்.

டிப்ஸ் அதை மேசைமீது வைத்தான். பின்பு மனதை மாற்றிக்கொண்டு அதை எடுத்து பொம்மை வீட்டுக்குள் வைத்தான். பொம்மை வீட்டின் ஜன்னல்களை பூட்டிவிட்டான்.

தனது சப்பாத்தை தூக்கிவந்து என்னிடம் தந்து "இதைப் போட்டுவிடுங்கோ" என்றான். நான் கதிரையில் அமர்ந்துகொண்டபின் சப்பாத்துகளை போட்டுக் கொண்டிருக்கும் பொழுதே "தொப்பியையும் கோட்டையும் போட உதவி செய்யுங்கோ" என்றான். திடீரென்று ஒன்றும் இயலாதவன் போல் ஆகிவிட்டான். நானும் அவற்றை போட்டுவிட்டேன்.

"ஆக்கள் எல்லாரும் வீட்டுக்கை நித்திரை" என்றவன் தொடர்ந்து "வெளியில முன் வசந்தகால இரவு இருளும் நித்திரையும் வாறநேரம். அவர்கள் நித்திரை கொள்ளுகினம். நித்திரை....நித்திரை... தொடர்ந்தும் நித்திரை கொள்ளுவம் எண்டு சொல்லுகினம். சில நேரங்களில வெக்கையா சில நேரங்களில குளிராயும் ஆனா எல்லா நேரங்களிலயும் பாதுகாப்பான இந்தமாதிரி இடத்திலதான் நித்திரைகொள்ளவேணும். நித்திரை கொண்டபடி இருக்கவேணும். அந்த நேரத்தில வேற மாதிரி ஒரு கதவை பொருத்திக்கொள்ளுவினம் உள்ளுக்கும் வெளியிலையும் திறக்கக் கூடியமாதிரி ஒரு கதவு. நீங்கள் அதுக்குக்கிட்ட போனதும் தானாக திறந்து கொள்ளுறமாதிரி ஒரு கதவு. திறப்புக்கிடையாது. அடித்து மூடுறதும் இல்ல. இப்பநான் உங்களுக்கு பிரியாவிடை சொல்லிப்போட்டு போகப்போறன்" என்று என்முன்னே நின்றபடி ஆர்வத்தோடு என்னை நோக்கினான். "என்னை நினைத்துக் கொண்டே இருங்கள்" என்றான். "நான் பிறகு வருவேன்" என்றான்.

"ஓம் நீங்கள் பிறகு திரும்பி வருவீங்கள் நான் நினைத்துக்கொண்டே இருப்பேன்"

அந்த வேளையிலே, கழிவுக்கடதாசி கடையிலே வெட்டியெடுக்கப்பட்ட மிருகம் ஒன்றின் உருவம் கிடப்பதை டிப்ஸ் அவதானித்தான். "இது எனக்கு வேணும்" என்றவன் "இதை நான் எடுத்துக்கொள்ளலாமா?" என்று கேட்டான்.

"ஓம்" என்று நான் சொன்னேன்.

டிப்ஸ் அதை தன் பொக்கற்றில் வைத்துக் கொண்டான். "ஓம் டிப்ஸ் நீங்கள் அதை வீட்ட கொண்டு போகலாம். நீங்கள் விரும்புறது அதத்தான் எண்டா நீங்கள் அதைக்கொண்டு போகலாம் எண்டு சொல்லவேணும்"

"ஓம் டிப்ஸ் நீங்கள் அதை வீட்டகொண்டு போகலாம். நீங்கள் விரும்புறது அதத்தான் எண்டா நீங்கள் அதைக்கொண்டு போகலாம்" அவன் சொன்னமாதிரியே திருப்பிச் சொன்னேன்.

டிப்ஸ் சிரித்தான். கையை நீட்டி என்கையில் பாராட்டுவதுபோல் தட்டினான். "அது நல்லாக இருந்துது" என்றான். கதவைத் திறந்த அவன் ஒரு அடி எடுத்து மண்டபத்தினுள் வைத்தான். பிறகு திரும்பிவந்து எனது கைக்கடிகாரத்தைப் பார்த்தான். எட்டிக் கதவைப் பிடித்து படார் என்று சாத்தினான். இல்லை. என்னும் நேரமாகவில்லை. இப்பதான் நாலே கால். கோயில் மணி அடிக்கும்வரை இருக்கப் போகிறேன் என்றான்.

"நீங்கள் இண்டைக்கு வெள்ளன வந்தனீங்கள் ஆனபடியா வெள்ளனப் போகவேணும். நீங்கள் இங்க சரியா ஒரு மணித்தியாலம் இருந்திட்டீங்கள்"என்றேன்.

(தொடரும்)

---

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரான்ஸ் மாதிரி இல்லாமல் சின்னநாடாக இருக்கிறதால எல்லாரும் அடிக்கடி நேர தொடர்பு கொள்ளக்கூடியதாய் இருக்கு. பிரான்ஸில இருக்கிறதாய் நான் சொன்ன அத்தினை றேடியோ, ரீவிக்களும் இஞ்சையும் கேட்கலாம். தமிழ் ஆக்கள் நம்பிக்கைக்குரிய கடினமான உழைப்பாளியள் எண்ட பேர் சுவிஸ் மக்கள் மத்தியில இருக்கிது. நான் பரிஸை குட்டி யாழ்ப்பாணம் எண்டு சொன்னனான் அல்லோ. சுவிஸை குட்டித்தமிழீழம் எண்டே சொல்லலாம். அவ்வளவுக்கு இஞ்சையிருக்கிற எங்கட ஆக்களின்ரை உணர்வு நிலை இருக்கிது. தாய்மொழி, கலை, கலாச்சாரம், கோயில், கொண்டாட்டம் எண்டு எல்லாத்தையும் இஞ்சத்தைய சூழலுக்கு ஏற்றவகையில நடத்திக் கொண்டுவருகினம்.

ஆட்கள் சுவிஸ் நல்ல வடிவான நாடெண்டு சொல்லிறது சத்தியமாய் உண்மைதான். அதிலையும் இதின்ரை பரப்பளவில ஒரு 70 வீதமான பகுதிக்குப் பரந்திருக்கிற அல்ப்ஸ் மலை தனித்துவமானதொரு குறிஞ்சி அழகை இதுக்குக் குடுத்திருக்கிது. பெரிய நகரங்கள் எண்டால் தலைநகரம் பேர்ண் தவிர சூரிச், ஜெனீவா, பாசல், லௌசான் எண்டு கொஞ்சத்தைச் சொல்லலாம். அதிலையும் இந்த ஜெனீவாவிலதான் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் (ICRC), உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) உட்பட பலநூறு சர்வதேச நிறுவனங்களின்ரை தலைமைச் செயலகங்கள் இருக்கிது. கனிய வளங்கள் எண்டு பெரிசா இல்லாட்டியும் மலைப்பாங்கான நாடெண்டதால மொத்த மின்சாரத்தேவையில 60 வீதத்தை நீர்வீழ்ச்சியள் மூலமே பூர்த்திசெய்துகொள்ளினம். நாட்டின்ரை 30 வீதமான பிரதேசத்தில காடு அழியாமல் பாதுகாக்கப்படுகிது. உலகத்திலை இருக்கிற வசதியான நாடுகளுக்கிள்ளையே கூடுதல் தனி மனித வருமானத்தோட சுவிஸ் உச்ச இடத்தில இருக்கிது. ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட பாரிய இயந்திரங்கள், ரசாயனத்தயாரிப்புகள், மணிக்கூடுகள், சுவிஸ் வங்கி எண்டு பலதும் உற்பத்திசெய்யப்படிது. சொக்லேற்றுக்கும் சுவிஸ் எண்டால் உலகம் பூராவே ஒரு தனிமதிப்புத்தான்! ஏன் நீங்கள் எல்லாரும் அறிஞ்ச Nestle கூட சுவிஸ் நாட்டான்தான்.

என்ன இருந்தாலும் பெரிசா இயற்கை வளம் ஒண்டும் இல்லாமல் என்னண்டு சுவிஸ் உந்தளவு வசதியாய் இருக்கிதெண்ட விசயம் எனக்கு முதல்லை விளங்கவேயில்லை. அதை யோசிச்சோ என்னவோ தலையிடியும், காய்ச்சல் குணமுமாய் ஏலாமல் வந்திட்டிது. குளிர், கிளிர் ஏதாவது ஆளை விழுத்திப்போடுமோ எண்டு பயந்தாய், நிண்ட வீட்டுக்காரர் டொக்ரரட்டைக் கூட்டிக்கொண்டு போய்ச்சினம். டொக்ரர் என்னை வடிவாய்ப் பரிசோதிச்சுப் பார்த்திட்டு, 'பயப்பிடிறதுக்கு ஒண்டுமில்லை! சும்மா வழமையானவைதான்!', எண்டு சொல்லி ஏதோ 'கமீலன்ரே' எண்ட மருந்தைத் தந்தார். வீட்டை வந்து 2 தரம் சுடுதண்ணியிலை கரைச்சு வயிறு முட்டக்குடிச்சன். உள்ள வியாதியெல்லாம் எங்கை போனதெண்டு எனக்கே தெரியேல்லை. 'எட ! அந்தமாதிரி மருந்தாய்க் கிடக்கிது. காய்ச்சல், தலையிடி, வயித்துப்பிரச்சினையள் எண்டு எல்லாத்துக்கும் நல்லதாம்'. சுவிஸ் மருந்தெண்டால் சொல்லவே வேணும், எண்டிட்டு அந்த வீட்டுக்காரத் தம்பியிட்டைக் கேட்டன், 'தம்பி! வெளியால போற நேரம் ஒருக்கால் சொல்லும். நானும் .'.பார்மஸிக்குப் போய் டொக்ரர் தந்த மாதிரி 2,3 மருந்துப்பெட்டியள் வாங்கவேணும். சே ! என்ன அருமையான மருந்து அது !'. அவர் ஒரு மாதிரி ஒரு புன்னகையைச் சிந்தினார். 'கிழவனுக்கு சாகிற விருப்பமே இல்லை. வெளிநாட்டு மருந்துகள் பாவிச்சு இன்னுமொரு 10 வருசம் கூட இருக்கப்போகுதாக்கும்', எண்டேதாவது தான் பொடியன் நினைச்சிருப்பான் எண்டு நினைச்சன். ஆனால் அப்பிடியிருக்கேல்லை. 'என்னப்பு ! எங்கட நாடுகளிலை பத்தை பத்தையாய் கிடக்கிறதை இஞ்சையிருந்து காவிக்கொண்டு போகப்போறீங்களோ?'. 'என்ன தம்பி ! புதிர் போடிறீர்?'. 'வேறென்ன ! நாங்கள் இஞ்சைத்தே மொழியில 'கமீலன்ரே' எண்டிறம். தமிழில அதுக்குப்பேர் குப்பைமேனிப்பூண்டுநீர். இலங்கையில இருந்தும் எடுத்துத்தான் பொதி பண்ணி இஞ்சை விக்கப்படுகிது. உடலின்ரை சீரான செயற்பாட்டுக்கு மிகத்திறமானதெண்டதாலதான், கைக்குழந்தையளுக்கும் குடுக்கச் சொல்லி இஞ்சை டொக்ரர்மார் வலியுறுத்திறவை. சாதாரணமான காய்ச்சல், தலையிடி, குறிப்பாய் வயிற்றுக் கோளாறுகளுக்கு 'கமீலன்ரே'.. இல்லை.. குப்பைமேனி பாவிச்சு சரிவராத பட்சத்திலதான், டொக்ரர் வேற மருந்து தருவார்'. எனக்குத் தூக்கி வாரிப்போட்டிது. எங்களுக்கு எங்களைச் சுத்தியுள்ள ஒண்டின்ரை பெறுமதி விளங்கேல்லை. தொட்டதுக்கும் பரசிற்றமோல் விழுங்கிக் கொண்டிருக்கிறம். குழந்தையளுக்கு நெஸ்ற்லே பால்மாக்கள் கரைச்சுக் கரைச்சுக் குடுக்கிறம். அந்த நெஸ்ற்லே தயாரிக்கிற நாட்டில குப்பை மேனித்தேநீர் குடுக்கினம். ஒண்டு மட்டும் எனக்கு விளங்கிது : நாங்கள் எங்கட கண்கடை தெரியாத உந்தப் போக்குகளைக் கைவிடாத மட்டும், எங்களுக்குப் பொருளாதார மீட்சி இல்லவே இல்லை. இப்ப எனக்கு அவங்கள் என்னண்டு முன்னேறியிருக்கிறாங்கள் எண்ட விசயம் விளங்கீட்டிது. உங்களுக்கும் விளங்கிதோ? வாறமுறை வேற ஒரு முக்கியமான நாட்டில சந்திப்பம். நான் முதலும், இப்பையும் சொன்னதுகளை யோசிச்சுப்பாருங்கோ !

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்ப வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*



# பாவலன் பதில்கள்

*பவலா!*

*கடந்த கிழமை எனக்கு ஒருவன் அடித்துவிட்டான். ஆனால் நான் திருப்பி அடிக்காமல் கூறினேன் நான் திருப்பி அடித்தால் நீ செத்துப்போய் விடுவாய் என்று. ஆனால் அவன் சிரித்தான் ஏன் சிரித்தான்?*

*மம்ஸ்கா,*
*கிளிநொச்சி.*

உங்கள் கேள்வியைப் பார்த்தால் எனக்கு சிரிப்புத்தான் வருகிறது ஏன்?

*பாவலா!*

*பொதுக்கட்டமைப்பு விவகாரத்தைப் புறக்கணிக்கும் ஜே.வி.பி போன்றோருக்கு தாங்கள் கூறுவது என்ன?*

*A.M.ராஜா*
*தேவிபுரம்.*

நான் சொல்லி அவர்கள் எதையாவது கேட்கவா போகிறார்கள்? வேறு எதைப்பற்றியாவது கேளுங்களேன்!

*பாவலா!*

*நான் ஒரு மாணவி என்றபடியால் உங்களிடம் கேட்கிறேன் அண்மையில் வெளியான சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் பற்றி நீங்கள் கருதுவது யாது?*

*கல்யாணி,*
*தேவிபுரம்.*

மிகச் சாதாரண தர முடிவுகளாகப் போய்விட்டதே...!

*பாவலா!*

*சமாதான முயற்சிக்கு அயராது உழைக்கும் நோர்வேயின் விசேட தூதுவர் பற்றி நீங்கள் கூறும் கருத்து என்ன?*

*நா.தம்பிராசா,*
*கிளிநொச்சி.*

அவர் சமாதானத்தை ஏற்படுத்துவதில் விடாமுயற்சியாக இருக்கிறார் அரசோ சமாதானத்தை அணுகவேமாட்டேன் என்று விடாப் பிடியாக இருக்கிறதே!

*பாவலா!*

*நேற்று நிமலராஜன், நடேசன், இன்று சிவராம் நாளை?*

*தயா,*
*கந்தபுரம்.*

இந்த வரிசை தொடராமல் இருக்கவேண்டும் என்பதே விருப்பம். ஆனால் தர்மமற்ற கொலையாளிகளின் விருப்பத்தை யார் அறிவார்.

*பாவலா!*

*கயவர்களால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாமனிதர் சிவராம் கொலைக்குப்பின் இன்றைய தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நீர் கூற விரும்புவது என்ன?*

*அ.மதன்,*
*கிளிநொச்சி.*

துப்பாக்கி முனை பேனா முனையை இலக்கு வைத்து அழிக்க முடியாது. அப்படிச்செய்ய முனைபவர்கள் வரலாற்று தோல்வியையே தமதாக்கி கொள்வார்கள். துப்பாக்கி ரவை ஒரு மனிதனை ஊடுருவலாம். ஆனால் பேனா முனை உலகத்தையே ஊடுருவும் அவ்வளவுதான்.

*பாவலா!*

*சனாதிபதி வாயால் மட்டுமே பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தி நாட்டுப் பிரச்சினையை தீர்ப்பார் போல் உள்ளதே?*

*மாலதி,*
*உருத்திரபுரம்.*

வாய்ச்சொல் வீரர்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டதாக வரலாறே கிடையாது.

*பாவலா!*

*எனக்கு வயது 15 யாழ்ப்பாணம் உயர் பாதுகாப்பு வலயத்தில் எங்கள் வீடு உள்ளது. வீட்டினை எனது 5 வயது பிறந்தநாள் போட்டோவில் பார்த்தேன் அவ்வளவுதான் இன்று வரை எப்படி இருக்கிறதோ தெரியாது. நேரில் பார்க்க வேண்டும்போல் உள்ளது என்ன செய்யலாம்?*

*சிவாஜினி,*
*திருவையாறு.*

உயர் பாதுகாப்பு வலயம் இப்போது உங்களின் உயிருக்கு பாதுகாப்பு வலயமாக இருக்கப் போவதில்லை. முதலில் எதிரியை எங்கள் எல்லையை விட்டே துரத்த வேண்டும் என உறுதி எடுத்துக் கொள்ளுங்கள்.

*பாவலா!*

*நான் ஒருவரை உயிருக்கு உயிராய் நேசிக்கின்றேன். இப்போது பிரச்சினை என்னவென்றால் எங்கள் திருமணத்திற்காக இருவரின் சாதகக் குறிப்பும் பார்த்தபோது அவருக்கு செவ்வாய் குற்றமாம். இதனால் எங்கள் வீட்டில் எதிர்ப்பு பலமாய் உள்ளது. ஆனால் எனது முடிவு வாழ்க்கை என்றால் அவருடன்தான்? இந்நிலையில் நான் என்ன செய்வது?*

*கலைச்செல்வி,*
*யாழ்ப்பாணம்.*

சாதகமாக இருந்தால் மட்டுமே அதனை சாதகம் என ஏற்றுக்கொள்ளலாம். அது பாதகமாக இருந்தால் தூக்கி எறிந்து விட வேண்டியதுதானே. அதற்கு துணிச்சல் உண்டா.

*பாவலா!*

*எமது சமுதாயத்தை சீரழிக்க நினைக்கும் சில இளைஞர் யுவதிகள் பற்றி என்ன நினைக்கின்றீர்?*

*சோ.சுடர்மதி,*
*வவுனியா.*

சீர்கெட்ட சமுதாயத்தின் அடையாளச் சின்னங்கள் மட்டுமல்ல அவமானச் சின்னங்களும்கூட.




"என்னடா ரணில் பொதுக்கட்டமைப் புக்கூட்டத்துக்குப் போகமாட்டனெண்டாராம்"

''எண்டாராமில்லப் போகேல்ல.''

"ஏன்? அவர் அந்த நேரம் போட்டவேலையள அவா ஏற்கேல்ல. பின்ன அவரும் இப்ப சாதிக்கிறார்.

''என்னத்த சாதிக்கிற. அங்கால ஜே.வி.பி'யும் எதிராத்தானே நிக்குது."

''அண்ணை இருபத்தைஞ்சு வெத்திலயும் அம்பது பாக்குந்தா."

''இந்தாங்கோ-இருபத்தைஞ்சு ரூபா.."

''என்ன விலையண்ண தேங்காய்"

''எடுங்கோ போட்டுத் தரலாம்"

"முதல் விலையச் சொல்லுங்கோ..."

"இது பத்து ரூபா- அது சோடி இருபத்தைஞ்சு இது பதினாறு எதில போட"

"இதென்னடாப்பா தேங்காய் உந்தவிலை"

"அண்ணை எரிபொருள் விலையேறீற்றுது தெரியாதே..."

"தேங்காய்க்க எரிபொருள் எங்கவந்தது. அப்பிடிப் பாத்தாலும்... ஏத்துக்கூலி ஒவ்வொரு தேங்காயிலும் ஒவ்வொரு ரூபாயா விழுதோ...?

"என்னண்ண பகிடியே உரிச்ச மட்டை உள்ளுக்க சிரட்டை சொட்டில தேங்காண்ணை எத்தின எரிபொருள் உதுக்க கிடக்கு போதாததுக்கு....

போதும் போதும் விட்டா வீட்டில கிடக்கிற கிடுகு வரைக்கும் கதைப் பாய்... ஒரு தேங்காய்தா....

"ப்பூ... ஒரு தேங்காய்க்கே உவளவு கதை.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –119



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினை வுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–119

.......................................................................
.......................................................................
.......................................................................
.......................................................................

பெயர் : ..........................................................
முகவரி : ..........................................................
..........................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –118



**சி.மதீனா(சாமந்தி)**
**கயல்விழி அழகு**
**சோலை,**
**புதுக்குடியிருப்பு.**

### பரிசுக்குரிய வரிகள்

*வளம் கொளிக்கும் எம் திரு நாட்டில்*
*வயல் செய்கை செய்துழைத்திடலாம்*
*திடமாய் உன் மனதினை கொண்டு*
*திடல் மீதேறி எடு தண்ணீர் நம் தாகம் தீர்க்க!*

### பாராட்டுக்குரிய வரிகள்

*தண்ணீர் குடத்தோடு வயல் வழிகளில் பயணிக்கும் தாயே*
*தயக்கத்தோடு தூரத்தே என்னம்மா பார்வை*
*தமிழீழ சாதனைப் பெண்கள் எமக்கு பயம் எதற்கு*
*தற்துணிவோடு புயலென புறப்படு புதுமைப் பெண்ணாக.*

சு.சிவாஜினி,
புதுக்குடியிருப்பு.

*கையில் குடத்துடனே கனவுகளை சுமந்து*
*வரம்பினிலே செல்லும் தாயே - நாம்*
*ஒன்று சேர்ந்து உழைத்து தமிழீழம் பெற்று*
*உன் கனவை நனவாக்கிடுவோம்.*


சு.ராஜசெல்வி,
கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி.

*பாட்டன் பூட்டன் விதைத்த நிலமெல்லாம்*
*பகைவர் விதைத்த கோரப் பொறிகள்*
*மலிந்து கிடப்பதை இங்கு*
*ஈழத்தாய் உற்றுப் பார்க்கிறாளோ.*

சி.இன்பராஜ்,
மீசாலை.

*வன்னியன் வாழ் மண் வாழ்வளிக்கும்*
*வரம்பிலும் வளர்பனை வளம் பெருக்கும்.*
*வற்றாத நீர்வளம் வளம் செழிக்கும்*
*தாயவள் நீரள்ள அருவிகள் காத்திருக்கும்.*

எஸ்.ரவிக்குமார்,
திருமுறிகண்டி.


இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்

அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு

# மீண்டும் யாழ்ப்பாணத்தில்...

## ஈழநாதத்தின் கிளைப்பணிமனை

தொடர்புகளுக்கு: இல:31,வைமன் வீதி,யாழ்ப்பாணம். தொ.பே:021-222 7917



## 14.05.2005 இல் முதலாவது ஆண்டில் கால்பதிக்கும்....

திருமண விழாக்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள்,பிறந்தநாள் விழாக்கள், உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து விழாக்களிற்கும் தரமான முறையில் படம் பிடித்துத் தர நீங்கள் நாடவேண்டிய இடம்....

எமது சேவைகள்....

- உட்புற வெளிப்புற படப்பிடிப்பு
- டிஜிற்றல் முறையிலான வீடியோ படப்பிடிப்பு
- டிஜிற்றல் முறையிலான அல்பம் தயாரித்தல்
- புகைப்படத்துடன் கூடிய திருமண வாழ்த்துக்கள் பிறந்தநாள் வாழ்த்துக்கள் அழைப்பிதழ்கள் வடிவமைத்தல்
- கணனி மூலம் பழுதடைந்த பழைய புகைப்படங்களை புனரமைத்தல்
- கறுப்பு வெள்ளை புகைப்படங்களை கலர் படமாக மாற்றுதல்

விசேடமாக
அவசர தேவைகருதி
15 நிமிடங்களில்
புகைப்படங்களைப்பிரதியாக்கல்.

## TS துளசி புகைப்படக்கலையகம்

மத்தியகல்லூரி முன்பாக ஆனந்தபுரம்,
கிளிநொச்சி. தொ.பே:021-228 5989








படங்கள்:கா.சுரேன்

மட்டு சந்திவெளியில் மக்கள் மீதான படையினரின் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தையடுத்து 10-05-2005 அன்று கிளிநொச்சியில் நடைபெற்ற அரசுக்கெதிரானஆர்ப்பாட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் கண்காணிப்புக்குழுவினரிடம் மகஜர் கையளிப்பதையும் இக்கண்டனப் பேரணியில் கலந்து கொண்ட ஒரு தொகுதி மாணவர்களையும் காணலாம்.


## குமரகுரு

உங்கள் இன்றைய தெரிவுக்கு...

புடைவை
அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி

KUMARAKURU
Textile & Fancy House
Yarl Road, Kilinochchi.
(சி-1174)



## EXPOAIR
your friend in the skies...

எக்ஸ்போ எயாரில் பயணியுங்கள்...
யாழ்ப்பாணத்தைக்கண்டுகளியுங்கள்...
அனுபவம் வாய்ந்த நட்புறவு...
நம்பகத்திற்கு எக்ஸ்போ எயார்...

EXPO AVIATION(PVT)LTD.
1E,Stanly Road, Jaffna.
Tel: 021-222 3891/6297 077-2349999/8888
email:Jaffna@expoavi.com/reservations@expoavi.com

(C-10120)



இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | சித்திரை 30 | 13 –05–2005 | வெள்ளிக்கிழமை | ஓசை –84


உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V.பந்தல் சேவை
முல்லைச்சாலை, தருமபுரம்.
T.P:0712-610008
(சி-11902)
விநாயகர் வீதி, மயிலிட்டி.

# சந்திவெளி துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து

# யாழ்.மாணவர் நடத்திய மாபெரும் பேரணி!

## பல்கலை மாணவரும் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்டத் தமிழ் மாணவர் ஒன்றியத்தினரால் சந்திவெளிச் சம்பவத்தைக் கண்டித்து மாபெரும் கண்டன ஊர்வலம் நேற்று யாழ்.இல் நடாத்தப்பட்டது. இதில் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்களும் பெருமளவில் கலந்துகொண்டனர்.**

கடந்த திங்கட்கிழமை மட்டக் களப்பு சந்திவெளிப் பகுதியில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி அமைக்கப்பட்ட இராணுவக் காவலரணை அகற்றக்கோரி அகிம்சை வழியில் போராட்டம் நடத்திய மக்கள் மீது அரசபடைகள் மேற்கொண்ட அராஜகத்தைக் கண்டித்தே இந்தக் கண்டன ஊர்வலம் நடத்தப்பட்டது. ஊர்வலத்தில் பெருந்தொகையான பாடசாலை மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர். நல்லூர் முன்றலில் இருந்து தொடங்கிய கண்டனப்பேரணி கோவில் வீதி வழியாக நகர்ந்து இலங்கைப் போர் நிறுத்தக்

(IVஆம் பக்கம் பார்க்க)



## உதவி வழங்குவோர் மாநாட்டில் 4 விடயங்களுக்கு முக்கியத்துவம்

(கொழும்பு)

கண்டியில் வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் சுனாமி மீள் கட்டமைப்பு இலங்கையின் பொருளாதாரக் கொள்கை, சமாதானம் மற்றும் அபிவிருத்தி என்னும் முக்கிய தலைப்பின் கீழ் கருத்துக்கள் முன் வைக்கப்படவுள்ளன.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையின் பொரு ளாதார அபிவிருத்திக்கு எதிரான சவால் குறித்து திறந்த முறையில் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், விசேடமாக இலங்கையின் அபிவிருத்தி,பொருளாதாரத் துறை அபிவிருத்தி ஆகியவற்றில் தாக்கங்களை ஏற்படுத்தும் அனைத்துப் பிரிவுகள் குறித்தும் முழுமையாக ஆராயவுள்ளதாகவும், தனது அனுபவத்தின் அடிப்படையில் அபூர்வமாகவே நாடொன்று முழுமையாகத் திறந்த முறையில் பொருளாதாரச் சவால்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துகிறது. இது நாம் அனைவரும் பெருமைப் படக்கூடிய ஒன்று. இதற்குத் தேவையான அனைத்து

(IVஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்புக் குறித்து சனாதிபதி மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்!

### பீரிஸ் கோரிக்கை

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் சனாதிபதி நாட்டுமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. நேற்றுக் கொழும்பில் ஊடக மாநாட்டை நடத்திய ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜி. எல் .பீரிஸ் இதை வலியுறுத்தியுள்ளார். சனாதிபதி பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினால் அதனையடுத்து அது தொடர்பில் திறந்தநிலை விவாதம் நடத்த முடியும் என அவர் குறிப்பிட்டார். நாட்டின் சனாதிபதி பதவியானது மிகவும் சக்தி வாய்ந்த பதவியாகும். எனினும் இன்று அது மிகவும் பலவீனப்பட்ட பதவியாக மாற்றப்பட்டுள்ளது. நாட்டின் தலைவியானவர் உலகின் முன்னால் சக்தியற்றவராகக் கருதப் படுகிறார். பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக நாட்டுக்கு அறிவிக்காவிட்டாலும் தம்முடைய கட்சியினருக்குக் குறிப்பாக பிரதமருக்கு அது தொடர்பாகப் சனாதிபதி தெரிவிக்காமையானது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. நாட்டில் இன்று தீர்க்கதரிசனமாக முன்யோசனையுடன், தைரியத்துடன் சேவை செய்யும் தலைமை இல்லாமல் போனமை இலங்கையைப் பொறுத்தவரையில் மிகவும் வருந்தத்தக்க நிலையாகும் என்றும் ஜி .எல். பீரிஸ் குறிப்பிட்டார். ஐக்கிய தேசியக் கட்சியைப்

(IVஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. வாகனம் மீது துப்பாக்கிச் சூடு நான்கு பொலிசார் காயம்

மட்டக்களப்பு வாழைச்சேனையில் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் பயணம் செய்த வாகனம் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் பாதுகாப்புக் கடமைக்காகச் சென்ற நான்கு பொலிசார் காயமடைந்தனர்.

ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் மட்டக்களப்பு அலுவலகத்திலிருந்து வாழைச்சேனையிலுள்ள அலுவலகத்திற்கு இரண்டு வாகனங்களில் சென்று திரும்பிக்கொண்டிருந்தபோது நேற்று இந்தச் சம்பவம் நடந்தது. வாழைச்சேனை சுடலைக்கு அருகில்

(IVஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளைச் சந்தித்த பின்னரே அகாஸி சனாதிபதியைச் சந்திப்பார்

நேற்றுக் கொழும்பு வந்து சேர்ந்துள்ள ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஸி நாளை வன்னி சென்று புலிகளின் தலைவர்களைச் சந்திப்பார் என்று கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சனிக்கிழமை காலை வன்னி செல்லும் அவர் அன்று மாலையே கொழும்பு திரும்புவார். சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணத்தைப் புனரமைப்பதற்கு அமைக்கப் படவுள்ள பொதுக்கட்டமைப்புக் குறித்தும்,

(IVஆம் பக்கம் பார்க்க)

## ஒத்தி வைப்பு

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இந்திய விஜயம் பிற்போடப் பட்டுள்ளதாக சனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்துள்ளார்.

இவ்வார இறுதியில் இவ் விஜயம் மேற்கொள்ளப்படவிருந்தது குறிப்பிடத்தக்கது. இவ் விஜயம் பிற்போடப்பட்டதற்கான காரணங்கள் எதனையும் சிறிலங்கா சனாதிபதியின் பேச்சாளர் தெரிவிக்கவில்லை.

## வடக்கில் நோர்வே தூதுவர் சுனாமி பாதித்த இடங்களிற்கு விஜயம்!

### –நோர்வேயின் உதவித் திட்டங்களைப் பார்வையிட்டார்

இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் நேற்று விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளார். நேற்றுக்காலை விமானம் மூலம் யாழ்ப் பாணத்திற்குச் சென்ற இவர் சுனாமியால் பாதிப்பிற்குள்ளான வடமராட்சி வடக்கிற்குச் சென்று பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீனவர்களின் படகுகள் மற்றும் வெளி இணைப்பு இயந்திரங்களைத் திருத்துவதற்காக நோர்வே அரசின் உதவியுடன் அமைக்கப்பட்டிருந்த நிலையங்களைப் பார்வையிட்டுள்ளார்.இதே வேளை பருத்தித்துறை முனை மற்றும் ஆழியவளை, சுண்டிக்குளத்திற்கும் விஜயம் செய்ததுடன் முல்லைத்தீவிற்கும் விஜயம் செய்துள்ளார்.இவர் இன்று கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடவுள்ளதாகத் நோர்வேத் தூதரகம் தெரிவித்துள்ளது.

## சியாம்சரண்-எரிக் புதுடில்லியில் பேச்சு

நோர்வேயின் சமாதானத் தூதர் எரிக்சூல் ஹெய்ம் நேற்று முன்தினம் இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் சியாம்சரணைச் சந்தித்துள்ளார்.இந்தத் தகவலை இந்து ஆசியன் சேவை வெளியிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு சுமார் 90 நிமிடங்கள் நீடித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.எனினும் சந்திப்பின்போது பேசப்பட்ட விடயங்கள் எவையும் வெளியாகவில்லை.

(IVஆம் பக்கம் பார்க்க)

## காணி வீடு விற்பனைக்கு

### பத்தமேனி அச்சுவேலி

1 1/2 பரப்புக் காணியில் குசினி உட்பட 6 அறை, கோல், கிணறு, மலசலகூடம் உட்பட விற்பனைக்குண்டு அச்சுவேலி பேருந்து நிலையத்திலிருந்து 100 மீற்றர் தூரம் (தேவிமில்லுக்கு அருகாமையில்) தொடர்பு கொள்ள வேண்டி யது.

இல. 6, குட்செட் வீதி
வவுனியா
T.P. 024-2220466

செ. டானியல்
ஆசிரியர்

(சி.11877)

## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்குண்டு

கிளிநொச்சி இரத்தினபுரத்தில்-கிளிநொச்சி நகரக்குளம் (5அடி வான்) புதுப்பாலம் சந்திக்கும், இரத்தினபுரம் மாதாகோவிலுக்கும் இடையில் உள்ள 1/2 ஏக்கர் காணி விற்பனைக் குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல.024-2224247, 0776-059672. (சி.11903)

### விற்பனைக்குண்டு

கனகபுரம் 7ஆம் பண்ணையில் $2^1/_2$ ஏக்கர் உறுதிக்காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு முத்தம்பன் பல்பொருள் வாணிபம் கனகபுரம் றோட், கிளிநொச்சி. (6117)

### காணி விற்பனைக்குண்டு

புதுக்குடியிருப்பு கைவேலியில் 02 ஏக்கர் உறுதிக் காணி தென்னை பயிரிடப்பட்ட நிலையில் விற்பனைக் குண்டு. தொடர்பு சின்னராசா (தலைவர்) கைவேலி. (6125)

## வடகிழக்கு இளையோர் செயற்பாட்டு நிறுவனம்

பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் தகைமையுடையவர்கள் ஆண்,பெண் இருபாலாரிடமிருந்தும் கோரப்படுகின்றது.

**பதவி நிலை:-** செயற்திட்ட உதவியாளர்.

**தகைமை:-** ஆங்கில மொழியில் தேர்ச்சியுடையவராகவும், கணினி அறிவுடையவராகவும் இருத்தல் அவசியமாகும். (க.பொ.த.சாதாரணம் ஆங்கிலம் 'C' தரத்துக்கு குறையாது இருத்தல்வேண்டும்.)

**சம்பளம்:-** நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் 20.05.2005 ஆம் திகதிக்கு முன்பாக செயலாளர், இளையோர் செயற்பாட்டு நிறுவனம், யாழ்.வீதி, கிளிநொச்சி. எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (சி.11955)

## சாவு அறிவித்தல்



பிறப்பு 14 * 04 * 1947 — இறப்பு 11 * 05 * 2005

### திருமதி.இராஜலட்சுமி-சந்திரபாலன்

உதவிக் கல்விப்பணிப்பாளர் (தமிழ்)
வலயக்கல்விப் பணிமனை,முல்லைத்தீவு

முள்ளியவளை 3ஆம் வட்டாரத்தில் வசிக்கும் திருமதி. இராஜலட்சுமி சந்திரபாலன் அவர்கள் 11.05.2005 அன்று காலமாகிவிட்டார் ஈமக் கிரியைகள் 13.05.2005 காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெறும் என்பதை அறியத் தருகின்றோம்

தகவல்
குடும்பத்தினர்.

(6123)

## தமிழீழ வைப்பகம்

# பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:—** கணினி நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர்.
*Computer Programmer*

**தகைமைகள்:—** BIT கற்கைநெறி அல்லது அதனையொத்த கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தவராக இருத்தல்வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கணினிக் கல்வியில் பொது/சிறப்புப் பட்டதாரியாக இருத்தல்வேண்டும்.

அல்லது

கணினி நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு கற்கை நெறியில் டிப்ளோமா சான்றிதழும்,இரண்டு (02) வருட பட்டறிவும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**ஊதியம்:—** நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்காட்டப்பட்ட பணிநிலைக்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக் கப்பட்ட சுயவிளக்கங்களுடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் யாழ்சாலை, கரடிப்போக்கு,கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக, நடுவப்பணியகத்திற்கு,23.05.2005 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
02. ஏனைய தகைமைகளையும், பட்டறிவையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
03. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
04. நற்சாட்சிப் பத்திரங்கள்
05. மாதிரி நிகழ்ச்சித்திட்டங்கள்

மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி.11954)

## மீள் கேள்வி அறிவித்தல்

சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்

### சேதமடைந்த சாவகச்சேரி வைத்தியசாலைக் கட்டடங்களை உடைத்து சகல பொருள்களையும் எடுத்துச் செல்வதற்கான கேள்விகள்

கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை வளவுக்குள் சேதமடைந்த நிலையில் உள்ள கட்டடங்களை உடைத்து சகல பொருள்களையும் எடுத்துச் செல்வதற்கு ஒவ்வொரு விடயங்களுக்கும் தனித் தனியாகத் தேறிய பெறுமதியில் கேள்வி கோரப்படுகின்றது. உரிய கேள்விப் படிவங்களை ரூபா 250 கேள்விப்பத்திரப் பணமாகவும் (மீளளிக்க முடியாது) அட்டவணையில் காட்டிய தொகைகளை கேள்விப்பிணை யாகவும் செலுத்தி 25.05.2005 புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிவரை யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள லாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகளை 27.05.2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முன் உரிய கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விகள் உடன் திறந்து ஆராயப்படும். சித்திபெறும் கேள்விக்காரர் உடன் கேள்வித் தொகையைச் செலுத்துவதுடன், கேள்வி நிபந்தனையில் குறிப்பிட்ட காலத்துக்குள் கட்டடப் பொருள்கள் முழுமையாக எடுத்துச் செல்லப்பட்டு இடிபாடுகளும் அகற்றப்படல் வேண்டும். கேள்வி திறக்கப்படும்போது கேள்விக்காரர் அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்து கொள்ளல் முடியும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ள முடியும்.

| கேள்வி விடய அட்டவணை | பிணைப்பணம் |
|---|---|
| 1. மாவட்ட வைத்தியசாலை சாவகச்சேரியில் உள்ள புதிய நிர்வாக தொகுதிக் கட்டடத்திலுள்ள பீம் (Beam) கம்பிகளை மட்டும் கழற்றி எடுத்துச் செல்லுதல். | 50, 000. 00 |
| 2. சேதமடைந்த பழைய நிர்வாகக் கட்டடத் தொகுதியை நில மட்டம் வரை உடைத்து சகல பொருள்களையும் எடுத்துச் செல்லுதல். | 25, 000. 00 |

வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன்
பிரதி மாகாணப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

(சி. 11962)

# மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு கிழக்கு மாகாணசபை.

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தை புனரமைக்கும் திட்டம் (கார்ப்)

### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

### "ஆஅவ" கடன் இல.2043 – SRI(SF)

# கேள்வி கோரல்-இல.03

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தைப் புனரமைக்கும் திட்டத்தின் (CAARP) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து ("ஆ.அ.வ") கடன் ஒன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழே, உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப் பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டத்தின் பணிப்பாளா சார்பாக முல்லைத்தீவு மாவட்ட கேள்விச்சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | MU/CAARP/ED/22 | முல்/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் 120'X25' மூன்றுமாடி வகுப்பறைக் கட்டடத்தை நிர்மாணித்தல். | M6 | 94000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக ( ICTAD இல் மேற்படி M7 இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைச் திருப்திகரமாகமுடித்ததுடன் , கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.

IV "ICTAD"வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலைவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைசெயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப் [illegible] தற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

VII கேள்வி கோருவோர் பெறுமதி சேர் வரி (VAT) பதிவுச்சான்றிதழின் நிழற்பிரதியை அல்லது நிறுவனம் பதிவு செய்யப்படாத சந்தர்ப்பத்தில் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளரிடமிருந்து உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தை 'B' கடித உறையுடன் சமர்ப்பிக்கப்படும் ஏனைய ஆவணங்களுடன் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் CAARP வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.01.07.2003 இற்குப் பின் பதிவுசெய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்டதில் உள்ள ஒப்பந்தக்காரர்கள் ஒத்த தன்மையிலான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ முடித்திருத்தல். ஏதாவது ஒப்பந்தக்காரர்களுக்கு CAARP திட்டத்தில் அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை ஒன்றாகும்.

5. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம் NECORD , முல்லைத்தீவில் பெற்றுக்கொள்ளலாம்.

6. ஒப்பந்த ஆவணங்களை 2005 மே 16 இல் இருந்து 2005 மே 27 வரை முற்பகல் 9.30 இலிருந்து பி.ப 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்தில் இருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/= செலுத்திக் கொள்வனவு செய்யப்படலாம்.

7. முன்கூட்டியே ஒப்பந்தக் கூட்டம் ஒன்று, முல்லைத்தீவு NECORD அலுவலகத்தில் 2005 மே 31ஆம் திகதி முற்பகல் 10.00மணிக்கு நடைபெறும்.

8. கேள்வி முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் அவை கீழே ஒன்பதாம் பந்தியில் காட்டப்பட்டவாறு உரிய இடத்தில் உரிய நேரத்திற்குள் அனுப்பப்பட வேண்டும்.

9. ஒப்பந்தப்பிணை முறியுடன் பொறிவைத்த கேள்விகள், தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, CAARP , மாவட்ட கருத்திட்ட அலு வலகம், கச்சேரி, முல்லைத்தீவிற்கு 2005 யூன் 8ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்க அனுப்பப்பட வேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக் குத் தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

*திருமதி. இமெல்டா சுகுமார*
*தலைவர்,மாவட்ட கேள்விச்சபை/*
*அரசாங்க அதிபர்,*
*முல்லைத்தீவு மாவட்டம்.*

(சி.11850)

# சுனாமியின் பின்னரான நிதியளிப்பிற்கு உலக வங்கி பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தவில்லை

## உலக வங்கிப் பிரதிநிதி தெரிவிப்பு

உலக வங்கி சுனாமியின் பின்னரான நிதியளிப்பிற்காக பொதுக் கட்டமைப்பை வலியுறுத்தவில்லை என அந்த வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் தெரிவித்துள்ளார். பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுமானால் அது சுனாமிக்குப் பின்னரான புனர் அமைப்புகளுக்கு உகந்த நிலையையும ஏற்படுத்தும். இந்த நிலையில் உலகவங்கி பொதுக்கட்டமைப்பு அமைக்கப்பட்டால் தான் உதவி வழங்க முடியும். என்பதை இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தவில்லை. இந்தப் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அரசியல் கலந்திருப்பதால் அது பற்றி கருத்துக் கூறவும் தமக்கு விருப்பமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். இதே வேளை சமாதானச் செயலர் ஜயந்த தனபாலவின் கருத்தை தாம் எதிர் வரும் திங்கட்கிழமை நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் எதிர்பார்ப்பதாகவும் அவர்குறிப்பிட்டார். (32)

### சியாம்...

இந்தச் சந்திப்புக்காக எரிக் சூல்ஹெய்ம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இந்தியாவை வந்தடைந்தார்.

சந்திப்பின் பின்னர் அவர் நேற்று முன்தினம் மாலை நோர்வேக்குப் புறப்பட்டுச் சென்றார்.

இந்த சந்திப்பின்போது எரிக்சூல்ஹெய்முடன் இலங்கைக்கான நோர்வே தூதர் ஹான்ஸ் பிரஸ்கரும் பங்கு கொண்டார்.

இதேவேளை பொதுக்கட்டமைப்பில் தமிழ்க் குழுக்களுக்கும் இடம் வழங்கப்படவேண்டும் என எரிக்சூல்ஹெய்மிடம் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் பெயர் குறிப்பிடவிரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக பி.பி.சி. தமிழோசை தெரிவித்துள்ளது.

### அகாசி....

சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பது தொடர்பான விடயங்கள் குறித்தும் புலிகள் இயக்கத் தலைவர்களுடன் அகாஸி ஆராய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வன்னிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிய பின்னரே அகாஸி சனாதிபதியைச் சந்தித்துப் பேசவுள்ளார். ஆனால் சனாதிபதியைச் சந்திப்பதற்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### பொதுக்கட்டமைப்பு...

பொறுத்தவரையில் டோக்கியோ மற்றும் ஒஸ்லோ பிரகடனப்படி நடத்திச் செல்லப்படும் எந்த ஒரு சமாதான நகர்வையும் அது ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (32)

### உதவி....

ஆவணங்களும்,தயாரிக்கப்பட்டுள்ளன. முன்பென்றால் கூடுதலான ஆவணங்கள் உலக வங்கியினால் தயாரிக்கப்படும். ஆனால் இலங்கை அமைச்சுக்களும், நிறுவனங்களும் அவை மட்டத்தில் ஆராய்ச்சிகள் பரிசோதனைகளைச் செய்து இது தொடர்பான ஆவணங்களைத் தேவையான மட்டத்தில் தயாரிக்கமுடியும்.

ஏனெனில் உலகப் பிரதிநிதிகள் வருகின்றனர். அவர்களுக்கு ஏற்ற வகையிலும், ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் தரவுகளை முன் வைக்க வேண்டும் என்றார். இதேவேளை சுனாமி புனரமைப்பு, யுத்தத்தின் பின்னர் இடம்பெற வேண்டிய புனர்வாழ்வு இந்த நூற்றாண்டிற்கான அபிவிருத்தி இலக்குகள் ஆகியவற்றிற்கு முக்கிய கவனம் செலுத்தப்படும் எனவும் நிதியமைச்சர் மேலும கூறியுள்ளார்.

# புறக்கணிப்பு

சிறிலங்கா மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் மறுசீரமைப்பைக் கைவிடும் வரை சிறிலங்கா அமைச்சரவைக் கூட்டங்களைப் புறக்கணிப்பதாக ஜே.வி.பி அறிவித்துள்ளது.

ஆளும் அரசில் ஜே.வி.பி சார்பில் நான்கு அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளனர். நேற்று முன்தினம் புதன்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தை ஜே.வி.பி யின் நான்கு அமைச்சர்களும் புறக்கணித்தனர்.

### சந்திவெளி...

கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட அலுவலகம் வரை சென்றது. ஊர்வலத்தில் கலந்துகொண்டோர் 'இன்று பாடசாலைச் சீருடை நாளை புலிச்சீருடை!' 'இன்று பேனா நாளை துப்பாக்கி!' 'இன்று கல் நாளை குண்டு!' ஆகிய முழக்கங்களை எழுப்பினர்.- போர் நிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்தின் முன் கண்டனக்கூட்டம் நடைபெற்றது. பின் யாழ். மாவட்டக் கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் யாழ். மாவட்டத் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைவர் குனேந்திரன் மற்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் சிவக்குமார் ஆகியோரால் மனு கையளிக்கப்பட்டது. இப்பேரணியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஈழவேந்தன் சிவனேசன், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மதகுருமார்கள் மற்றும் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் எனப் பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர். (33,28,41)

### ஈ.பி.டி.பி...

மறைந்திருந்து கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட நபர்கள் பின்பு துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும் கூறப்படுகிறது. காயமடைந்த நான்கு பொலிஸ் அதிகாரிகளும் இன்று மாலை மட்டக்களப்பு வைத்தியசாலையிலிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் ஏ-ஜயசிங்க (வயது32), ஓ.பி.சுனில் (வயது-38), ஏ.சமரதுங்க (வயது-27), டி.ஜயதிலக்க (வயது-26) ஆகிய நால்வருமே காயமடைந்திருந்தார்கள். சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் இவர்கள் கொழும்பிற்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளார்கள்.

சம்பவத்தின்போது குறிப்பிட்ட இரண்டு வாகனங்களிலும் எட்டு ஈ.பி.டி.பி உறுப்பினர்களும்,எட்டு பொலிஸ் அதிகாரிகளும் (இரண்டுபேர் அமைச்சரவைப் பாதுகாப்புப்பிரிவைச் சேர்ந்தவர்கள்) பயணம் செய்துள்ளார்கள். அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவின் பிரத்தியேக உதவியாளர் அந்தோனிபபிள்ளை ஜெயராஜ், மட்டக்களப்பு மாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பாளர் கே.சிவானந்தராஜா ஆகியோரும் இதில் அடங்குகின்றார்கள்.

குறிப்பிட்ட தாக்குதல் சம்பவத்தில் இந்துசமய விவகார அமைச்சிற்குரிய வாகனமொன்று உட்பட இரண்டு வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

அந்நேரம் இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் வாழைச்சேனை உப அலுவலகம் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் குழுவின் வாகனமொன்றின் முன்பக்கக் கண்ணாடியில் மூன்று துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்தமையால் அந்த வாகனமும் சேதமடைந்துள்ளதென வாழைச்சேனைப் பொலிஸ்தரப்புத் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.


# கண்ணீர் அஞ்சலி

**திருமதி.இராஜேஸ்வரி சந்திரபாலன் (முன்னாள் உதவிக்கல்வி பணிப்பாளர் முள்ளியவளை)**

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவன் சந்திரபாலன் சந்திரரஜனனது அன்புத்தாயாரான திருமதி. இராஜேஸ்வரி சந்திரபாலன் (முல்லைத்தீவு கல்விவலய தமிழ்த் துறை உதவிக்கல்விப்பணிப்பாளர்) அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்ததுடன், அன்னாரின் மறைவினால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக கொள்கின்றோம்.

தமிழ் கலாச்சாரமன்றம்,
நான்காம் வருட பூகோள,
விஞ்ஞானபீட மாணவர்கள்,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

(6131)

# தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் வன்னி

# பொதுக் கூட்ட அழைப்பிதழ்

இடம்: - பண்பாட்டு மண்டபம். கிளிநொச்சி
காலம்: - 15. 05. 2005
நேரம்: - காலை -10. 00 மணி



**நிகழ்ச்சி நிரல்**



- அகவணக்கம்
- தலைவர் உரை
- செயலாளர் அறிக்கை
- பொருளாளர் அறிக்கை
- சபையின் கருத்துரை
- பிற விடயங்கள்
- நன்றியுரை

தங்களைத் தவறாது வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
" நன்றி"

க.மனோகரன்
தலைவர்

க.ஜெகதீஸ்வரன்
செயலாளர்

(6109)

# கண்ணீர் அஞ்சலி

***திருமதி இராஜேஸ்வரி சந்திரபாலன்***

சப்ரகமுவ பல்கலைக்கழக இரண்டாம் வருட பூகோள விஞ்ஞானப் பீட மாணவன் சந்திரபாலன் சந்திரரஜனன் என்பவரது அன்புத் தாயாரான இராஜேஸ்வரி சந்திரபாலன் அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்துள்ளோம். அன்னாரின் துன்பத்தில் துயருறும் அவர் பிள்ளைகளுக்கும், உறவினர்களுக்கும் ஆறுதல் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இரண்டாம் வருட பூகோள
விஞ்ஞான பீட மாணவர்கள்
சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

(6130)

# துயர் பகிர்கின்றோம்

கல்வி உலகின் கலங்கரை விளக்கமே
முல்லை மண்ணில் தமிழ் வளர்த்த தாயே
அம்மா! அகவையால் மூப்புற்ற போதும்
உம் சேவையால் உயர்வுற்று நின்றீர்
என்றும் உம்பணி இருந்திட்ட வேளை...

காலனவன் விரித்த வலை உங்கள் உயிரைக்
கவர்ந்துதான் சென்றதுவோ
தமிழ் மண்ணின் கல்வி ஏணிப்படிகளில் ஒன்றாகி
பல மாணவர் வாழ்வை உயர்த்தியே
வித்தியானந்தாவின் வித்தகியாகி
அரும்பணிதான் ஆற்றினீரே

தமிழ் மொழியில் தாம் கொண்ட பற்றால்
அளப் பெரும் பணி செய்தே- தமிழ்க்
(உதவிக்) கல்விப் பணிப்பாளராய்
மாண்புடன் திகழ்ந்த-இராஜேஸ்வரியே!

உங்கள் பிரிவால் கல்வியுலகமே கலங்குதம்மா
தங்கள் உடல் நின்று உயிர் பிரிந்தாலும்
எம் நெஞ்சத்தினின்று உங்கள் பணி நீங்காதே!
என்றும் நீங்கள் எம் மனதில் நிலைத்திருப்பீர்கள்.

தமிழீழக் கல்விக் கழகம்,
தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை.

(சி.11885)

# கண்ணீர்க் காணிக்கை

வித்தியானந்தாக் கல்லூரியின் ஆசிரியராகவும், பிரதிஅதிபராகவும் நீண்டகாலம் அரும்பணியாற்றி எங்கள் பிரதேசத்தில் அறிவுப்பயிர் வளர்த்த வரும், எமது முல்லைக்கல்வி நிலையத்தில் தமிழ் ஆசிரியராகவும் கடந்த 9வருடங்களாக கடமையாற்றிய திருமதி இ.சந்திரபாலன் அவர்கள் 11.05.2005 இல் இறைபதமடைந்தார். அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாம் பங்கு கொள்வதுடன். அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகி,ஆசிரியர்கள்,
மாணவர்கள்
முல்லைக்கல்வி நிலையம்
தண்ணீரூற்று.

(6152)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.